# மனித சொரூபங்கள்

**(பன்னிரு சிறு கதைகள்)**

★

## கோகிலா மகேந்திரன்

★

சிவன் கல்வி நிலைய வெளியீடு

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 1982 |
| உரிமை | : | திரு. கி. மகேந்திரராஜா |
| விலை | : | ரூபா 10.00 |
| அச்சுப்பதிப்பு | : | குகன் அச்சகம், தெல்லிப்பழை |


**MANITHA SOROOBANGAL**
*A collection of short stories*

By :

Kohila Mahendiran
*Mahajana College,*
*Tellippalai.*

# கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை வாழ்த்துகிறார்

வண்ணவண்ணச் செந்தமிழில் வகைவகையாய்க் கட்டுரைகள்
எண்ணஎண்ணத் தித்திக்கும் இனியசுவைச் சொற்பெருக்கு
உண்மைநிலைத் தெளிவுதரும் உயர்வான உரைப்பாங்கு
திண்மைநிலை காட்டுகின்ற திடமான நெஞ்சுறுதி
இன்னபல பண்புகளால் எனைவியப்பில் ஆழ்த்திநின்று
சின்ன வயதுமுதல் சீராய் வளர்த்தஒரு
கோகிலா நாமத்திற் குலவு திருமடந்தை
ஓகை மிகுசிவசுப் பிரமணியம் தந்தமகள்
உத்தமநல் லாசிரிய உயர்பணியைத் தாங்கிநின்று
மெத்துபல பண்புகளின் விளைநிலமாய் வாழுகையில்
பாரிற் பயின்றுவரும் பல்வகைய சமூகத்துச்
சீர்கேட் டினையெல்லாம் திருத்திடுதல் வேண்டுமென்ற
உந்துதலி னாற்பிறந்த உத்வேகத் தாலின்று
செந்தமிழில் நல்ல சிறுகதைகள் தந்துவந்தாள்
மனித சொரூபங்கள் எனும்தலைப்பில் ஆறிரண்டு
புனிதச் சிறுகதைகள் புனைந்தொருநூல் வடிவாக்கி
இன்றுலகிற் கீந்தாள் இந்நூலைக் கற்பவர்கள்
என்றும் பலநலன்கள் எய்திடுவார் என்றிட்டேன்.
ஆன்ற நலன்களெல்லாம் அமைந்திருக்கும் உள்ளத்தில்
தோன்றியவை என்றதனால் துணிந்துநான் கூறுகின்றேன்
இத்தகைய நற்கதைகள் இன்னும் தருகஎன
அத்திருவைக் கேட்டுநின்றே ஆசிபல சொல்கின்றேன்
குவலயத்து மகேந்திரனின் குலவுதுணை யாய்நின்று
சுவைமிகுந்த நற்கதைகள் தொடர்ந்துதரும் நங்காய் நீ
சிறுகதையே யன்றிச் சீர்நவீன மும்நல்கி
உறுதுணையாய்ச் செந்தமிழுக் குய்ந்நெறியைக் காட்டுகெனப்
பற்றுமிக வாழ்த்துகிறேன் பரமன் திருவருளால்
எற்றைக்கும் நீவிரும்பும் இன்பமெய்தி வாழியவே.

# மகாஜனக் கல்லூரி அதிபர் கலைமாணி பொன். சோமசுந்தரம் வாழ்த்துகிறார்

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியிலே பல்வேறு காலகட்டங்களில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலிருந்து பரிமளித்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இன்று சிறுகதை இலக்கியத் துறையிலே தனக்கென ஒரு தனியிடம் பெற்றுத் திகழ்கிறார் எமது பழைய மாணவியும் தற்போதைய விஞ்ஞான ஆசிரியையுமான திருமதி கோகிலா மகேந்திரன்.

வக்கரித்து உளுத்துப்போன சமுதாயத்தை ஊடுருவிப் பார்த்து, அதனைப் பல்வேறு கோணங்களில் - பல்வேறு களங்களில் கண்டு - உள்ளுருகி, யதார்த்தமாக அவற்றை எழுதுவதில் வல்லவராகிய இவர் இன்று தமது பன்னிரு சிறுகதைகள் அடங்கிய தொகுதியை வெளியிடுகிறார்.

சாதாரணமாக அன்றாட வாழ்க்கையிலே நாம் காணும் போலிகள், வேஷதாரிகள், புகழேந்திகள், வக்கிர புத்தியுடையோர், குரூர ரசனையாளர், பழம் பெருமை பேசும் பச்சோந்திகள், 'நாளைய உலகின் நாயகர்' நாமே என்று வீம்புபேசிப் பல்லோரின் வாழ்க்கையைப் பாழடிக்கும் வீணர்கள், இன்னோரன்ன பேர்வழிகளை இவர் கதைகளில் நாம் கண்டு வியக்கிறோம்.

நீரோட்டமான சரள நடையில் சீர்திருத்தக் கருத்துக்களை அளவோடு அள்ளிவரும் இவர் கதைகள் வாசிப்போரைச் சிந்திக்க வைக்கும் பான்மை நிறைந்தனவாக இருப்பது ஒரு விசேடம்.

இன்றைய சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் கயமைகள், பொய்மைகள், குறைகள் ஆகியவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கோடு தமது எழுத்தாற்றலை உபயோகிக்கும் இவ்விளம் எழுத்தாளரின் இலக்கியப் பணி தொடர வேண்டும் என்று வாழ்த்தி அவர் சேவையை வரவேற்கிறேன்.

## **பண்டிதர் க.சச்சிதானந்தன்** B.A. (Hons) Lond.
Dip-in-Ed. (Lond), M. Phil (Lond), F. R.A.S. (Lond)
## **விமர்சிக்கிறார்**

சிறுகதை என்பது எழுத்தாளர்கள் விரும்பிக் கைக் கொள்ளப்படும் இலக்கியத் துறைகளில் ஒன்று. இந்திய நாட்டிலே கதைச் சமுத்திரமென்று ஒரு சிறுகதைச் சமுத்திரமிருக்கிறது. சமுத்திரமென்பது கதைகளின் தொகையைக் காட்ட எழுந்த சொல்லாகும். வேதாளம் சொன்ன கதை, கிளி சொன்ன கதை, விக்கிரமாதித்தன் கதை, பஞ்ச தந்திரக் கதை, இதோபதேசக் கதை என்று இப்படியாக இந்திய நாட்டிலே சிறு கதைகளுக்குக் குறைவேயில்லை. கடந்த ஐம்பது வருடங்களாக இந்திய மண்ணிலும் இலங்கையிலும் தோன்றிய கதைகளின் தொகையோ பல்லாயிரத்திற்கும் அதிகமாகும். இன்னும் சிறுகதையை வாசிக்கும் ஆர்வம் குன்றவில்லை. சிறுகதைத் துறையின் நுண் யுக்திகள் முன்னேறிக்கொண்டே போகின்றன.

சிறுகதை என்றால் என்ன? இதற்கு விடை கூறுவது மிகவும் கடினம். ஆனால் ஓர் எழுத்தாளர் அந்த வரைவிலக்கணத்தைத் தெரியாமலே மிகச் சிறந்த கதையை எழுதிவிடலாம். ஒரு விமர்சகனுக்கும் நல்ல சிறுகதையைப் பிரித்தறிவதில் அவ்வளவு சங்கடம் இருப்பதில்லை. அது ஏன் ஒரு நல்ல கதை என்று எழுதுவதுதான் மிகச் சங்கடமானது.

சிறுகதை எழுத்தாளன் எதைச் சொல்ல விரும்புகிறான்? சொல்ல விரும்புவதைச் சரியாகச் சொல்வதற்கு என்ன நுண்முறையைக் கையாளுகின்றான்? இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றிலிருந்து மற்றது பிரியாதவை. ஒரு பொருளின் இரு நோக்குகளேயன்றி வேறல்ல.

இக் காலச் சிறுகதை எழுத்தாளர்கள் சமூகச் சீர்கேடுகளைத் தமது சிறுகதைகளின் உட்பொருளாக்கிக் கொண்டார்கள். அன்றியும் மண்வாசனை உடையனவாக இருக்க வேண்டுமென்பதிலும் அக்கறை

உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அதனால் சிறுகதைகள் தனித்துவமும் சிறப்புச் சமூகத் தன்மையும் பெற்றுப் பிராந்தியச் சிறு கதைகளாக மாறிவிடுகின்றன. பிராந்தியச் சிறப்புத்தன்மை பெறப் பிராந்தியச் சிறப்பு மொழிநடையும் சொற்களும் பிரயோகிக்கப்படு கின்றன.

கோகிலா மகேந்திரன் இன்றைய சிறுகதை எழுத்தாளரரின் போக்கிலே உருவானவர். சமூகச் சீர்கேடுகளைத் தமது சிறுகதைக்கு உட்பொருளாக்கிக் கொண்டார். தங்கையைப் பார்க்கவந்து தமக்கையைக் காதலிக்கும் இலட்சிய இரசிகர், கல்வியின்றி இளமையின் சுதந்திரமுமின்றி அடுப்பங்கரைகளில் பிழியப்படும் வேலைக்காரக் குழந்தைகள், பொருத்தம் பார்க்கும் குருட்டு நம்பிக்கையுடையவர்கள், பொன்னாடை போர்த்தப்பட்டபின் மழையில் நனைந்துவரும் உபாத்தியாயரும் மனைவியும், பாடசாலையைப் பாழாக்கும் ஆசிரிய மாணவ குழாங்கள், எல்லைப் பிரச்சினையால் பகையேறும் உறவினர், கருப்பமுற்றும் கடும் உழைப்பால் வாடும் ஏழைப் பெண்கள், பிச்சைக்காரக் குருடன், செத்த வீடுகளில் அனுதாபமற்று நடமாடிச் சண்டையிடும் சாதிக்காரர்கள் இவர்களெல்லாம் கோகிலாவின் கண்ணில் பட்டுக் கதைக்குக் கருவாகிச் சொல்லில் வார்க்கப்பட்டு உயிர்பெற்ற ஓவியங்களாக நடமாடுகிறார்கள்.

எந்த நிகழ்ச்சியை மையமாக எடுத்துக்கொண்டால் தாம் படைக்கும் பாத்திரங்கள் தாம் கொடுக்கும் உருவத்தோடு உயிர் பெறுவார்கள் என்று உணர்வது கோகிலாவுக்குக் கைவந்த கலை. உதாரணமாக, சமுதாயத்தின் பல சீர்கேடு உடைய பாத்திரங்களை உருவாக்க ஒரு செத்தவீட்டை மைய நிகழ்ச்சியாகக் கொண்டுள்ளார். அதிலே, சேலையைப் பற்றிப் பேசும் பெண் வர்க்கம், சாதிக்காரர், நாட்டாண்மைக்காரர், சாத்திரியார், வைத்தியர்மார் ஆகியோர் யாவரையும் ஒருங்கே உயிரூட்டும் கைவண்ணம் அற்புதம்! வெங்காயம் நடும் மாங்கன்றை எங்கேயோ பார்த்தது போன்ற உணர்வு உண்டாகிறது. இரு முரண்பட்ட சமுதாய ஏற்றத் தாழ்வை ஒப்பிடு வதற்குப் பிரசவ நிகழ்ச்சியை மையமாகக் கொண்டமை நுண்டிறனின் இலாவகத்தை எட்டிப் பிடிக்கிறது. அதிலே சமுதாயத்தின் எதிர்த் துருவங்களைக் காட்டி ஏற்றத் தாழ்வைச் சித்திரிப்பது ஒன்று. இறைவனின் புரியாத புதிர் ஒன்றை எடுத்துக் காட்டுவது இன்னொன்று. சமத்துவ உணவு, உயிர்ச்சத்து, உலோகச் சத்து என்று ஊட்டமுறை தெரிந்து உண்பவர்கள் சலரோகத்தால் வாடுவதைக் காண்கிறோம். ஆனால் புளித்த கள்ளும், ஒருநேரச் சோறும் உண்பவர்கள் புயபல ஆண் அழகர்களாக நோயின்றி வாழ்வதையும் காண்கிறோம். பொக்கிளிப்பான் வந்தால் வைத்தியமின்றி ஒவ்வொரு நாளும் தலை

முழுகி வெட்டவெளிக் கொட்டிலிலே உறங்குவோருக்கு 'நிமோனியா' வராமல் காக்கும் அற்புத சக்தி எங்கே உள்ளது? இது ஒரு புரியாத தத்துவம். இந்தத் தத்துவத்தை 'மணவாளன் வந்த கோலம்' என்ற என் கவிதையில் கருப்பொருளாகக் கொண்டுள்ளேன். அதே தத்துவத்தை பிரசவ நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு மங்கையாகவும், மாங்கன்றாகவும் நம்முடன் நடமாட வைக்கிறார் கோகிலா மகேந்திரன். ஒவ்வொரு கதையும் இவ்வாறு ஒரு கேந்திரமான மைய நிகழ்ச்சி கொண்டு சுழல்கிறது. இது அவர் திறமைகளில் ஒன்று.

இவர் படைக்கும் கதைகளுக்கு யாழ்ப்பாணச் சமுதாயம் பின்னணியாக அமையினும், சமுதாயச் சீர்கேடுகள், குருட்டு நம்பிக்கைகள், எல்லைத் தகராறுகள் இலங்கை முழுமைக்கும் - ஏன் இந்திய நாட்டுக்குமே - பொதுமையாக அமைகின்றன. பாத்திரங்கள் யாழ்ப்பாண உயிரோவியங்களாயினும் பிராந்திய சிறு வட்டத்தைக் கடந்து பொதுமையைப் பெறுகின்றன. யாழ்ப்பாண மண்வாசனை வீசுகிறது. ஆனால் கருப்பொருளில் பொதுச் சமுதாயக் கருப்பொருள் இழையோடுகின்றது.

பாத்திரங்களை நம்முன் உயிரோடு நடமாடச் செய்வதற்கு வெளிப்புற வருணனைகளில் அதிகம் ஈடுபடாது அவர்களின் மனப்பாங்கை வருணிப்பதற்கே அதிக கவனம் செலுத்தியுள்ளார். ஆஸ்பத்திரியின் வெளிப்புற வருணனையில் அதிகம் ஈடுபடாது சம்பாஷணைகளின் சில சொற்களால் தாதியர்களினதும், ஆஸ்பத்திரி யின் மனேஜர்களினதும் மனப்பாங்கை அழகாக வெளிப்படுத்துகிறார். ஒலிக்காத ஓலத்தில், ஒப்பனை செய்யும் கலையையும் ஆண்களைக் கவரும் சம்பாஷணைக் கலையையும் அறியாத ஒரு பேதைப் பெண்ணின் மனப்பாங்கைச் சித்திரிக்கப் பல சம்பாஷணைகளையும் சம்பவங்களையும் அழகாக அடுக்குகிறார்.

"என்னைச் சுற்றியுள்ள எல்லாருமே பாஷனைப் பற்றியும் அடுத்தவனைப் பற்றியும் பேசும்போது... என்னுடன் என்னைப்போல எனக்கு ஆர்வமுள்ள கலை, கலாசாரம், நாவல், இலக்கியம், புத்தகங்கள், இலக்கிய கர்த்தாக்கள் பற்றிக் கதைப்பதற்கு ஒருவர் வரப்போகிறார்...".

அந்தப் பேதைப் பெண்ணின் மனப்பாங்கை எடுத்துக்காட்டவே இவ்வளவு வருணனையும் வந்தது. அது பொருத்தமானதே. அத்துடன் இந்த வருணனையை ஒப்பிடுங்கள்.

“அக்கா வெளியிலை வாவன் என்று குரல் கொடுக்கிறேன். அவள் நெளிந்து வளைந்து மிகவும் சங்கடப்பட்டு வெளியே வருவதைப் பார்த்து...”

நெளிந்து வளைந்து என்ற வருணனை எதற்காக என்று வாசகர்கள் உணருகிறார்கள். இப்போதே அந்த இலட்சியப் பெண்ணைப் பார்த்து “அடி பாவமே” என்று சொல்ல நமக்குத் தோன்றவில்லையா?

காவி யோகய லோஎனும் கண்ணிணைந்
தேவி யோமலர் மங்கையிற் செவ்வியாள்
பாவி யேனையும் பார்க்குங் கொலோஎன
ஆவி தேயினும் ஆசையின் தேய்விலாள்

என்று கம்பர் சூர்ப்பனகையின் மனப்பாங்கைக் கொடுத்தார். அழகிய சீதாதேவி பக்கலிருக்க, பாவியேனையும் பார்க்குங்கொலோ என்று தன்னையும் சீதையையும் ஒப்பிட்டு ஏங்குகிறாள் அவள். இங்கும் வளைந்து நெளிந்து தலையைக் குனிந்து கொண்டு புன்முறுவல் பூக்கும் அக்காவுக்கும் காதல் சம்பாஷணைக்கு நூலகத்தையே கொண்டுவரும் தங்கைக்கும் ஒப்பீடு நடக்கிறது எம்மிடம். இதுதான் ஒலிக்காத ஓலம்.

கோகிலா புறவருணனையைக் காட்டிலும் மனப்பாங்கு வருணனைக்கே அதிகம் முக்கியம் கொடுக்கிறார் என்பதற்குக் கதைகள் எல்லாவற்றிலும் வருணனைகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் உள்ளன. மேலுள்ளது ஒரு உதாரணம்.

பிராந்தியப் பேச்சுமொழியை அப்படியே எழுத்தெழுத்தாக வடித்தால் கதாபாத்திரங்கள் உயிர்பெறும் என்பது சிறுகதை எழுத்தாளர்களிடையே ஒரு நம்பிக்கை போலும். ஆனால் கோகிலா மகேந்திரன் எந்த இடத்தில் பேச்சுமொழி அப்படியே வந்தால் பாத்திரம் உயிர்பெறும், எந்த இடத்தில் அது வேண்டியதில்லை என்பதை அழகாக வேறுபடுத்துகிறார். அதனால்தான் அவர் கதைகள் தமிழகம் முழுவதும் இரசிக்கக்கூடியதாக அமைகின்றன.

சில ஆங்கிலப் பதங்களுக்கு அழகான தமிழ்ப்பதங்களை உபயோகிக்கிறார். ஆனாலும் பாத்திரங்கள் உயிர் பெறுகின்றன. இது அவர் தமிழ்நடையின் லாவண்யம். நடத்துநர், மார்பு காட்டி என்பவற்றை இத்தகைய சொல்லாட்சியின் உதாரணங்களாகக் காட்டலாம்.

இவருக்கு ஒழுகிச் செல்லும் தமிழ்நடை கைவந்தது என்பது விளங்குகிறது. ஒரு கதாசிரியரைப் பற்றிக் கதைகளில் இருந்தே

கூறவேண்டும். இவர் கதைகள் ஆழமான கருத்துடையவை. நுட்பமான நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டவை. இவையிரண்டும் இவருடைய விவேகத்தின் மேதைத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. வெறுமனே முற்போக்கு எண்ணங்களை உட்பொருளாக மட்டும் கொண்டால் கதைகள் இலக்கியமாகி விடா. அவை அழகான முருகுணர்வு தரும் அமைப்பிலும் வடிக்கப்பட வேண்டும். இதற்குக் கோகிலா மகேந்திரனின் கதைகள் நல்ல எடுத்துக் காட்டாகும். நல்ல அமைப்பில் வார்ப்பதற்கு உயர்ந்த விவேகம் வேண்டும் போலும்!

கோகிலா மகேந்திரன் உயர்ந்த பொது விவேகமும், பல பாடங்களில் சிறப்பாற்றலும் பெற்ற ஓர் அபூர்வ பிறவி. அதனால்தான் இக்கதைகள் இவ்வளவு ஆழமானவையாய் இருக்கின்றன போலும். உண்மையில் அவரது கதாபாத்திரங்கள் இறவா வரம் பெற்றுவிட்டன.

கோகிலாவும், மகேந்திரனும் எனது அருமை மாணவர்கள். அவர்களின் அருமையையும், பெருமையையும் சிறுகதைத் தொகுதிக்கு விமர்சனவுரை எழுதும்போது ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு நடுநிலையோடு நின்றுதான் இதனை எழுதுகிறேன். கோகிலாவின் ஆற்றல்கள் பேச விரியும். எழுத நிறையும். ஆனால், அவர் இலக்கியத் துறைக்கு அடி எடுத்து வைத்தது இலக்கியம் செய்த தவமே. அவர் குரல் மேலும் ஒலிக்க வேண்டும்.

போகும் சமுதாயப் புன்மைகளைக் கண்டுநிதம்
வேகும் மனத்தாய் விவேகத் திருவிழியால்
ஆகும் கதைகட் கழகூட்டிப் பைந்தமிழால்
கோகிலமே உனதினிய குரலெடுத்துக் கூவுதியே.

☆ ☆ ☆

# “விம்” அவர்கள் சுவைக்கிறார்

இளம் எழுத்தாளர் கோகிலா மகேந்திரனின் ‘மனித சொரூபங்கள்’ சிறுகதைத் தொகுதியைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. படித்தேன்; சுவைத்தேன். பன்னிரு கதைகளைக் கொண்ட இந்நூல் ஆசிரியரின் முதல் படைப்பு. ஆசிரியர் பத்திரிகை உலகிலும் வானொலியிலும் எடுத்துப் பேசப்படும் அளவிற்கு முன்னேறியுள்ள எழுத்தாளராக விளங்குகிறார் என்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரது இந்நூல் அவர் பெற்றிருக்கும் பெருமையை விளக்குவதற்குச் சான்றாக அமைந்துள்ளது. இந்நூலின் கதை ஒவ்வொன்றும் மற்றைச் சிறுகதை ஆசிரியர் தொடாத புதுமைக் கருத்துக்களாய், எதிர்பாராத முடிவுகளைப் பெற்றுத் திகழ்வதைக் காண்கிறேன். தலையங்கங்களும் புதுமையாக அமைந்துள்ளன. ‘ஒலிக்காத ஓலம்’, ‘ஒரு பிணத்தின் தரிசனம்’, ‘ஒரு ஏக்கம் மடிகிறது’, ‘மனித சொரூபங்கள்’, ‘குரூர ரசனைகள்’ என்ற வகையில் அமைந்து தாம் கொண்டிருக்கும் கதைக்கருவின் விளக்கத்தைச் சிந்திக்க வைத்து அமைந்துள்ளன.

இந்நூலின் கதைகள் காதல் விவகாரம் எடுத்துப் பேசப்படாத கதைகளாக இருக்கின்றன. அவ்விவகாரங்களை எழுதத் தூண்டும் மனப்பாங்கு ஆசிரியருக்கு இல்லையோ என்று சொல்லும் அளவிற்குக் காதலைத் தவிர்ந்த பல்வேறு பகுதிகளில் சமுதாயச் சீர்கேடுகளை இவர் ஆராய்ந்துள்ளார். எனினும் ஒலிக்காத ஓலம் மறைமுகமான மர்மமான ஒருதலைக் காதலை விபரிக்கின்றது. அக் கதையில் ஓர் ஆசிரியர் எழுதும் கதைகளைச் சுவைத்த ஒருவர் ஆசிரியருக்கு அடிக்கடி தனது இரசனையைக் காட்டிக் கடிதங்கள் எழுதுவதனால், அந்தச் சுவைஞரிடத்தே ஆசிரியருக்குக் காதல் ஏற்படுகிறது. சுவைஞர் ஆசிரியரைக் காண வரும்போது அவரை வீட்டில் உபசரித்து, உரையாடலில் தமது காதலை வெளிப்படுத்துகிறார். ஆசிரியரின் சகோதரி இந்த இரசிகரை உபசரிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறார். உபசாரம் பெற்றுச் சென்ற இரசிகர் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுகிறார். தமது காதலை அவர் நிச்சயமாக வெளிப்படுத்தியிருப்பார்

என்று கடிதத்தைப் பிரித்த ஆசிரியர் ஏமாற்றமடைகிறார். பிறன் ஒருவனைக் காதலிக்கும் சகோதரியைத் தாம் மணக்க முடியுமா என்று கேட்டு அந்த இரசிகர் எழுதியிருக்கும் கடிதத்தைப் பார்த்து ஏமாற்றமடையும் ஆசிரியர் நிலை ஒலிக்காத ஓலமாக விளக்கப்படுகிறது. இத் தலையங்கம் ஆசிரியர் புனைந்த கதையோடு மிகவும் பொருத்தமாக அமைந்து சிறப்பதைக் கண்டு சுவைத்தேன்.

ஒரு ஏக்கம் மடிகிறது என்ற கதையில் பாடசாலைக்குச் செல்வதற்கு நிறைந்த விருப்பம் கொண்டிருந்த ஒரு சிறுமி பெற்றோருடைய வறுமையால் பிறரிடத்தே வேலைக்காரியாக அனுப்பப் படுகிறாள். அதனால் பாடசாலைக்குச் செல்வதற்கென எழுந்த ஊக்கம் தடைப்பட்டு அ∴து அவளுக்கு ஏக்கமாக மாறுகிறது. தன்னொத்த சிறுமிகள் பாடசாலைக்குப் புறப்பட்டுச் செல்கையில் பேசும் பேச்சுக்கள் 'வசு' வண்டிகளில் ஏறி அவர்கள் அடிக்கும் கும்மாளம் ஆகியவற்றைப் பார்ப்பதில் தனது ஏக்கத்தைச் சிறிது தணித்துக்கொள்ளும் அச் சிறுமி எசமானியால் தண்டிக்கப்படுகிறாள். இந்நிலையில் அவளின் ஏக்கம் அடுக்களையோடு மடிந்து போவதை ஆசிரியர் சித்திரிக்கிறார்.

முரண்பாடுகளின் அறுவடை என்ற கதையில் கூலித்தொழில் செய்யும் ஓர் ஏழைப் பெண்ணையும், நிறைந்த வசதியுள்ள தனவந்தர் வீட்டுப் பெண்ணையும் அவ்விருவருடைய கர்ப்பகால நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டி ஒப்பீடு செய்து படிக்கும் இரசிகர்களுடைய மனதிலே உலகத்து முரண்பாடுகளை விளக்குவதன் மூலம் வெற்றி காண்கிறார் ஆசிரியர்.

குரூர ரசனைகள் என்ற தலைப்பைப் படிக்கும்போது அதன் பொருள் விளங்கச் சிறிது நேரம் செல்கின்றது. இத் தலையங்கம், உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கத் தூண்டுகிறது. இலக்கிய சேவையைப் பாராட்டி ஓர் ஆசிரியருக்கு ஒரு மன்றம் விழா எடுக்கின்றது. வயது முதிர்ந்த அவ்வாசிரியரும் மனைவியும் 'வசு' வண்டியில் ஏறி வருகிறார்கள். பலரின் பாராட்டுக்களை ஆசிரியர் பெறுகிறார். விழா முடிகின்றது. ஆசிரியரும் மனைவியும் வீட்டிற்குப் போக 'வசு' வண்டியைக் காத்து நிற்கிறார்கள். மழை பெய்கிறது. மழையில நனையவேண்டிய நிலையில் நிற்கும் அவர்களைப் பார்த்தபடி பாராட்ட வந்தவர்கள் தமது மோட்டாரில் ஏறிச் செல்கின்றனர். அவர்களின் ரசனைகள் குரூர ரசனைகளாகச் சித்திரிக்கப்படுகின்றன.

எல்லைகள் என்ற கதை மிக அற்புதமாகச் சிருட்டிக்கப்படு கிறது. கிராமங்களில் நிகழும் காணி எல்லைப் பிரச்சினைகளால் வரும் தகராறுகள் மிக நெருங்கிய உறவினரிடையே சச்சரவுகளை ஆக்கி,

நீதிமன்றம் வரை போகக் கூடிய அளவிற்கு அவர்களின் உறவைப் பிரிக்கும் எல்லையாக வளர்ந்துவிடும் நிலையை மிகத் தெளிவாக மண்வாசனை கலந்த நடையில் எழுதி மனதில் பதியவைக்கிறார்.

இவ்வாறு பன்னிரு கதைகளிலும், சமுதாய வாழ்வின் பல்வேறு துறைகளையும் எடுத்துக்காட்டிச் சமுதாயம் திருந்த வேண்டும் என்ற நோக்கத்தை உணர்த்தியிருக்கிறார். இவற்றை யாவரும் படிக்க வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

தெளிவான நடையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்து மண்வாசனை மிகுதியும் காணப்படுகிறது. வேண்டிய இடத்தில் ஆங்கிலச் சொற்களும் புதிய கலைச் சொற்களும் புகுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் இளம் ஆசிரியரின் துணிகர மான முயற்சியை நாம் கண்டு வியக்கிறோம். இந்நூல் சமுதாயத்திற்கோர் சிறந்த இலக்கியமாக விளங்குகிறது என்பதை யான் மனநிறைவோடு கூறிப் பாராட்டுகிறேன். ஆசிரியரின் எண்ணங்கள் இன்னும் பல நூல்களாக வெளிவர வேண்டும் என்பதை யான் பெரிதும் விழைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

☆ ☆ ☆

# என்னுரை

கட்டிளமைப் பருவம் பல தகைப்புகள் நிறைந்தது என்று உளவியல் அறிஞர்கள் சொல்வார்கள். செயற்பாடுகளும் உளக்கிளர்ச்சிகளும் மாத்திரமல்ல, சிந்தனைகளும் கொந்தளிக்கும் காலம் அது. அப் பருவத்தில் நான் இருந்தபோது, “ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும்?”, “மனம் அமைதியாக இருக்க என்ன செய்ய வேண்டும்?”, “வெற்றிகரமான வாழ்க்கை என்பது என்ன?” என்பது போன்ற பல கேள்விகள் என் அந்தரங்கத்தில் எழுந்து பீறிடும். என்னை ஒத்த என் சிநேகிதிகளிடமும் இது போன்ற சிந்தனைகள் இருப்பதை நாம் உரையாடும்போது உணர்ந்துகொண்டேன்.

இத்தகைய பல கேள்விகளின் பதிலைக் காணவேண்டி இரகசியமாகவும் பரகசியமாகவும் ஏராளமான புத்தகங்கள் வாசிப்போம். விஞ்ஞானப் புத்தகங்கள் முதல் துப்பறியும் நாவல்கள் வரை எதுவும் தள்ளுபடி இல்லை. எல்லாம் வாசித்து ஓய்ந்து சிந்தனையில் ஒரு தெளிவும் இன்றி இருந்த நேரத்தில் கையில் தட்டுப்பட்டது டாக்டர் மு.வ. வின் நாவல்கள். அவரது எழுத்தில் காணப்பட்ட ஏதோ ஒன்று எமது வாழ்க்கையிலும் சிந்தனையிலும் பெரியதோர் மாற்றத்தை ஏற் படுத்தியது. மற்றவர்களைவிட உயரத்தில் பறக்கவேண்டும் என்ற சிந்தனை எளிமை விரும்பும் சிந்தனையாக மாறியதே அந்தப் பாரிய மாற்றம்.

ஓர் எழுத்தாளன் ஒரு சமுதாயத்தில் எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வரக்கூடியவன் என்பதை அன்று நான் சொந்த அனுபவத்தில் தெரிந்துகொண்டேன். எத்தனையோ மைல்களுக்கப்பால் இருந்துகொண்டு ஒரு நாளும் காணாமல், ஒரு நாளும் கதைக்காமல் என்னிடம் ஓர் ஆளுமை மாற்றத்தை ஏற்படுத்தினார் மு.வ. அவர்கள். அப்போது முதலே சில நல்ல கருத்துக்களை எழுதவேண்டும் என்றும் அது யாரோ ஒரு சிலரிடத்திலாவது ஏதோ சிறு மாற்றத்தையாவது ஏற்படுத்தும் என்றும் திடமான ஒரு நம்பிக்கை என்னிடம் மூண்டது. முக்கியமாக மாணவரிடத்தில், வளையும் இயல்பு கொண்ட பருவத்தில் எந்தக் கருத்தும் ஒரு பாரிய மாறுதலை ஏற்படுத்தும். குறைந்த பட்சம் ஒரு மனித உயிரிலாவது ஏற்படக்கூடிய இந்த மாற்றம் என் வெற்றியாகப் பரிணமிக்கும்.

எனது மனம் அதையற்றிருந்தபோது எழுதினேன். எனக்குக் கோபம் வந்தபோது எழுதினேன். அழுகை வந்தபோதும் எழுதினேன். அநீதி கண்டபோதும் எழுதினேன். அந்த அந்தச் சூழ்நிலைகளில் எனது உணர்ச்சிகள் சொல்லில் வந்திருந்தால் பெரிய போராட்டங்கள் வெடித்திருக்கலாம். அவை அமைதியாக எழுத்துருபம் பெற்றன. எழுதி முடிய எனது அந்தரங்கம் சாந்தி பெற்றுவிடும். ஆனாலும் இரண்டாம் முறை அதே கதையை வாசிக்கும்போது எனக்கு அதில் ஒரு குறை தோன்றும். அடுத்த கதையில் அதனை நிறைவு செய்வேன். பின்னர் வேறொரு குறை தோன்றும். இப்படியே... ஒரு நிழல் போராட்டந்தான் நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன். இன்னுந்தான் எனக்குத் திருப்தி தரும் கதையை நான் எழுதவில்லை. ஆகவேதான் இந்தப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பயணத்தின் சில படிகள் உங்கள் முன் வைக்கப்படுகின்றன. என் பாதையில் என்னைக் கைதூக்கி விட்ட பலரைப் பின்னால் ஓரிடத்தில் குறித்திருக்கிறேன். அவர்கள் என் நினைவை விட்டு அகலமாட்டார்கள்.

இன்னும் ஒன்று. பொழுதுபோகாமல் கதிரையில் சாய்ந்து கிடக்கும் கூட்டத்தினருக்கு இது புத்தகமல்ல. மனிதர்களின் சில மென்மையான உணர்வுகளைக் கீறிக் குதறி எழுத எனக்குத் தெரியவில்லை. என்னால் செய்ய முடியாதவற்றை - அல்லது நான் செய்ய விரும்பாததை வேறு சில போலிகளுக்காக எழுதிக் குவிக்கவும் என்னால் முடியவில்லை. வாசிப்பதைச் சிந்திக்க விரும்புபவர்களும், ஆளுமையில் சிறு மாற்றங்களையாவது ஏற்படுத்திக்கொள்ள விரும்புபவர்களும் என்னுடன் சில நிமிடங்களைக் கழிக்க வாருங்கள்.

மகாஜனாக் கல்லூரி **கோகிலா மகேந்திரன்**
தெல்லிப்பழை
09-12-1982

## நன்றிக்குரியவர்கள்


| | | |
|---|---|---|
| ஈழநாடு ஆசிரியர் | - | திரு. பி.எஸ். பெருமாள் |
| மல்லிகை ஆசிரியர் | - | திரு. டொமினிக் ஜீவா |
| சுடர் ஆசிரியர் | - | திரு. 'அரி' |
| சங்கமம் ஆசிரியர் | - | திரு. க.நாகேஸ்வரன் |
| | - | திரு. சு.சரவணபவன் |
| எழில் ஆசிரியர் | - | திரு. ம.பத்மநாதன் |
| ஓவியர் | - | திரு. செ.தியாகராஜா |
| கவிஞர்கள் | - | திரு. செ.கதிரேசர்பிள்ளை |
| | - | திரு. க.சச்சிதானந்தன் |
| 'மகாஜனா' அதிபர் | - | திரு. பொன். சோமசுந்தரம் |
| ஆசிரியர் | - | திரு. ச.விநாயகரத்தினம் |
| | | தெல்லிப்பழை குகன் அச்சகத்தினர் |


☆ ☆ ☆

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | ஒலிக்காத ஓலம் | 01 |
| 02. | ஒரு ஏக்கம் மடிகிறது | 07 |
| 03. | பொருத்தங்கள் | 12 |
| 04. | குரூர ரசனைகள் | 17 |
| 05. | எல்லைகள் | 21 |
| 06. | உறுத்தல் வருடப்படுகிறது | 27 |
| 07. | நாளைய உலகின் நாயகர்கள் | 31 |
| 08. | ஒரு பிணத்தின் தரிசனம் | 37 |
| 09. | முரண்பாடுகளின் அறுவடை | 42 |
| 10. | அவன் ஏன் வாழ்கிறான்? | 47 |
| 11. | கலைகின்ற வேஷங்கள் | 52 |
| 12. | மனித சொரூபங்கள் | 57 |

# 1

# ஒலிக்காத ஓலம்

என்னால் பாஷனைப் பற்றியோ அடுத்தவர்களைப் பற்றியோ அல்லது அரசியலைப் பற்றியோ ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசமுடியாது என்ற உண்மையில் நான் ஒரு சாதாரண மனிதனில் இருந்து ரொம்ப தூரம் விலகிப்போய் விட்டது எனக்கே நன்றாகத் தெரிந்த போதிலும் எனக்கு நானே ஒரு சுயகட்டுப்பாடு வைத்துக்கொண்டு இப்படி வாழ்வதில்தான் ஒரு இனிமை இழைவதாக எனக்குத் தோன்றுகிறது.

சென்ற வாரம் தினமலர் பத்திரிகையின் வார ஏட்டில் வெளியாகியிருந்த என் 'பார்க்காத பார்வைகள்' சிறு கதைக்கு வந்து குவிந்திருந்த விமர்சனக் கடிதங்களை மேலோட்டமாகத் தட்டிப் பார்த்தபோது எனக்கு மிகவும் பரிசயமான அந்தக் கையெழுத்துக் கொண்ட 'என்வலப்'பைக் கண்டதும் மனம் நிறைந்த மகிழ்வுடன் உறையைப் பிரித்தேன். "பல்கனி"யில் மெல்லிய இருள் கவிந்திருந்தும் இருளில் இருக்கும் உணர்வே இல்லாமல் ஏதோ ரசனையில் ஆழ்ந்துபோய் இருந்திருக்கிறேன் என்பது அந்தக் கடிதத்தைப் பிரித்து வாசிக்க முற்பட்டபோதுதான் உறைத்தது. எழுந்துபோய் 'லைட்' சுவிச்சைப் போட்டுவிட்டு வந்து படித்தேன்.

"கூலி வாங்கித் தாலி கட்டும் முதுகெலும்பற்ற ஆண்வர்க்கத்தை உங்கள் முற்போக்கான சிறுகதை நல்ல அடி கொடுத்துத் தாக்குகிறது. உங்களது எழுத்தாற்றல் எமது கேடுகெட்ட, நாறிப்போன சமுதாயத்தின் சீரழிவுகளைத் திருத்திவிடும் என்று நான் முற்றாக நம்புகிறேன்" என்று தொடங்கிய அவரின் கடிதம் என் எழுத்தாற்றலுக்குப் பெரிய சான்றிதழாய் அமைந்திருந்தது. வழக்கம் போலவே அந்த இன்பமான நிறைவின் அழுத்தத்தில் நான் லயித்து மயங்கியிருந்தேன்.

"இவர் எனது ஆக்கங்களைப் பாராட்டுபவராக மட்டும் இல்லாமல் என்னையே விரும்புபவராகவும் இருந்துவிட்டால்..." இவ்வாறான ஓர் இனிய கற்பனை உதிப்பதைத் தடை செய்யும் சுய கட்டுப்பாடு இல்லாதவளாய் அந்தக் கற்பனையைத் தொடரவிட்டு ரசித்துக் கொண்டிருக்கிறேன். கடிதத்தைப் பாதியில் நிறுத்திவிட்டது கூடத் தெரியாமல் மறைத்துக்கொண்டிருந்த கற்பனைச் சுகத்தின்

முடிவில் எப்போதாவது ஒருநாள் எப்படியாவது ஒரு வகையில் இவரை நான் நேரில் சந்தித்துவிட வேண்டும் என்ற பிடிவாதமான தீர்மானத்துடன் தொடர்ந்து கடிதத்தைப் படிக்கிறேன்.

மல்லிகையின் 'ஜில்' என்ற மணம் மூச்சைத் துளைத்து என் அக்காவின் வருகையை முன்னறிவிப்புச் செய்தபோது ஸ்கூலில் நடைபெறும் ஏதோ ஒரு 'பார்டி'க்குப் போக ஆயத்தமாக அலங்காரம் செய்துகொண்டு வருகிறாள் என்பதைப் புரிந்துகொண்டேன். இரண்டு வருடங்கள் இவ்வுலகில் என்னைவிட அதிகமாக வாழ்ந்துவிட்ட தோற்றம் அவளிடம் தோன்றாமைக்கு அவளது குழந்தைத்தனமான உள்ளந்தான் காரணமோ எனப் பலமுறை நான் ஐயப்பட்டுக் கொண்டதுண்டு. 'பாஷனை'ப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தபோதிலும் புறப்படுமுன் ஒன்றும் தெரியாத என்னிடமே,

"என்னடி இலட்சியவாதி, இந்த சாறிக்கு இந்த பிளவுஸ் 'மாச்' பண்ணுதா? கொண்டையிலை பூ வைச்சது சரியா எண்டு பாரன்!" என்று இரண்டு வார்த்தை கேட்காமல் புறப்பட்டால் அவளுக்கு நிறைவு வராது. எனது வாயால்,

"நல்லாயிருக்குது அக்கா" என்ற பதிலைக் கேட்பதில் அவளுக்கு ஒரு மகிழ்வு இருக்குமாயின் அதைக் கொடுப்பதில் எனக்கு என்ன நட்டம் ஏற்பட்டுவிடப்போகிறது என்ற நினைப்பில் நானும் "நல்லாயிருக்குது" என்று சொல்லிவிடுவேன். அவளுக்கு மிகவும் அக்கறை உள்ள ஒரு விடயத்தில் நான் ஒட்டிக்கொள்ளாமல் பதில் சொல்வதுபோலவே எனக்கு மிகவும் பிடித்தமான விடயத்தை அவள் மிக மேலோட்டமாகக் கேட்பாள்.

"அந்த உன்ரை-அவற்றை பெயர் என்னடி? கோபால் இல்லையே! அந்த அபிமான ரசிகரின்ரை விமர்சனம் வந்ததேடி!"

"வந்தது வந்தது" சுரத்தில்லாததுபோல் நான் பதில் சொன்னாலும் அவள் மேலும் அதைப்பற்றிக் கேட்கமாட்டாளா என்ற ஏக்கம் அந்தச் சுரத்தில்லாப் பதிலுக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருந்தது. ஆனால் அவள் தான் 'பார்ட்டி'க்குப் போய்த்தன் 'போய் பிரண்டை'ச் சந்திக்கும் அவசரத்தில் இருக்கிறாளே!

"ஏதோ இரண்டு பேருமாய்ச் சேர்ந்து உலகத்தைத் திருத்திப் போடுங்கோ! நேரம் போயிட்டுது. நான் போட்டு வாறன்" என்று கூறிக்கொண்டே படியிறங்கி ஓடும் அவள் வேகத்திலேயே அவளுடைய சுரேஷைச் சந்திக்கும் அவசரம் தெரிகிறது. என்னிடம் - நான் அவளைவிட இளையவளாய் இருந்தும்கூட என்னிடம் - எப்போதோ வந்து குடிகொண்டுவிட்ட நேர்கொண்ட பார்வையும் நிதானமான நடையும் அக்காவிடம் இன்னும் வரவில்லை. சிறிய பிள்ளைகளுக்கு

ஆசிரியையாக இருந்து எப்போதும் அவர்களுடன் பழகுவதாவோ என்னவோ இன்னமும் அதே குழந்தை ஓட்டமும் துள்ளல் நடையுந்தான்.

ஐந்து பக்கங்கள் - முழுப்பக்கங்கள் - நிறைய என் சிறு கதைக்கான விமர்சனம் என்ற பெயரில் என் எழுத்தாற்றலைப் புகழ்ந்திருந்த கோபாலின் கடிதத்தின் ஆறாம் பக்கத்தைப் புரட்டுகிறேன்.

“உங்கள் தரமான ஆக்கங்களுக்கு நல்ல விமர்சகனாக மட்டுமே இன்றுவரை இருந்துவரும் நான் உங்களை நேரில் பார்த்ததில்லை. அந்தக் குறையை நிறைவு செய்வதற்கு விரைவிலேயே ஒரு சந்தர்ப்பம் வரும்போல இருக்கிறது. ஆம், வருகிற வாரம் ஒரு நண்பனின் திருமணத்திற்காக யாழ்ப்பாணம் வரும்போது உங்கள் வீட்டிற்கும் விஜயம் செய்ய யோசித்திருக்கிறேன்...”

என் தலை திடீரென்று ‘ஜில்’ என்று குளிர்வது போலிருந்தது. அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற எனது அந்தரங்க ஆவல் இவ்வளவு விரைவில் நிறைவேறப் போகிறது என்ற நிச்சயமான தவிப்பில் மனம் பூவாகிப் பறந்தது. அந்தக் கணத்திலிருந்தே நான் அவருடன் கதைக்க வேண்டிய விடயங்களை மனம் உருப்போடத் தொடங்கி விட்டது. என்னைச் சுற்றியுள்ள எல்லாருமே ‘பாஷனை’ப் பற்றியும் அடுத்தவனைப் பற்றியும் பேசும்போது... என்னுடன் என்னைப்போல எனக்கு ஆர்வமுள்ள கலை, கலாசாரம், நாவல், இலக்கியம், புத்தகங்கள், இலக்கிய கர்த்தாக்கள் பற்றிக் கதைப்பதற்கு ஒருவர் வரப்போகிறார் என்பது எனக்கு நம்பமுடியாத நிச்சயமாய்த் தோன்றி என்னை மயங்க வைத்தது. எனது ஆழமான சிந்தனைகளைக் கொட்ட ஒரு வடிகால்... சீதனக் கொடுமை, சாதிப் பிரச்சினை, சமுதாய மூட நம்பிக்கைகள் இவற்றைப்பற்றி எல்லாம் யதார்த்தமாகக் கலந்துரையாட வேண்டும். அதற்கான எடுகோள்கள் - பல எழுத்தாளர்களின் எண்ணங்கள் - இப்படிப் பலப்பல ஆயத்தங்கள்.

அக்கா அடுத்தநாள் கேட்டாள். “என்ன திடீரென்று நூலகத்தையே திரட்டிக் கொண்டுவந்து வீட்டில் வைத்திருக்கிறாய்? இவ்வளவு புத்தகத்தையும் எங்கையிருந்து கொண்டுவந்து குவித்தாய்? என்ன விஷேசம்?” நான் சொன்னேன்,

“கோபால் இங்கே வரப்போகிறார். அவரோடை இதைப் பற்றியெல்லாம் கலந்துரையாட வேணும்”.

“சரிதான்” அக்காவின் இதழ்க் கடையில் ஒரு மென்முறுவல் இழைந்து மறைந்தபோது என்னைப் பரிகசிப்பதுபோல் தோன்றினாலும், அடுத்தநாளே வீட்டில் காணப்பட்ட அழகான மலர்ச் செண்டுகளும், மேசை விரிப்புகளும், எனது விருந்தாளியை வீட்டிலே வரவேற்க அக்காவும் தன்போக்கில் ஆயத்தம் செய்கிறாள் என்று புரிந்தபோது, அக்காவின் நல்ல உள்ளத்தை எண்ணி நான் உள்ளூர மகிழ்ந்து போனேன்.

கோபால் படலையைத் திறந்துகொண்டு வரும்போதே பார்த்தேன். என்னைப் போல்தான் - நிமிர்ந்த நிதானமான நடை. அக்காவைப்போல் மாநிறமாகவோ கறுப்பாகவோ இல்லாமல் என்னைப்போல் வெள்ளையாக இருக்கிறார். உயரம், எளிமை விரும்பியாக வெள்ளைக் காற்சட்டையும் வெள்ளைச் சேட்டுமே அணிந்த உருவம், சுருள் சுருளான மயிர், ஓ வெளித் தோற்றத்தில்கூட எங்களுக்கிடையில் எல்லாமே ஒற்றுமைப்பட்டு நிற்கும் அதிசயத்தை... நிதர்சனமாகக் கண்டபின்னும் என்னால் நம்பமுடியவில்லை.

அவர் உள்ளே வந்து அமர்ந்தபின் நான் நிதானமாக வந்து வணக்கம் தெரிவித்து உரையாடிக்கொண்டிருக்கிறேன்.

“இலக்கியம் என்பது யதார்த்தமாக இருக்க வேண்டும். அதீதமான கற்பனைகளும் குரூர ரசனைகளும், நடக்கமுடியாத சம்பவங்களும் கொண்ட சிறுகதை நாவல்களை நான் ரசிப்பதில்லை. அந்த வகையில் உங்கள் ஆக்கங்கள் தனித்துவம் பெற்றிருப்பதால் அவற்றை நான் மிகவும் விரும்பி வாசிப்பேன்.”

என்று அவர் சொல்லும்போது எனது முகம் என்றும் இல்லாமல் சிவந்து போகிறதுபோல் இருக்கிறது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நான் பேசுகிறேன்.

“நாம் ஒவ்வொரு நாளும் காணுகின்ற - கேட்கின்ற பிரச்சினைகளைப் பற்றியே இலக்கியமும் பேசுவதானால் அதில் என்ன சுவை இருக்க முடியுமென்று பலர் கேட்கிறார்களே!”

அந்தக் கேள்விக்கு அழகாக விடைசொல்ல எனக்குத் தெரிந்திருந்தாலும் கோபால் என்ன சொல்லுகிறார் என்று அறிவதில் இருந்த ஆர்வத்தில் அவரிடம் கேட்கிறேன்.

“நிச்சயமாக அதில்தான் சுவை இருக்கிறது. எமது வாழ்க்கை, போராட்டங்களும் பிரச்சினைகளும் நிறைந்தது. அதில் எமக்குப் புரிந்துகொள்ள முடியாத, விளங்கிக்கொள்ள முடியாத சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றன. அவற்றைப் புரிந்துகொள்ள நாவல்களும் சிறுகதைகளும் உதவவேண்டும். இல்லாத ஒரு பிரச்சினையைப் பற்றிப்பேசி இருக்கிற பிரச்சினையைத் தீர்க்க முடியாது.”

நான் நினைத்த பதிலை எனது மனதிற்குள்ளே சென்று பார்த்து வந்திருந்தால்கூட இப்படி அட்சரம் தவறாமல் சொல்ல முடிந்திருக்குமோ என்ற வியப்பில் இருந்து நான் விடுபடுமுன்பே அக்கா குசினி வாசலில் நின்று மெதுவாக எட்டிப் பார்த்தாள்.

“என்ன அக்கா?”

"இங்கே வாடி" என்று கூறிவிட்டு உள்ளே தலையை இழுத்துக்கொள்ளும் அக்காவிடம் போய் அவள் போட்டு வைத்திருந்த தேநீரை எடுத்துவந்து நீட்டும்போது அவர் கேட்கிறார்,

"அது யார் உள்ளே?"

"என் அக்கா. ஸ்கூல் ரீச்சராக இருக்கிறாள். புதியவர்களிடம் விரைவாகப் பழகமாட்டாள்." என்று கூறிக்கொண்டே,

"அக்கா, வெளியிலை வாவன்" என்று குரல் கொடுக்கிறேன். அவள் நெளிந்து, வளைந்து மிகவும் சங்கடப்பட்டு வெளியே வருவதைப் பார்த்து,

"உங்கள் அக்காவுக்கு உங்களைப்போல் எழுத்தார்வம் இல்லையா?" என்று வேறு திசையில் கேள்வி கேட்கிறார் கோபால்.

அவளா? "காண்டேகர் என்று சொன்னால் அவர் எதைக் கண்டுபிடித்தார். நான் படிக்கவில்லையே!" என்று கேட்பாளே என்று நான் கூறிக் கோபாலுடன் சேர்ந்து வாய்விட்டுப் பெரிதாகச் சிரிக்கும்போது தலையைக் குனிந்துகொண்டு மெதுவாகப் புன்முறுவல் செய்கிறாள் அக்கா.

பல நாட்டின் எழுத்தாளர்களைப் பற்றியும் அவர்களின் படைப்புகள் பற்றியும் அவர் பேசப்பேச அவருக்கு அருகே - மிக அருகே உள்ளம் செல்ல விழைகிறபோது - எனக்கு அருகே இருந்த அவரது 'சூட்கேசை' என்னை அறியாமலே நீவி விடுகிறேன்.

பேச்சுவாக்கில், "வாசலில் போடப்பட்டுள்ள கோலம்..." என்று அவர் தொடங்க,

"அது அக்காவின் கைவண்ணம். எனக்கு இதெல்லாம் அவ்வளவு இன்ரறெஸ்ற் இல்லை" என்று நான் சொல்வதை,

"ஓ... ஐ... சீ... உங்கள் சிந்தனை எல்லாம் இலக்கியம் பற்றித்தானா?" என்று பெரிதாக எடுத்துக் கொள்கிறார்.

சாப்பிடும்போது பேச்சு மறுபடியும் சீதனப் பேச்சுக்குத் திரும்புகிறது. "உங்கள் குடும்பத்தில் யாருக்கும் சீதனம் கொடுக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்." என்று அவர் அபிப்பிராயப்படும் போது,

"இல்லை! இல்லை! அக்கா தன் சம்பளத்தில் மிஞ்சுவதெல்லாம் சீதனத்திற்கே சேமித்து வைக்கிறாள். நான்தான்...

என்னை எனக்காக மட்டுமே விரும்புபவரையே திருமணம் செய்வதென்றிருக்கிறேன்." என்று அவசரமாகக் குறுக்கிடுகிறேன்.

கோபால் போனபின்னர் அக்கா என்னைக் கேலி செய்கிறாள். "உனக்குப் பொருத்தமான ஆள்தான். நீ ஊரைத் திருத்தப் புறப்பட்டால் அவர் நாட்டையே திருத்தி விடுவார் போல் இருக்கிறது. இருவரும் சேர்ந்தால் உலகத்தையே திருத்திவிடலாம்."

"ஆனாலும் அடக்கமான ஆசாமிதான். என்னை விரும்புகிறாரோ என்பதைப்பற்றி இலேசாகக் கூடத் தெரிவிக்கவில்லையே!"

எனக்குள்ளே இவ்வாறு சிந்தித்துக் கொண்டவள், இம்முறை வரும் கடிதத்தில் காதல் ராகத்தின் முதல் அரிச்சுவடி மீட்கப்படும் என்றுதான் பெரிதாக எதிர்பார்த்திருக்கிறேன்.

நான் எதிர்பார்த்தபடியே அவர் போன மூன்றாம் நாள் கடிதம் வந்தது. அவசரமாகப் பிரித்த எனக்கு - இதயத்தை யாரோ சுறுக்கென்று முள்ளால் குத்தியது போலிருந்தது. அது... அக்காவிற்கு எழுதப்பட்ட காதல் கடிதம்...!

வேறொரு இளைஞரை ஏற்கனவே விரும்பும் அக்காவிற்கு அதை நான் காட்டவில்லை. இந்த உலகில் பேச்சும் செயலும் எவ்வளவு தூரம் முரண்பட்டுப் போய்க் கிடக்கிறதென்பது எனக்கு மட்டுமே புரிகிறபோது - அந்த என் மௌனத்தின் அழுகுரல் எனக்கேகூடக் கேட்காமல் - ஒலிக்காத ஓலமாய் - பெரிதாக, மிகப் பெரிதாக எனக்குள்ளே உருவாகி ஓய்ந்து போகிறது.

(31-12-1978 ஈழநாடு வாரமலரில் பிரசுரமானது.)

☆ ☆ ☆

# 2

# ஒரு ஏக்கம் மடிகிறது

"அம்மா! நான் போகட்டோ?"

"ஏனடி அவசரப்படுகிறாய்? சரி, சரி தேவையானதை எடுத்துக்கொண்டு போட்டு வா கெதியா!"

ஏழரை மணிக்கெல்லாம் நான் அங்கே நிற்கவேண்டும் என்ற அந்த வேட்கைக்கு நானே ஆயிரம் காரணங்கள் கூறிப் பார்த்துக் கொண்ட போதிலும் எனக்குத் தெரியும் அந்தக் காட்சியில் எனக்குள்ள லயிப்புத்தான் காரணம் என்று.

பனிமழையில் நனைந்திருக்கும் புற்கூட்டங்களைப் பார்த்துச் சிரித்தபடியே அந்த வீதியில் நான் ஓடிக்கொண்டிருந்தேன். ஏதேதோ புதிய கற்பனைகளும் கனவுகளும் நினைவுகளுமாய் அலை அலையாய், நுரை நுரையாய், அடித்து ஆர்ப்பரித்துக் கரையை நோக்கி ஓடிவரும் கடல் அலைகள் கரையில் வந்து மோதிய பின்னர், ஒன்றும் இல்லாமல் வெறுமனே திரும்பிச் செல்லும் காட்சி - கரையிடம் அடிவேறு வாங்கிக்கொண்டு திரும்பிச் செல்லும் காட்சி ஏனோ என்னை அலைக்கழிக்கிறது. பஸ்ஸைத் தவறவிட்டு விடுவோமோ என்ற சந்தேகம் கலந்த கேள்வி மனதில் ஒலித்துக் கொண்டிருப்பதால் ஒருவித மனப்பதைப்புடன் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறேன். அந்தச் சந்தடியும் கலகலப்பும் ஒவ்வொரு நாளும் பார்க்கப் பார்க்க அலுத்துப்போகாத காட்சிகள். அந்தப் பரவசத்தைத் தவறவிட்டு விடலாமா?

கீரிமலையில் ஐந்து வீதிகள் சந்திக்கும் அந்தச் சந்தியில் நிமிர்ந்து நிற்கும் தபாற்பெட்டியடியில் நான் திரும்புகிறபோது எனக்கு முன்னால் பட்டாம் பூச்சிகள் போல் பல மாணவிகள் வந்து கொண்டிருக்கும் காட்சி, எப்போதும் போலவே இன்னும் பஸ் வரவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்கிறது.

"அங்கை பாரடி, நோஞ்சான் குஞ்சு ஓடி வருகுது!", "நாங்கள் தற்சமயம் பிந்தி வந்தாலும் நோஞ்சான் குஞ்சு கடைசி வரையும் பஸ்ஸைத் தவறவிடாது."

அவர்கள் என்னைப் பற்றியே கதைத்துச் சிரிக்கிறார்கள் என்பது எனக்குப் புரிந்தாலும் அவர்கள் பேச்சில் கலந்துகொள்வது என் வழக்கமில்லை. ஒவ்வொரு நாளும் பார்த்தும் பார்த்தும் அலுக்காமல் இன்றும் புருவங்கள் நெரிய அவர்கள் ஒவ்வொருவரையும் உன்னிப்பாகப் பார்க்கிறேன். மடிப்புக் கலையாத, நேர்த்தியான வெண்ணிற உடை, நெற்றியில் புரண்டு விழும் சுருள் சுருளான மயிரைக் கலைக்காமலே தலை வாரி றிபன் கட்டியிருக்கும் திறன், முழங்கால்வரை உயர்ந்து ஒரு தனி மிடுக்கைத் தரும் டெனிஸ் சப்பாத்து, சொக்ஸ், ஆடி அசையும் அந்த லாவகமான நடைக்கேற்ப நெஞ்சில் தாளமிடும் ‘டை’, தோளில் தொங்கும் விதவிதமான ‘ஸ்கூல் பாக்ஸ்’ எல்லாமே என்னைக் கிறங்க வைக்கின்றன. கொழு கொழுவென்ற உடலும் பூரிப்பு நிறைந்த முகங்களுமாய்க் கூடிச் சிரித்துக் கும்மாளமிட்டு வரும் அந்தக் கூட்டம். குச்சுக்குச்சாய் மெலிந்து ஒடிந்து விழுவதுபோல் இருக்கும் என்னைப் பார்த்து “நோஞ்சான் குஞ்சு” என்று அன்புப் பட்டம் வைத்திருந்ததில் ஒருவித தவறுமில்லைத்தானே!

சன்னமாகத் தூற்றலடிக்கும் அந்த மழைத் துளிகளையும் பொருட்படுத்தாமல் அந்தக் கடை முகப்பில் போய் நின்றுகொண்டு அவர்களைப் பார்க்கிறேன். மருண்டு மருண்டு பார்க்கும் அந்த என் விழிகளை ஓர் அதிசயம் போல் பார்த்துக்கொண்டு பலவிதமாகவும் அவர்கள் கதைப்பதை நான் ஆவலுடன் ஒட்டுக்கேட்கிறேன். எனக்குப் புரியாத சில ஆங்கில வார்த்தைகளையும் சேர்த்து அவர்கள் கதைக்கும் அழகு எனக்கு மிகவும் பரிசயமான ஒரு நிகழ்வாக இருந்தபோதிலும் - திரும்பத் திரும்ப அதைக் கேட்பது ஒரு சுகானுபவந்தான்!

“பஸ் வருதடி!” என்று ஒருத்தி சொன்ன உடனே எல்லாரும் விழுந்தடித்து ஓடிப்போய் பஸ் திரும்பும் அந்த வளைவில் நின்று கொள்கிறார்கள். நான் மட்டும் அந்தக் கடை முகப்பிலேயே நின்றுகொண்டு தூரத்தில் பஸ்வரும் வேகத்தைப் பார்க்கிறேன். மிக வேகமாக வந்து, வளைவில் திரும்புவதற்காகப் பஸ்ஸின் வேகம் குறைக்கப்படும்போது வளைவில் எதிர்பார்த்து நின்றிருக்கும் அந்தக் கூட்டம் அநாயாசமாக அதில் தொற்றி ஏறிக்கொள்வதும் ரசிக்கக்கூடிய ஒரு காட்சிதான்.

“பஸ் வந்தா நிற்குந்தானே! அதுக்குள்ளை ஏன் விழுந்தடிக்கிறியள் எல்லாரும்” என்று நடத்துநர் சீறியதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் எல்லாம் ஏறி முண்டி அடித்துக்கொண்டு இருக்கைகளில் அமர்ந்து கொள்கிறார்கள். பஸ் சாரதியும் நடத்துநரும் தமது காலைச் சாப்பாட்டை முடித்துக்கொள்வதற்காக இறங்கிக் கடையினுள் நுழைந்த பின்னரும் இவர்களின் சரளமான உரையாடலும் கூச்சலும் கலகலப்பும் ஓயவில்லை. திடீரென்று அவர்களில் ஒருத்தி “சின்னமாமியே உன் சின்ன மகளெங்கே?” என்று ஏதோ ஒரு உற்சாகத்தில் ஒரு வரி பாட - அது மற்றவர்களிடமும் ஒரு உந்துதலை ஏற்படுத்தி விடுகிறது. சில விநாடிக்குள் பஸ்ஸின் சீற்றையே தாளமாகத்

தட்டித் தட்டிக் கைத்தாளமும் போட்டுக்கொண்டு அவர்கள் எல்லாம் பாடுவது அங்கே ஒரு ரஞ்சகமான சூழ்நிலையை உருவாக்குகிறது.

"டிங்கிரி டிங்காலே" பாட்டு இவர்கள் எல்லாரையும் விட நான் என்ன ஜோராய்ப் பாடுவேன் தெரியுமா? அவர்களின் அந்தக் கம்பீரம் கலந்த உற்சாகம் வழக்கத்திற்கு மாறாய் என்னுள் ஒரு ஆவலைக் கிளற நானும் பஸ்ஸினுள் மெதுவாய் ஏறிக்கொண்டு அந்தப் பாடலில் கலந்துகொள்கிறேன். வழக்கமாய் என்னை ஓர் அர்த்தமற்ற வெறுப்புடனும் அருவருப்புடனும் பார்த்து உதாசீனம் செய்யும் அந்தக் கும்பல் இன்று,

"அட, நோஞ்சான் குஞ்சு நல்லாய்ப் படிக்குதே! இன்னும்படி" என்னை உற்சாகப்படுத்துவது எனக்கு ஒரு வியப்பாய்த் தோன்றுகிறது. அந்த மகிழ்வில் நான் அமிழுமுன்பே மற்றொருத்தி,

"என்னடி நோஞ்சான் குஞ்சு இண்டைக்கு ஸ்கூல் பஸ்ஸிலை ஏறிட்டுது? படிக்க வருதோ?" என்று கேட்பது என் உள்ளுக்குள்ளே மறுகி மறுகி வெளிப்பட முடியாதிருந்த சோகத்தைக் கல்லெறிந்து கலக்கிவிடுகிறது. அதேநேரம் சாப்பிடப் போயிருந்த சாரதியும் நடத்துநரும் திரும்பி வரவே அவர்களைக் கண்ட பயத்தில் உள்ளார்ந்த குமுறலுடன் பஸ்ஸிலிருந்து திடுமெனக் குதித்து விடுகிறேன். அவசரமான அந்தக் குதிப்பினால், கணுக்காலில் ஏற்பட்டுவிட்ட சுளுக்கு வலிப்பதையும் பொருட்படுத்தாமல் ஒருவாறு என்னைச் சுதாரித்துக்கொண்டு நிமிர்ந்தபோது, அந்த 'ஸ்கூல் பஸ்' போய்க்கொண்டிருக்கிறது.

"நோஞ்சான் குஞ்சு, டாட்டா!" என்று பஸ் யன்னலினூடாக அவர்கள் தலையை நீட்டிக் கையை அசைத்துக் கூறிச் சிரிக்கும்போது, ஒருநாள் அவர்களில் ஒருத்தியின் 'டை'யைப் பிடித்துக்கொண்டு "இது எந்தக் கடையிலை வாங்கின நீங்கள்?" என்று கேட்ட என் அசட்டுத் தனத்தையே அவர்கள் இன்னும் நினைத்து நினைத்துச் சிரிப்பதுபோல் என்னுள் ஒரு கற்பனை விரிகிறது. பஸ்ஸின் தோற்றம் சிறிதாகிச் சிறிதாகிக் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை சென்று மறையும் அழகைப் பார்த்து எனக்குள்ளே ஒரு பெரிய பெருமூச்சு வெடிக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் வீட்டிலே நான் கடைக்குட்டித் தம்பிக்குப் பால் பருக்கிக் கொண்டிருந்தபோது வேலையில் இருந்து வந்த அம்மா கேட்டாள்,

"மெய்யேடி! காங்கேசன்துறையிலை ஒரு பணக்கார வீட்டுக்கு உன்னைப்போலை ஒரு பெட்டை தேவையாம், போறியே?"

"நான் போகேல்லை. அக்காவை வேணுமெண்டால் அனுப்பன்" என்று முறித்துவிட்டு எழுந்திருந்த என்னை அம்மா விடவில்லை.

"அங்கை உனக்கொரு வேலையுமில்லை. வீட்டுப் பிள்ளையள் இரண்டைப் பாக்கிறதுதான். அவைட்டைக் கார் இருக்கு. அதிலை போகலாம். புதுச் சட்டை, நல்ல சாப்பாடு எல்லாம் தருவினம்" ஏதோ நிறையச் சொல்லப் புறப்பட்ட அம்மாவை நான் இடைமறித்தேன்.

"எனக்கு அதொண்டும் வேண்டாம். என்னைப் பள்ளிக்கூடம் போக விடுவினமோ, அதைச் சொல்லு."

பாடசாலைக்குச் சென்று படிப்பதை எங்கள் வீட்டின் வாழ்க்கைப் பின்னணி அனுமதிக்காத போதிலும் இங்கே போனால் படிக்கலாம் என்ற ஓர் ஆவேசத்தில்தான் அன்று நான் "சரி" என்றேன். இங்கே வேலைக்கு வந்தால் பாடசாலைக்குப் போகலாம் என்ற உடனேயே என் மனதின் எண்ணங்கள் மாறிவிட்டன. விளையாட்டையும், தம்பி தங்கைமாரைப் பார்ப்பதையும் நிறுத்திவிட்டுத் தலையைப் பலவிதமாக இழுத்து இழுத்து அலங்காரம் செய்து பார்த்தேன். பாடசாலைக்குப் போகும்போது எப்படித் தலைவாரிக்கொள்வது என்று முடிவு செய்யாத நிலையில்தான் இங்கே வந்து சேர்ந்தேன்.

காங்கேசன்துறையின் கடற்கரை ஓரமாய் அமைந்திருந்த அந்தப் பங்களாவின் அழகு, இயற்கை வனப்பு, அவர்களின் அந்தப் பெரிய கார், மூன்று அல்சேஷன் நாய்கள் எல்லாவற்றையும் நான் வாழ்நாளில் கண்டிராத அதிசயங்களாய்ப் பல நாள் பார்த்திருந்தேன்.

நாட்கள் ஒவ்வொன்றாய் நகரும்போது அந்த வீட்டில் பால் வாங்கப் போவது முதல் சமைப்பதுவரை சகல வேலைகளையும் நானே செய்யவேண்டி இருந்தபோதும், இவர்கள் என்னைப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டார்களா என்று உள்ளூர அந்த ஏக்கம் இருக்கத்தான் செய்தது. மனதில் துணிவை வரவழைத்துக் கொண்டு ஒருநாள் எஜமானி அம்மாவிடம் கேட்டுவிட்டேன்.

"அம்மா, என்னை ஸ்கூலுக்கு அனுப்பமாட்டீங்களா?" என்று,

"படிக்காதது ஒண்டுதான் குறை உனக்கு... போடி கழுதை... போய் அந்தப் பானையைக் கழுவு..." என்று எரிந்து விழுந்த குரல் என்னை ஒருபோதும் பாடசாலைக்கு அனுப்பப் போவதில்லை என்பது மெதுவாகப் புரிந்தபோதுதான் என்னை இங்கே அனுப்புவதற்காகவே என்னிடம் பொய் சொல்லி ஏமாற்றிய தாயின் மீது அளவில்லாத சினம் மூண்டது. அந்த ஏக்கம் நனவாகப் போவதில்லை என்பது நிச்சயமான பின்னர் அந்த ஏக்கத்தின் ஒரு புதிய வார்ப்பாக - அதன் சுவடுபோல - காலையில் பாடசாலை செல்லும் இந்தக் கும்பலைப் பார்த்து மகிழ்வதை வழக்கமாக்கிக் கொண்டேன்.

பஸ் தூரச் சென்று மறைந்த பின்னர், நான் கொண்டு வந்திருந்த போத்தலைக் கடையில் கொடுத்துப் பால் வாங்கிக் கொண்டு

வீட்டிற்குத் திரும்பிச் செல்கிறேன். எண்ணங்கள் மீண்டும் மீண்டும் அந்தக் கும்பலையே வட்டமிடுகின்றன. கிட்டத்தட்ட என்னளவே வயதுள்ள அவர்களுக்கும் எனக்கும் ஸ்புடமாகத் தெரிகின்ற பல முரண்பாடுகள் நினைவில் வந்து மனதை உறுத்துகின்றன. அந்த உறுத்தலினால் மனதில் ஏற்படும் வலியும், சுளுக்கினால் காலில் ஏற்பட்டுவிட்ட வலியும் தெரியாதிருக்கும் பொருட்டு இன்னும் வேகமாக ஓடுகிறேன்.

வீட்டை அடைந்தபோது தோட்டத்து முனுசாமிதான் பூந்தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தான். பாலைச் சட்டியில் வார்த்து அடுப்பில் வைத்துவிட்டு நிமிர்ந்தபோது, சவுக்குத் தடியும் சிவந்த கண்களுமாய் நின்றிருந்த எஜமானியைக் கண்டு நான் ஒரு கணம் விக்கித்துப் போனேன்.

“எடியே! நீ இவ்வளவு நாளும் பால் வாங்கப் போறன், போறன் எண்டு விடிய முந்தி ஓடுற சங்கதி இப்பதான் விளங்கிச்சுது! பஸ்சுக்குள்ளை ஏறிப் பாட்டுப் படிக்கிறியாம் - பாட்டு? முனுசாமி வந்து சொல்லாட்டி எனக்கு உன்ரை ஆட்டம் ஒண்டும் தெரிந்திருக்காது... உன்ரை லட்சணத்திலை கூத்து வேறை ஆடுறியா கூத்து...!”

பாடசாலைக்குப் போகின்ற வயதில் பாடசாலைக்குப் போகின்றவர்களின் மகிழ்வில் ஒருசில நிமிடங்கள் கலந்துகொண்ட குற்றத்திற்காக எஜமானி தந்த அந்தக் கொடூரமான சவுக்கடிகளை வாங்கிக் கட்டிக்கொண்டேன். நிணமும் சதையுமாய்க் காயங்கள் எல்லாம் ரத்தம் கசியும்போதும் அந்த உடல் வலியைவிட இதயப் புண்ணின் வலியே அதிகமாக இருக்கிறது. மனதில் மூண்டெழுந்த வேதனைச் சுமையை வெடுக்கென விழுங்கிச் சமாளித்துக்கொண்டு ஏக்கங்களை மடிய விட்டுவிட்டுச் சமையல் வேலைகளைத் தொடங்குகிறேன்.

(04-02-1979 ஈழநாடு வாரமலரில் பிரசுரமானது.)

☆ ☆ ☆

3

# பொருத்தங்கள்

ஒரு கையில் இரண்டு சாதகக் குறிப்புகளும், மறுகையில் வெள்ளிப் பிடிபோட்ட அந்தப் பழைய குடையும், 'சேட்' இல்லாத வெறும் இடையில் மடித்துக் கட்டிய வெள்ளை வேட்டியும், மடியில் சொருகிய ஐந்து ரூபா நோட்டுமாக விரைந்து நடந்து கொண்டிருந்தார் நடராசா உபாத்தியாயர். விரதாதிகளால் மெலிந்து வெளிறிப் போயிருந்த அந்த உடலைத் தூக்கிக்கொண்டு நடப்பது சிரமமாய் இல்லாவிட்டாலும்கூட மகளின் விஷயம் இன்னும் நிறைவேறவில்லையே என்ற வேதனையில் உறைந்து இறுகிப் போயிருந்த பாரமான மனம் அவரை அழுத்தி, அவரது நடையில் ஒரு சோர்வை ஏற்படுத்தி விட்டிருந்தது.

சௌமியமான ஒரு காலைப்பொழுது. மரம் நிறைய மஞ்சள் மஞ்சளாய்ப் பூத்துக் குலுங்கும் அந்தப் பெரிய கொன்றை மரத்தடியில், கிழக்கே திரும்பிச் செல்லும் வெள்ள ஒழுங்கையில் இறங்கி நடந்தால், இடதுகைப் பக்கத்தில் இரண்டாவது ஓலை வீடுதான் சாத்திரி சிதம்பரியின் வீடு. கனகசபை விதானையாரின் ஓட்டு வீட்டில் பெரிதாக அலறிக்கொண்டிருக்கும் வானொலியில் பிறந்தநாள் வாழ்த்து இன்னும் முடியவில்லை என்பதிலிருந்து நேரம் இன்னும் காலை 7-15 ஆகவில்லை என்பதை மதித்துக்கொண்ட உபாத்தியாயர் கொஞ்சம் வேகத்தைக் குறைத்துக்கொள்கிறார்.

விடிய நாலு மணிக்குச் சொல்லத் தொடங்கினால் காலை எட்டு மணி வரைதான் சிதம்பரிச் சாத்திரியாரின் சாத்திரம் உருப்படியாக இருக்கும். எட்டு மணிக்கு எழுந்து தாக சாந்திக்காக அவர் 'கோப்பரேஷன்' பக்கம் போனால், பின்னர் சாத்திரியாரைப் பிடிக்க முடியாது. அந்த ஊரைச் சுற்றிச் சுற்றி வரும் கை ஒழுங்கையெல்லாம் சுற்றிக்கொண்டு,

"டோய்...! இந்தச் சிதம்பரிச் சாத்திரி சொல்லி நடக்காத விஷயம் எது எண்டு கேக்கிறன்... இப்ப சொல்லுறன்... இந்த வரியம் முழுதும் ஒரு துளி மழையும் பெய்யாது. இருந்து பாருங்கோ எல்லாரும்... இந்த ஓல் சிலோன் இலங்கையிலை வேறை எவன் இப்பிடிச் சொல்லுவன்... இல்லை... தெரியாமல்தான் கேக்கிறன்..."

என்று நாக்குழறக் குழறி வான சாத்திரம் சொல்லிக்கொண்டு ஆங்காங்கே விழுந்து கிடப்பார்.

சாத்திரியாரின் வீட்டுப் படலையை உபாத்தியாயர் அடையும்போது உள்ளே சிதம்பரி சாத்திரம் சொல்லும் கம்பீரமான குரல் ஒருவித தாள லயத்துடன் வெளியே கேட்கிறது. அதையும் மேவிக் கொண்டு சாத்திரியாரின் கடைக்குட்டிப் பையன் தாயிடம் அடி வாங்கிக்கொண்டு ‘வீல்’ என்று கதறும் போர்த் தந்திரமுறை காதின் செவிப்பறை மென்சவ்வை இடிபோல் தாக்குகிறது. உபாத்தியாயர் படலையை மெதுவாகத் திறந்து உள்ளே சென்று சாத்திரியார் சொல்லுவதை உற்றுக் கேட்கிறார்.

“ஒருத்தரும் கையாடேல்லை. தென்கிழக்கு மூலையிலை தென்னைமர நிழலிலை மண்ணுக்கை மறைஞ்சுபோய்க் கிடக்குது. சனிபார்வை இருக்கிறபடியால் பாக்கிறவர் கண்ணை மறைக்கும். கிடைக்கிறதெண்டால் மூண்டு நாள் தவணை தாறன், அதுக்குள்ளை கிடைச்சால் சரி பிறகு கிடைக்காது...”

ஏதோ தொலைந்துபோன நகை சம்பந்தமாய் ஆச்சிக்குட்டி ஆச்சிக்கு நினைத்த காரியம் சொல்லிக் கொண்டிருந்த சாத்திரியார் உபாத்தியாயரைக் கண்டு,

“வாருங்கோ வாத்தியார்! இருங்கோ... இரண்டு நிமிஷத்திலை வாறன்” என்று உபசரித்துவிட்டு நினைத்த காரியத்தைத் தொடருகிறார்.

“வடக்கை பாத்துக்கொண்டிருக்கிற ஒரு வைரவருக்கு கற்பூரம் கொழுத்திப் போட்டுத் தேடுங்கோ... கிடைக்கும்... சுத்தமான உடம்போடை, மனத்தோடை கொழுத்தவேணும்... இல்லாட்டிக் கிடைக் காது...”

தொலைந்த பொருள் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி தனது சாத்திரம் பிழைத்துப் போகாதவாறு இரண்டு பக்கமும் வாதிடக்கூடிய முறையில் சாத்திரம் சொல்வதில், சிதம்பரிச் சாத்திரியாருக்கு, அவரே சொல்வதுபோல் “இந்த ஓல் சிலோன் இலங்கையிலை வேறை ஆள் கிட்ட நிக்கேலாது.”

ஆச்சிக்குட்டி ஆச்சி விடைபெற்றுச் சென்ற பின்னர், மூன்று வெற்றிலையில் பழம், பாக்கு ஐந்து ரூபா காசு ஆகியவை வைத்துச் சாத்திரியாருக்கு முன்னால் சப்பாணி கொட்டி அமர்ந்து கொள்கிறார் உபாத்தியாயர். நீண்டு நெளிந்து வளைந்திருக்கும் தன் தாடியைத் தடவிக்கொண்டே,

“சாதகத்தோடை வந்திருக்கிறியள். கலியாணப் பொருத்தமோ?” என்று கேட்கிறார் சிதம்பரி.

“உங்களுக்குத் தெரியுந்தானே சாத்திரியார்... என்ரை பிள்ளைக்கு என்ன குறை? படிப்பில்லையோ? வடிவில்லையோ? கேட்டபடி அள்ளிக் குடுக்கக் காசு இல்லையோ? என்ன இருந்தும் என்ன சுகம்? ஏழிலை செவ்வாய்க் குற்றம் எண்டு... ஒரு சாதகமும் பொருந்துதில்லை. பிள்ளைக்கும் இந்த ஐப்பசியோடை முப்பத்திரண்டு வயதாகுது. எத்தினை செருப்புத் தேஞ்சு போச்சுது. வயித்திலை நெருப்பைக் கட்டிக்கொண்டுதானே நானும் அலையிறன்...” மேலே தொடர முடியாமல் உபாத்தியாயரின் கண்களில் நீர் கலங்கி இமைகளை நனைக்கிறது. சால்வைத் தலைப்பினால் அதை அவர் தட்டி விடும்போது,

“என்ன செய்யிறது வாத்தியார்? ஏழில் செவ்வாய் எண்டால் கவனமாகத்தானே பாக்கவேண்டி இருக்கு. முன் வீட்டுக்காரரைப் பாக்கேல்லையா! அந்தப்பிள்ளை பரிமளத்திற்கு உதயச் செவ்வாய் எண்டு எனக்குத் தெரியும். அந்தப் பெடியன் ராசாவோடை ‘லவ்’வோ, இளவோ ஏதோ எண்டு சாதகப் பொருத்தம் பாக்காமல் செய்தினம். என்ன நடந்தது பாத்தியளோ!”

“என்ன நடந்தது?”

“பிறந்த பிள்ளைக்கு நெடுகலும் வருத்தம். உதுகளிலை ஒண்டும் இல்லை எண்டு சொல்லேலாது...” என்று தன்னிடம் முன் வீட்டுக்காரர் சாத்திரம் கேட்க வராத கோபத்தைப் பொரிந்து தள்ளினார் சாத்திரியார். பிறந்த குழந்தைக்கு வருத்தம் வருவது ஒரு அசாதாரண நிகழ்ச்சி அல்ல என்பதைப் புரிந்துகொண்ட உபாத்தியாயர் சாத்திரியாரை எதிர்த்துக் கதைக்க விரும்பாதவராய்க் கலங்கிய தன் மனதைத் தேற்றிக்கொண்டே மீண்டும் தன் விடயத்தைத் தொடர்ந்தார்.

“இந்தப் பெடியன் எல்லா விதத்திலும் நல்ல பெடியன். கொழும்பிலை நல்ல உத்தியோகம். ஒரு குடிவெறி, மச்ச மாமிசம் இல்லை. சிகரெட் ஊதிற பழக்கம்கூட இல்லை. எங்களைப்போலை சாதுவான பிள்ளை. சீதனம் எல்லாம் பேசி ஒழுங்காக்கியாச்சு... பிள்ளை கந்தசாமியார் கோயிலுக்குப் போன இடத்திலை கண்டு, தனக்குப் பிடிச்சிருக்கு எண்டும் சொல்லிப்போட்டானாம். உருவத்திலையும் இரண்டு பேரும் நல்ல சோடி. சாதகம் மாத்திரம் பொருந்திட்டுது எண்டால், வாற முதல் நாளுக்கே தாலி கட்டிப் போடலாம்...”

இரண்டு சாதகங்களையும் வாங்கி ஆறுதலாக ஆராய்ந்தார் சாத்திரியார்.

“மனுஷ கணம்... இது இராட்சத கணம்... சரி யோனியைப் பாப்பம். ஆண் பாம்பு, பெண் கீரி... அதுவும் அப்பிடி... ம்... சிரோரச்சு. மற்றது அவிட்டம்... அவிட்டம் அதுவும் சிரோரச்சு, புருஷ மரணம்... ம்... உஹும்...”

என்று தனக்குள்ளே ஏதேதோ முனகிக்கொண்டே பொருத்தம் பார்த்த சாத்திரியார் இறுதியாகச் சொன்னார்.

“வாத்தியார் நானும் தெண்டிச்சு உங்களை... ‘செய்யுங்கோ வாத்தியார்’ எண்டுதான் சொல்லப் பாத்தன். ஆனால் என்ன செய்யிறது? நட்சத்திரப் பொருத்தம், இரச்சுப் பொருத்தம், கணப் பொருத்தம், யோனிப் பொருத்தம் இப்பிடி முக்கிய பொருத்தங்களே இல்லை. கிரகநிலையும் பொருந்தேல்லை. உங்களைச் செய்யச் சொல்லிப் போட்டுப் பிறகு... நாளைக்கு ஒண்டு வந்திட்டால் என்னையெல்லோ திட்டுவியள்... வாத்தியார் நான் சொல்லுறன்... கவலைப்படாதேங்கோ, உதை விட்டிட்டு வேறை இடம் பாருங்கோ...”

உடலின் குருதியெல்லாம் சிதறிக் காட்டாற்று வெள்ளம் போலப் பெருக்கெடுத்து ஓட, அதில் தானே உயிரற்று மிதந்து செல்வது போன்றதொரு பயங்கரப் பிரமை உபாத்தியாயருக்கு ஏற்பட்டது. இதையும் விட்டால் இனி எங்கே மாப்பிள்ளை தேடுவது? வேதனையில் பஞ்சு பஞ்சாக நைந்து பிய்ந்த உள்ளத்துடன் உபாத்தியாயர் புறப்பட ஆயத்தமானபோது, படலையில் ஏதோ அரவம் கேட்டுத் திரும்பி நிமிர்ந்து பார்த்தார் அவர்.

அழுத கண்ணும் சிந்திய மூக்கும் ஒரு கையில் எடுக்குப் பிள்ளையும் மறுகையில் ஒரு சூட்கேசுமாக வந்தாள் ஒரு பெண்.

“என்னாலை அங்கை இருக்கேலாது அம்மா. எந்த நேரமும் அடியும் உதையும். எத்தினை நாள் தாங்கிறது? நான் என்ன மாடோ மிருகமோ?” என்று விம்மி அழுது பொருமியபடி நிற்பது சாத்திரியாரின் மகள் என்பது உபாத்தியாயருக்குப் புரியச் சில விநாடிகள் எடுத்தன. உள்ளே சமையல் அறையில் இருந்த சாத்திரியாரின் பெண்சாதி பதறிக்கொண்டு ஓடி வந்தாள்.

“என்ன மோனை? என்ன நடந்தது?” மகளைக் கட்டிக் கொண்டாள் தாய். சாத்திரியாருக்கு அந்தச் செயலில் ஒப்புதலில்லை.

“நீ குடுக்கிற செல்லந்தான் பிழை. திருப்பி விடு. அடுத்த பஸ்ஸிலை போகட்டும். அடிச்சால் என்ன... புருஷன்தானே! எனக்குத் தெரியும். சாதகப்படி அவன் தங்கமான பெடியன். ஒரு முன்கோபம்... அதுக்கென்ன செய்யிறது?”

“ஓமோம்... பதினாறு பொருத்தமும் சரி வருதெண்டு சொல்லித்தானே செய்து வைச்சியள். இப்ப என்ரை பிள்ளை கண்ணீரும் கம்பலையுமா எப்போதும் ஓடி வருது. அதுக்கு ஒரு ஆறுதல்கூடச் சொல்ல மனமில்லை” எரிந்து விழுந்தாள் சாத்திரியாரின் மனைவி.

“எடியே... அப்ப என்ரை சாத்திரம் பொய் எண்டு சொல்லுறியே? இந்த ஓல் சிலோன் இலங்கையிலை அப்பிடிச் சொன்னவன் இல்லை. நீ

சொல்ல வந்திட்டியே...” என்று உரத்துக் கத்தித் தும்புக்கட்டை எடுத்துக்கொண்டு மனைவியை நோக்கிப் பாய்ந்தார் சாத்திரியார்.

“வாத்தியாற்றை பிள்ளைக்கு வாற மாப்பிள்ளையைப் பொருத்தமில்லை எண்டு குழப்பிறியள்! நீங்கள் பதினைஞ்சு பொருத்தமும் சரியாப் பாத்துச் செய்த உங்கடை பிள்ளை இப்பிடி வந்து ஏன் நிக்குதெண்டு கேக்கிறன்.”

அவள் விடுவதாக இல்லை. உபாத்தியாயர் முன்னிலையில் தன்னை அவமானப் படுத்திவிட்ட ஆவேசத்தில் அவளைத் தும்புக் கட்டையால் விளாசு விளாசென்று விளாசி விட்டார் சாத்திரியார்.

இந்தக் குழப்பங்களுக்கிடையில் மெதுவாக இடத்தைவிட்டு நழுவினார் உபாத்தியாயர். சாத்திரியார் பொருத்தமில்லை என்று சொன்ன திருமணத்தைச் செய்வதா? விடுவதா? அல்லது இன்னொரு சாத்திரியாரிடம் கேட்பதா? சாத்திரியார் சரியாப் பொருத்தம் பார்த்துச் செய்த திருமணமும் நிறைவாக இல்லையே! அவருக்கு எல்லாம் ஒருவித குழப்பமாயிருந்த அதேநேரத்தில் அந்தக் குழப்பத்தில் ஒரு தெளிவும் தோன்றுவதுபோல் இருந்தது. முன்வீட்டுப் படலையில் நின்று நடந்ததெல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பரிமளா வின் தந்தை.

“வாத்தியார்! என்ரை பிள்ளைக்கு நான் பொருத்தம் பாக்கேல்லை. அவள் மனம் விரும்பியபடி செய்து வைச்சன். இப்ப என்ன குறை வந்திட்டுது? அவளை மருமேன் இராசாத்தி மாதிரி வைச்சிருக்கிறார். எல்லாம் பொருந்தி வந்தால் சாதகத்தை மாத்திரம் நம்பிக் கலியாணத்தைக் குழப்பிறது புத்தியில்லை.” என்று சொல்வது உபாத்தியாயரிடம் ஏற்பட்டிருந்த தெளிவை மேலும் துலக்கி விடுகிறது.

“சாத்திரியார் நல்ல பொருத்தம் என்று சொன்னவர்” என்று ஒரு பொய்யைச் சொல்லித் திருமணத்தை நடத்தி விடுவது என்ற திடமான முடிவுடன் வெளியேறி, விழிப்புடன் நிமிர்ந்து நடக்கிறார் உபாத்தியாயர்.

(1979 ஒக்டோபர் ‘மல்லிகை’ இதழில் பிரசுரமானது.)

☆ ☆ ☆

4

# குரூர ரசனைகள்

வெளியில் மழை சன்னமாகத் தூறிக்கொண்டிருந்த போது தான் அந்தச் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது.

“தபால் போலை கிடக்கு... போய்ப் பாருங்கோவன்...” அடுப்பில் உலை வைத்துவிட்டு நெருப்புடன் போராடிக் கொண்டிருந்த மீனாட்சி குரல் கொடுத்தாள்.

வெளி விறாந்தையில் போடப்பட்டிருந்த ஈசிச் செயரில் சாய்ந்து படுத்துக்கொண்டு... பக்கத்து வீட்டில் இரவல் வாங்கிய அன்றைய பேப்பர் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்த செல்லையா உபாத்தியாயர் மெதுவாக எழுந்து, ‘பொத்தல்கள்’ பல கொண்ட அந்தப் பழைய குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு படலைக்குப் போனார். மழை பொழிந்து கொட்டாமல் தூறிக் கொண்டிருந்தபடியால் போலும், மழைத்துளி குடையின் துவாரங்களுக்கூடாக உபாத்தியாயரின் தலையை நனைக்கவில்லை.

“யார் கடிதம் போட்டது?”

உபாத்தியாயர் முற்றத்திற்கு வந்தபோது மீனாட்சி உள்ளிருந்தவாறே புதிதான ஓர் ஆச்சரியத்துடன் கேட்டாள். உபாத்தியாயர் பாடசாலையில் படிப்பித்த காலங்களில் என்றால் அடிக்கடி கடிதங்கள் வரும். ‘பென்சன்’ எடுத்த பின்னர் கடிதங்கள் வருவதும் குறைந்துவிட்டது. அவருக்குப் புத்திர பாக்கியமும் கிடையாது. யார் கடிதம் போடப்போகிறார்கள்?

மூக்குக் கண்ணாடியை நிமிர்த்தி விட்டுக்கொண்டே கடிதத்தை விறுவிறென்று உடைத்தார் அவர். அவர் கண்களில் திடீரென ஒரு பரவசம் மின்னியது. புதிய விடயந்தான்!

ஜனரஞ்சக எழுத்தாளர் ஒன்றியத்திலிருந்து அந்தக் கடிதம் வந்திருந்தது. உபாத்தியாயரின் இருபத்தைந்து வருட இலக்கியச் சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி ‘இலக்கிய மன்னன்’ என்ற பட்டமும் சூட்டிக் கௌரவிக்க இருக்கிறதாம் ஜனரஞ்சக

எழுத்தாளர் ஒன்றியம். விழாவிற்கான தேதியும் குறித்து, விழாவில் பாரியார் சகிதம் தவறாமல் வந்து கலந்து கொள்ளும்படி ஒன்றியத் தலைவர் எழுதியிருந்தார்.

கடிதம் முழுவதையும் படித்தவுடன் முகம் முழுவதும் தாமரையென மலர்ந்துவிட்டது உபாத்தியாயருக்கு! வாலிபம் திரும்பிவிட்டதோவெனப் பார்ப்பவர் ஐயுறும்படியான ஒரு துள்ளலுடன் அநாயாசமாக நடந்து கடிதமும் கையுமாக மனைவியின் முன் போய் நின்றார் அவர்.

“பாத்தியே! நெடுக இருந்து எழுதி எழுதி என்னதான் கிழிக்கிறியள்? ஒரு ஐஞ்சு சதத்துக்கு வருமானம் இருக்கோ எண்டு திட்டுறனியெல்லே... வந்திருக்கு இப்ப...”

“என்ன வந்திருக்கு? காசோ? எவ்வளவு... ஆர் அனுப்பினது?” என்று அரிசியில் நெல்லுப் பொறுக்கிக் கொண்டிருந்த அலுவலையும் நிறுத்திவிட்டு நிமிர்ந்து கேட்டாள் மீனாட்சி.

“எந்த நேரமும் உனக்குக் காசு காசெண்டு காசுப் பைத்தியம். மனிதனுக்குக் கௌரவந்தான் பெரிசு. புகழ்தான் பெரிசு. எனக்குப் பாராட்டு விழா வைக்கப் போறாங்களாம்... உன்னையும் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி எழுதியிருக்கு... பாத்தியே உனக்கு வந்த பெருமையை...” உடலை நிமிர்த்தி உசாராகப் பேசினார் உபாத்தியாயர்.

மீனாட்சிக்கும் உள்ளூரப் பெருமைதான். ஆனாலும் கணவருக்கு முன்னால் விட்டுக் கொடுக்காமல்,

“வீட்டிலை எத்தினை வேலையள் காசில்லாமல் முடங்கிக் கிடக்கு... பாராட்டும் கூட்டமும் வைச்சு என்ன பிரயோசனம்...” என்று முனகிக்கொண்டே அரிசியை உலையில் போட்டாள் அவள்.

அன்று மத்தியானம் அவள் பரிமாறிய சோற்றில் விசேடமானதொரு அன்புப் பிரவாகம் கரை புரண்டோடியதை அவர் கவனிக்கத் தவறவில்லை. உள்ளூர மெதுவாகச் சிரித்துக்கொண்டார். அடுத்து வந்த நாட்களில் தனது கணவனுக்கு நடக்க இருக்கும் பாராட்டினைப்பற்றி மிகைப்படுத்தப்பட்ட அலங்காரங்களுடன் ஊரில் உள்ள பெண்களுக்குக் கொட்டி அளந்துவிடவும் மீனாட்சி தவறவில்லை.

அந்த நாளும் வந்தது. பெட்டியின் அடியில் மடித்து வைத்திருந்த பழைய பெங்களூர்ச் சேலையை எடுத்து, பூச்சி அரித்த பகுதியை உள்ளே விட்டுக் கட்டிக்கொண்டாள் மீனாட்சி. வெறுமை வெளியில் சருகாகப் பறப்பது போன்ற ஒரு உற்சாக உணர்வுடன் புறப்பட்டார் உபாத்தியாயர். முற்றத்தில் நின்று வானத்தை நிமிர்ந்து பார்த்தவர்,

“வானம் மப்பும் மந்தாரமுமாகக் கிடக்கு... மழை வரும்போலை இருக்கு மீனாட்சி...” என்றார். வீட்டிலோ அந்தப் பொத்தல் குடை மட்டுந்தான் இருந்தது.

“அந்தக் குடையை நாலு பெரிய மனுசருக்கு முன்னாலை என்னெண்டு கொண்டுபோறது... மழை வராது வாருங்கோ...” என்று கூறிக்கொண்டே முன்னால் நடந்தாள் மீனாட்சி. வீட்டுப் படலையைத் தாண்டி, அதற்கொரு தடியும் வைத்துக் கட்டிவிட்டுப் பின்னால் தொடர்ந்தார் அவர்.

“தங்கமுத்து அக்கா! வீட்டை ஒருக்கா பார்த்துக் கொள்ளுங்கோ... நாங்கள் போட்டு வாறம்...” என்று மீனாட்சி வேலிக்கு மேலே எட்டிக் குரல் கொடுத்தபோது, அக்கம் பக்கத்துப் பெண்களெல்லாம் படலைக்கு வந்து உபாத்தியாயரும் மீனாட்சியும் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றனர். நெஞ்செல்லாம் நிறைந்தது போன்ற ஒரு மகோன்னத உணர்வுடன் பஸ்ஸில் ஏறி அந்தத் தம்பதிகள் விழா மண்டபத்திற்கு வந்தபோது மண்டபத்தில் அதிகம் கூட்டமில்லை. ஏதோ தெய்வ புண்ணியமாக அவர்கள் வந்துசேரும்வரை மழையும் பெய்யவில்லை. மண்டபத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில தலைகள் மாத்திரமே தென்பட்டன. மேடைக்குத் தேவையான கதிரைகளை அடுக்குவதில் அப்போதுதான் சில இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். ஓர் இளைஞர் வந்து... அவர் அந்த ஒன்றியத்தின் செயலாளராக இருக்கலாம்... உபாத்தியாயரையும் மனைவியையும் அழைத்துச் சென்று ஓர் இடத்தில் உட்கார வைத்தார்.

விழா தொடங்குவதாக இருந்த நேரத்திற்கு ஓர் அரை மணித்தியாலம் கழித்துப் பேச்சாளர்கள் ஒவ்வொருவராய் வந்திறங்கினர். விழா வைப்பதற்கென ஒன்றியத்துக்கு நன்கொடை கொடுத்து உதவிய வர்த்தகப் பெருமக்களும் பேச்சாளர்களாக வந்திருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களுமாய் விழா தொடங்கியபோது மேடை நிரம்பி வழிந்தது. ஆனாலும் பார்வையாளர் மண்டபத்தில் கூட்டம் மிகக் குறைவு என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஒன்றியத் தலைவர் உபாத்தியாயருக்கு மாலை அணிவிக்க, ஒரு சிறுமி அவர் மனைவிக்குப் பூச்செண்டு வழங்கச் சம்பிரதாய பூர்வமாகத் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

பேச்சாளர்கள் ஒவ்வொருவராய் எழுந்து நின்றனர். அவர் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளர் என்றார் ஒருவர். அவர் விரசம் இன்றி எழுதுவதே ஓர் அழகென்றார் இன்னொருவர். அவர் கதைகளைப் படிப்பது ஒரு சுகானுபவம் என்றார் வேறொருவர். எழுந்து பேசிய எல்லாருமே உபாத்தியாயரின் இலக்கிய சேவையை ஆனையடா குதிரையடா என்று வானளாவப் புகழ்ந்தார்கள். இப்புகழுரைகளில் ஒரு கணம் லயித்து உபாத்தியாயர் மயங்கித்தான் போய்விட்டார். ஒரு சாமான்ய நிலையில் இருந்து எழுதியவரை இந்தப் பெரிய பெரியவர்கள் எல்லாம் இப்படிப்

புகழ்ந்தால்... மீனாட்சிக்கு உடல் ஒருமுறை சிலிர்த்து ஓய்ந்தது. சில பேச்சாளர்களின் பாராட்டுக்கள் வெறும் அபத்தமாக உபாத்தியாயருக்கே தோன்றிய போதிலும்கூட, எல்லோரது பேச்சுக்களும் முடியும்வரை அவர் மௌனமாகவே உட்கார்ந்திருந்தார். ஊரின் முக்கிய புள்ளியான ஒரு வர்த்தகர் அவருக்குப் பொன்னாடை போர்த்தி 'இலக்கிய மன்னன்' என்ற பட்டத்தையும் அளித்தார்.

இறுதியாக அவரைப் பேசச் சொல்லி அழைத்தபோது, தனது தீட்சண்யமான பார்வையை ஒருமுறை எல்லாப் பேச்சாளர்கள் மீதும் லாவகமாகத் திருப்பிவிட்டு எழுந்த உபாத்தியாயர் வெகு அடக்கத்துடன் இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு அமர்ந்துகொண்டார். மேடையை விட்டு இறங்கும் போது தனது கணவருக்கு ஒரு தனிக் காம்பீர்யம் வந்திருப்பதை மீனாட்சி அவதானித்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் விழா முடிந்த பின்னர், விழா மண்டபத்திற்கு முன்புறம் வந்து பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறார்கள் உபாத்தியாயரும் மனைவியும். திடீரென்று வானம் கறுத்து மேகம் பிளந்துவிட்டதுபோல் மழை கொட்டுகொட்டென்று கொட்டுகிறது. பேச்சாளப் பேராசிரியர்களதும் வர்த்தகப் பிரமுகர்களினதும் கார்கள் ஒவ்வொன்றாக உபாத்தியாயரைக் கடந்து வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. தங்களால் புகழப்பட்ட ஒரு பெரியவர் அப்படி நனைவதைப் பார்த்து ரசிப்பதும் ஒருவித ரசனைதானோ?

உபாத்தியாயரும் மீனாட்சியும் கிளர்ந்தெழும் உள்ளக் குமுறலைச் சுதாரித்துக் கொண்டு மழையில் நனைந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியவர்கள் பேசிய பேச்சுக்களும் புகழுரைகளும் பேசியவர் பெயருடன் அடுத்த நாளையப் பத்திரிகைகளில் வெளிவரும் ஆனால்... மழையில் நனைந்து கொண்டிருக்கும் உபாத்தியாயரைக் காரில் ஏற்றிச் சென்றது பற்றியோ, அல்லது ஏற்றிச் செல்லாதது பற்றியோ பத்திரிகைகளில் வரப்போகிறதா என்ன? வேறு வேலை இல்லை... போங்கள்!

(1980 ஆனி மாதச் சுடரில் பரிசுக் கதையாகப் பிரசுரமானது.)

☆ ☆ ☆

5

# எல்லைகள்

வானத்தில் கொஞ்சம் கருமுகில்கள் காணப்பட்டாலும், சூரியனின் கிரணங்கள் கிழக்குத் திசையில் இருந்து புறப்பட ஆரம்பித்துவிட்டன. கருமுகில் படைகளின் எல்லைகள் அழிந்தழிந்து புதிதாக உருவாகின்றன.

தோட்டத்தில் வெங்காய இறைப்பு முறை என்றபடியால், கந்தப்பர் விடியமுன் எழுந்து மிசினையும் இழுத்துக்கொண்டு தோட்டப்பக்கம் போய்விட்டார். இரவு நீர் ஊற்றி வைத்திருந்த பழஞ்சோற்றை ஒரு மண் சட்டியில் கொட்டி, துண்டு துண்டாக வெட்டிய வெங்காயத்தையும் பச்சை மிளகாயையும் அதற்குள் போட்டுத் தேசிக்காய்ப் புளியும் மோரும் விட்டுப் பிசைந்து, பனாட்டுத் துண்டை ஒரு கையில் ரசித்துக் கொறித்தபடி, மற்றொரு கையில் பலாவிலையைக் கோலி, அதற்குள் பிசைந்த பழஞ்சோற்றை அள்ளிப்போட்டு, வயிறு நிறையும்வரை குடித்தாள் செல்லாச்சி. கந்தப்பர் காலையில் எதுவும் சாப்பிடுவதில்லை. வெறுந் தேநீர் மட்டும் குடித்துவிட்டுத் தோட்டப்பக்கம் போனால், மத்தியானம் இரண்டு மணிக்கு மேல் வந்துதான் சாப்பிடுவார். பன்னிரண்டரைக்குப் பின்னர் உலை வைத்தாலும், 'பக்ரறிச் சங்கு' இரண்டு மணிக்கு ஊத முன்னர் சமையலை முடித்துவிடுவதில் செல்லாச்சி கெட்டிக்காரிதான். சோறும் மரவள்ளிக் கிழங்குக் கறியுந்தானே!

பன்னிரண்டரை மணிவரை நீண்டு கிடக்கும் இந்த நேரத்தில் இன்று எப்படியும் ஒரு நாலு பூவரசங் கதியாலாவது வெட்டி வேலி இல்லாமல் கிடக்கும் பனங்காணிக்குப் போடவேண்டும். கந்தப்பரின் பனங்காணிக்கும், அவரின் மச்சான் சின்னத்தம்பரின் வீட்டிற்குமிடையில் உள்ள வேலி பல வருடங்களாக அடையாமற் கிடந்து இழுபடுகிறது. எல்லைக்கு அடையாளமாக இருப்பது நன்றாகப் பருத்து வளைந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறி நிற்கும் மூன்றுநாலு முட்கிழுவைகள் மாத்திரமே!

தாழ்வாரத்தில் கிடந்த முக்காலியை எடுத்து வைத்து அதன்மேல் ஏறி, வீட்டு வேலியில் ஐந்தாறு பூவரசங்கதியால்களை வெட்டிக்கொண்டு, பாரையையும் எடுத்துக்கொண்டு காணிக்குப் போனாள் செல்லாச்சி. இரண்டு கிழுவங்கதியாலுக்குமிடையில் கயிறு கட்டிக்

கயிற்றுக்குத் தெற்குப்புறமாக அதாவது உபாத்தியாயர் சின்னத்தம்பரின் வளவுப் பக்கமாய்க் கிடங்கு கிண்டி, கயிற்றை அவிழ்த்துவிட்டுக் கதியால்களைக் கிடங்கில் வைக்கும்போது வீட்டு விறாந்தையில் நின்று மெதுவாக எட்டிப் பார்த்தாள் தங்கமுத்து.

"என்ன... செல்லாச்சி மச்சாள்! கதியால் போடுறியள் போலை கிடக்கு..." விறாந்தையில் நின்றபடியே உரத்துக் குரல் கொடுத்தாள்.

"ஓம் தங்கமுத்து..! எத்தினை வருஷமாத்தான் எல்லையில்லாமல் கிடக்கிறது! பனங்காய், விறகுகளுக்கு ஒரு அறுக்கை இருக்கத்தானே வேணும்..."

வலிந்து வரவழைத்த ஒரு புன்னகையைத் தனது முகத்தில் தொற்றவிட்டுச் செல்லாச்சி பதிலளித்தாலும்கூட, பனங்காயும் விறகும் தாங்கள் களவெடுப்பதாக இவள் சொல்லாமல் சொல்கிறாளோ என ஓர் ஐயப்பாடு மனதில் உதிக்க, அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலே,

"ஓமோம்! போடத்தான் வேணும்!" என்று சொல்லிக்கொண்டே படியிறங்கித் தனது பருத்த தேகத்தையும் இழுத்துக்கொண்டு வேலிப்பக்கமாக அசைந்து வந்தாள் தங்கமுத்து. இதற்குள் கதியாலை நிறுத்தி, மண்போட்டு, பாரையின் அடிப்பாகத்தால் உரம் போட்டுக்கொண்டிருந்தாள் செல்லாச்சி. அண்மையில் வந்து பார்த்தாளோ இல்லையோ, தங்கமுத்துவின் குரலில் திடீரென ஒரு மாற்றம் தென்பட்டது.

"என்ன? கேக்க ஆக்களில்லை எண்டு நினைச்சுக்கொண்டு நினைச்சபடி அடைக்கப் போறாய் போலை கிடக்கு..."

இப்போது மச்சாள் என்ற உரிமை, நீங்கள் என்ற மரியாதைப் பன்மை எல்லாம் மெதுவாக ஓடி ஒளிந்து விட்டன.

"ஏன் என்ன பிழை?"

கீழே இருந்தபடியே தலையை நிமிர்த்தி, கண்களைச் சுருக்கித் தங்கமுத்துவைப் பார்த்தாள் செல்லாச்சி.

"என்ன பிழையோ? பழைய கதியால் எங்கை நிக்குது? புதுக்கதியால் எங்கடை வளவுக்குள்ளை ஒரு முழம் தள்ளி நிக்குது... களவாக் காணி பிடிக்கிற பழக்கம்..." தனக்குள் சொல்வது போல அந்தக் கடைசி வசனத்தைத் தங்கமுத்து முணுமுணுத்தாலும்கூட அது செல்லாச்சியின் காதில் விழுந்ததோ இல்லையோ அவளின் மனம் கொதித்துக் கனக்க, வெஞ்சினம் தொனிக்கும் குரல் உச்சஸ்தாயியில் ஏறி ஒலித்தது.

"பொத்தடி வாய்! ஆர் களவாக் காணி பிடிக்கிறது? உங்கடை பரம்பரையிலைதான் உந்தப் பழக்கங்கள். நான் கயிறு கட்டி நேராகத்தான் போட்டிருக்கிறன்..."

தங்கமுத்துவுக்கு இப்போது ரோசம் வந்துவிட்டது. சேலையை இழுத்துச் சொருகிக்கொண்டு, தனது ஆனைக்கால் போன்ற கையை மடித்து நீட்டிக் காலை ஒரு அடி முன்னால் வைத்துத் தனது தடித்த குரலை உயர்த்தி,

"என்னைப் பொத்தடி வாய் எண்டு சொல்ல நீ ஆரெண்டு கேக்கிறன்... சொல்லுவியோ... சொல்ல ஆளாவிட்டியோ... எப்ப வந்த பணம் உங்களிட்டை... வீணா வாயைக் காட்டினா உன்ரை மண்வெட்டிப் பல்லைக் கொட்டிக் கையிலை தருவன்... ஓ..." இரண்டு வசனம் உரத்துக் கதைத்ததில் தங்கமுத்துவுக்கு மூச்சு இரைத்தது.

பலமாகக் கதைப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகின்ற தனது தாய், உரைத்துக் கதைத்த சந்தடி கேட்டு உள்ளிருந்து வெளியேறி சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு வந்தான் தங்கமுத்துவின் மகன் நந்தகுமார்.

"அம்மா, ஒரு அரை அங்குலக் காணிக்காண்டி வீணா என் சண்டை பிடிக்கிறியள்? போங்கோ உள்ளை... மாமி நீங்களும் போங்கோ"

தன்னை ஓர் 'இண்டலெக்சுவல்' என்று எல்லாரிடமும் சொல்லிக்கொள்கிற நந்தகுமார் நியாயமாகவே பேசினான். ஆனால் தங்கமுத்து அவனைப் பேசவிடவில்லை.

"நீ போ மோனை உள்ளுக்கு... உனக்கு உவையின்ரை குணம் தெரியாது" என்று மெதுவாகத் தொடங்கி,

"இடம் குடுத்தால் தலைக்கு மேலை ஏறி நிப்பினம்... இண்டைக்கு அரை முழம் பிடிப்பினம். நாளைக்குக் காணி முழுவதும் தங்களின்ரை எண்டு நிப்பினம்..." என்று படிப்படியாக உயர்த்தி,

"விட்டிட்டுப் பேசாமல் நிற்கிறதே?" என்று உச்சஸ்தாயியில் முடித்தாள்.

செல்லாச்சியும் தங்கமுத்துவும் பிரச்சினைப் படுகிறார்கள் என்ற செய்தி ஊரில் உள்ள செய்தி காவும் அலுவலர்களால் விரைவில் கடத்தப்பட்டுத் தோட்டத்தில் இறைத்துக் கொண்டிருந்த கந்தப்பருக்கு எட்டிவிட்டது. அவர் இடுப்பில் சொருகிய குழைக் கத்தியும் தலைப்பாகையுமாக விரைந்து நடந்தார் - பனங்காணியை நோக்கி!

இவ்வளவும் நடக்கும் வரை 'இருண்டது விடிஞ்சது' தெரியாமல் பேப்பர் படித்தபடி ஈசி செயரில் படுத்து நித்திரையாகிப் போய்க்கிடந்த சின்னத்தம்பு உபாத்தியாயர், மகன் வந்து எழுப்பிய பின்னரே சோம்பல் முறித்தபடி எழுந்து வந்தார்.

வேடிக்கை பார்க்கவென ஒழுங்கையில் சேர்ந்துவிட்ட பத்துப் பன்னிரண்டு பேருக்கிடையில் பஞ்சுப் பரியாரியார் மாத்திரம் சமரசம் செய்யவென முன்னுக்கு வந்தார்.

"என்ன செல்லாச்சி அக்கா, உதுக்கெல்லாம் அடிபிடிப்படு கிறதே... மச்சாளும் மச்சாளும்... ஒண்டுக்கை ஒண்டு... கோட்டுக்குப் போனால் எத்தினை ஆயிரம் செலவு... ஒரு மாதிரிப் பார்த்துச் சமாதானமாப் போங்கோ அக்கா..."

செல்லாச்சி செய்தது பிழை என்று ஒரு பத்துப் பேருக்காவது நிரூபிக்காமல் சமரசம் செய்யக்கூடாது என்று நினைத்த தங்கமுத்து,

"அண்ணை, நீங்கள் தலையிடாதேங்கோ... உவையள் தங்கடை வீட்டுக்குத் தெற்காலிக் காணியையும் உப்பிடித்தான் ஒரு முழம் ஒரு முழமா ஒரு பரப்புப் பிடிச்சுப் போட்டினமாம். முத்தர் அளந்து பாக்க... அவற்றை காணி இப்ப இரண்டு பரப்புக் குறையுதாம். அந்தச் சேட்டை எங்களிலையும் விடப் பாக்கினம். உது என்னட்டைச் சரிவராது" என்று மூச்சு இரைக்க இரைக்க நிறுத்தி நிறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, விழுந்து கிடந்த தலைமயிரை ஒரு முறை அள்ளி முடித்துக்கொண்டு முன்னுக்கு வந்த செல்லாச்சி, தங்கமுத்துவின் குரலுக்கு மேலே கேட்கும்படி குளறிக் குளறிச் சொன்னாள். வார்த்தைகள் சிதறிப் பறந்தன.

"ஆற்றை கோழி காணிக்குள்ளை வந்தாலும் உடனை பிடிச்சு அறுத்துக் காச்சுறது எங்களுக்குத் தெரியாதெண்டு நினைச்சின மாக்கும்..."

"ஆரடி அது? கள்ளக் கோழி பிடிக்கிறதெண்டு சொல்ல நீ ஆரடி?"

என்று கதறிய தங்கமுத்து அதற்கு மேல் உரத்துக் கதைக்க முடியாமல் கோபத்திலும் பயத்திலும் உடல் பதறிப் பின்னே திரும்பி,

"இஞ்சை பாருங்கோவன் - இவள் என்னைக் கள்ளக் கோழி பிடிச்சதெண்டு சொல்லுறாள். நீங்கள் கேட்டுக்கொண்டு நிக்கிறியள் இன்னொரு ஆம்பிள்ளையெண்டா..."

என்று உபாத்தியாயரைத் துணைக்கு அழைத்து அவரின் ரோசத்தையும் தூண்டிவிட்டாள். இதுவரை தனது மனைவி எதற்காகச்

சண்டையிடுகிறாள் என்பது புரியாதவராய் விழித்துக்கொண்டு நின்ற உபாத்தியாயர், தங்கமுத்து கண்களைக் கசக்கிக் கொண்டதைக் கண்டதும் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு,

"செல்லாச்சி பெண்ணாய்ப் பிறந்தவளாய்க் கிடக்கு. இல்லாட்டி இப்ப நடக்கிற சங்கதி வேறை..." என்று வீர வசனம் பேசி நிலத்தில் கிடந்த செல்லாச்சியின் கத்தியையும் கையில் எடுத்துக்கொண்டார். செல்லாச்சி ஒரு பெண் என்றபடியால்தான் உபாத்தியாயர் கத்தியைக் கையில் எடுத்தார் என்பதும், முன்னால் ஓர் ஆண்மகன் நின்றிருந்தால் அவர் துணிந்து சண்டைக்குப் போக மாட்டார் என்பதும் ஊர் அறிந்த இரகசியம். தனது வீரத்தைச் சோதிப்பதற்கு ஓர் உரைகல்லாக இந்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்த விரும்பினார்.

உபாத்தியாயர் கையில் கத்தியை ஓங்கிக்கொண்டு நிற்பதையும் தனது மனைவி உரத்துக் கத்துவதையும் தூரத்தில் வரும்போது பார்த்துவிட்டுக் கத்தியுடன் ஓடிவந்தார் கந்தப்பர். கோபத்தில் அவர் மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன.

"செல்லாச்சியைத் தனிய வைச்சுக்கொண்டு அவை புருஷனும் பெண்டிலுமா வெருட்டினமோ... நான் ஒருத்தன் இருக்கிறதை மறந்து போச்சினம் போலை..."

கந்தப்பர் ஓடிவருவதைக் கண்டுவிட்டு, ஓங்கிய கத்தியைத் தாழ்த்திக்கொள்வது கௌரவக் குறைவு என்று நினைத்த உபாத்தியாயர், அந்தக் கத்தியால் செல்லாச்சி போட்டிருந்த கதியால்களையெல்லாம் தயவு தாட்சண்யமின்றிப் பரபரவென்று வெட்டிக்கொட்டினார்.

கந்தப்பரின் சிவந்த விழிகளையும் துடிக்கும் கைகளையும் தூரத்திலேயே கண்டுவிட்ட உபாத்தியாயரின் மகன் - அந்த இன்ரலெக்சுவல் - விசயம் விபரீதமாகப் போவதாக எதிர்பார்த்து முற்றத்தில் சாத்தியிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு பொலிஸ்டேசனுக்கு ஓடினான்.

"செல்லாச்சி போட்ட கதியாலை வெட்டிறியோ... நீயோ" என்று கந்தப்பரும் கதியாலும் உபாத்தியாயரும் இழுபறிப்பட்டதில், கந்தப்பரின் கத்தி உபாத்தியாயரின் கையைக் கீறிவிட்டது.

"கந்தப்பர் என்னை வெட்டிப் போட்டான்..." என்று கத்திக் கொண்டே உபாத்தியாயர் வீட்டுக்குள் ஓட, தனது தேகத்தைச் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு அவரின் பின்னால் ஓடினாள் தங்கமுத்து. எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியாமல் அதற்குள் கூடிவிட்ட இருபத்தைந்து முப்பது ஊர்ச்சனம் கந்தப்பரையும் செல்லாச்சியையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

தான் போட்ட கதியால்களை வெட்டினார் என்று உபாத்தியாயர் மேல் வழக்குப் போட்டிருக்கிறார் கந்தப்பர். தனக்குக் கத்தியால் குத்த முயன்றார் என்றும், மனைவியை அவமானப்படுத்தினார் என்றும் உபாத்தியாயர் வழக்குப் போட்டிருக்கிறார்.

"வழக்குச் செலவு எவ்வளவு? ஓர் அங்குலக் காணியின் பெறுமதி எவ்வளவு?" பஞ்சுப் பரியாரியார் உபாத்தியாயரிடம் கேட்டார்.

"பெறுமதி பற்றி ஒண்டுமில்லைக் காணும். செல்லாச்சி, கந்தப்பர் செய்தது பிழையெண்டு நீதவான் சொல்ல வேணும்." உபாத்தியாயரின் குரலில் கடுகடுப்பு ஓயவில்லை. சொந்தங்கள் எல்லாம் பிசிறின்றி அறுந்துபோவது பற்றி, மச்சான், மச்சாள் என்ற நெருங்கிய உறவுகளுக்கிடையில் பெரிய எல்லைகள் போடப்பட்டு விட்டது பற்றி யாருக்கு என்ன கவலை?

(1980 மார்ச் மாத மல்லிகையில் பிரசுரமானது.)

☆ ☆ ☆

6

# உறுத்தல் வருடப்படுகிறது

தனது கம்பீரம் கலையாத மிடுக்குடன் அதிபர் என்னைக் கூப்பிட்டு, “இங்கிலிஸ் ரீச்சர் இன்றைக்கு வரேல்லை, ஆனால் பரீட்சை நேர அட்டவணையிலை இன்றைக்கு ஒன்பதாம் வகுப்பு இங்கிலிஸ் இருக்கு. நீங்கதான் அதை டெஸ்ற் பண்ணி மாக்ஸ் எடுத்துத் தரவேணும்” என்று சொன்னபடியால் ஏதோ பட படவென்று சில வினாக்களைத் தயார் செய்துகொண்டு அந்த வகுப்பினுள் நுழைகிறேன்.

முதலாம் கேள்வி ‘ஸ்பெலிங்’. நான் கூறிய ஐந்து சொற்களையும் மிக உன்னிப்பாகக் கவனித்து மாணவர்கள் எல்லாம் பதில் எழுதிவிட்டனர். இரண்டாம் கேள்வி ஆரம்பத்தில் “அறெஞ் த வேட்ஸ் இன் த கரெக்ட் ஓடர்” என்று நான் சொன்னதைக் கிரகித்துக்கொள்ள முடியாத ஒரு மாணவன் கேட்டான்,

“தமிழிலை சொல்லுங்கோ ரீச்சர். என்ன செய்யிறது எண்டு விளங்கேல்லை.”

“ஒரு வசனத்தின் சொற்களை நான் குழப்பி எழுதிறன், நீங்கள் சரியாக்கி எழுதுங்கோ” நான் சொல்லி வாய் மூடவில்லை,

“ரீச்சர் உது கஷ்டமான வேலை. நீங்கள் சரியாக்கி எழுதுங்கோ. நாங்கள் குழப்பி எழுதிறம்...” முதலாம் வாங்கின் வடக்குப்புற மூலையில் உட்கார்ந்திருந்த பிரேம்குமார் மிக லாவகமாய் நான் சொன்ன அதே தொனியில் சொல்லிவிட்டுப் பூனைபோல் உட்கார்ந்திருக்க வகுப்பு முழுவதும் குபீரெனச் சிரித்தது. எனக்கு அவன்மீது கோபிக்க முடியாமல் போனது மட்டுமல்ல, முகத்தில் தோன்றிய முறுவலையும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரேம்குமார்... அவன் இப்படித்தான் ஒரு தனிப்பிறவி. ஒரு ‘யுனிக் ஸ்ருடன்ற்’ வகுப்பை எப்போதும் ‘உம்’ என்று இல்லாமல் கலகலப்பாக வைத்துக்கொள்வான். இறுதியில், பாடங்களில் வகுப்பின் அதிகூடிய புள்ளி எதுவோ அதையும் அவனே தட்டிக்கொண்டு வகுப்பில் முதல் மாணவனாக வந்துவிடுவான்.

சோதனைகள் யாவும் முடிந்தபோது அந்த வகுப்பின் வகுப்பாசிரியர் என்பதால் பருவத் தேர்ச்சி அட்டவணை நானே

தயாரிக்கவேண்டி இருந்தது. நான் குழப்பி எழுதிய சொற்களையெல்லாம் சரியான முறையில் ஒழுங்கு படுத்தி, ஏனைய கேள்விகளிலும் தன் திறமையைக் காட்டிப் பிரேம்குமார்தான் ஆங்கிலத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்றிருந்தான். ஆங்கிலத்தில் மட்டுமல்ல எனது பாடமான கணிதத்திலும் வழக்கம்போல அவனே மிக அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தான். அடுத்ததாக விஞ்ஞானப் புள்ளி பதிந்தபோது, இவன் நாற்பது புள்ளி மட்டுமே பெற்றிருக்க ரவி எண்பத்து மூன்று புள்ளி பெற்றிருப்பதை எதேச்சையாகக் கண்டு நானே விக்கித்துப்போனேன். ரவியும் கெட்டிக்காரன்தான் என்றாலும் ரவியைவிடப் பிரேம்குமாரின் நுண்மதி திறமையாகத் தொழிற்படக்கூடியது என்பது எல்லா ஆசிரியர்களுக்கும் துல்லியமாகத் தெரிந்த ஒரு விடயம்.

ஒரு பாடத்தில் ரவி அதிகமாய்ப் பெற்றுவிட்ட நாற்பத்துமூன்று புள்ளிகள் வகுப்பு நிலையிலும் பிரேமை இரண்டாமிடத்திற்குத் தள்ளிவிட இம் மாற்றத்திற்குக் காரணம் புரியாத ஒரு மன உறுத்தலோடு நான் அடுத்தநாள் வகுப்பினுள் நுழைந்தேன். சௌமியமான அந்தக் காலைப் பொழுதில் வகுப்பும் மிகக் கலகலப்பாக இருந்தது. நான் போய் அமர்ந்த உடனேயே ரவி 'பிஸ்கற்' தட்டு ஒன்றைக் கொண்டுவந்து நீட்டினான்.

"என்ன ரவி விசேஷம்?" என்று கேட்டேன். "விஞ்ஞானத்திலை கூட மாக்ஸ் எடுத்ததற்கும் வகுப்பிலை முதலாம் பிள்ளையாய் வந்ததுக்கும்..." என்று நெளிந்தான். இப்படித்தான் ரவி ஒரு சிறு விடயம் என்றாலும் பெரிதாகக் கொண்டாடுவான். வீட்டிலே பணம் தேவைக்கு மிகுதியாய் இருந்தால் அவனும் வேறு என்னதான் செய்வது!

பிரேம்குமாரை என் கண்கள் தேடியபோது அவன் கடைசி வாங்கில் ஒரு மூலையில் தலை கவிழ்த்துப் படுத்திருப்பதைக் கண்டு அருகில் போய் என் கையில் இருந்த தடியால் அவன் முதுகில் மெதுவாகத் தட்டிப் பார்த்தேன். தலையை நிமிர்த்திப் பார்த்தவன் என்னுடைய தட்டுதலை உதாசீனம் செய்தது போல் மீண்டும் படுத்துக்கொண்டான். அவன் தலை நிமிர்த்தி என்னைப் பார்த்தபோது கண்களில் நீர் திரையிட்டு நின்றதை நான் கவனிக்கத் தவறவில்லை.

அவனது உள்ளத்தில் ஏதோ கீறல் விழுந்திருக்கிறது என்று எனக்குப் புரிந்தது. இல்லாவிட்டால் என் சுரண்டலை இப்படி உதாசீனம் செய்யமாட்டான்.

"ரீச்சர், தேவையில்லாமல் எனக்கு அடிக்க வாறீங்கள்... நான் கட்டாயம் கோவம் போடுவன்... இனிமேல் யாரைக் கொண்டு 'சோக்' எடுப்பிப்ப எண்டு பாப்பம். யாரைக் கொண்டு 'பிளாக் போட்' அழிப்பிப்ப பாப்பம்... நான் கடைசி வரையும் கதைக்க மாட்டன். பின்னை ஏன் எனக்குத் தேவையில்லாமல் அடிக்க வாறா..." என்று பொரிந்து தள்ளிவிடுவான். அவன் இவ்வாறு பொரிவதைக் கேட்டு உள்ளுக்குள்

ரசிப்பதற்காகவே நான் அவனை வலுச் சண்டைக்கு இழுத்துச் சுரண்டுவது உண்டு. இன்று...! என் சுரண்டலுக்கு அவன் எடுபடவில்லை என்பதிலிருந்து அவன் உள்ளம் கறைபட்டிருப்பது எனக்குப் புரிந்தது. அவன் ஒன்றும் பேசாமல் இருந்ததே என் உள்ளத்தை வெதும்பச் செய்தது.

அடுத்த பாட நேரம்... நான் அடுத்த வகுப்பில தனியே போய் இருந்துகொண்டே அவனைத் தனியாகக் கூப்பிட்டனுப்பினேன். வந்தான்.

"என்னடா பிரேம்... ஏன் அழுகிறாய்?" சுற்றி வளைக்காமல் நான் நேரே விடயத்திற்கு வருகிறேன்.

"ஒண்டுமில்லை ரீச்சர்" என்று சிணுங்கியவன் உண்மையில் அழுதே விட்டான். நிஷ்கபடமான அந்த முகத்தை உற்றுப் பார்த்தபடியே அவனை அருகில் அழைத்து,

"பிரேம்குமார் சொல்லு... உனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படி இருக்கிறாய்?" என்று கேட்டேன். உள்ளக் குமுறலில் சிறிது நேரம் தயங்கியவன் ஒருவித விறைப்புடன் சொன்னான்,

"சயன்சிலை ரவி என்னைவிட இரண்டு பங்கு மாக்ஸ் எடுத்துப்போட்டான்." எனக்கு அவனது ஆதங்கம் புரிந்தது. பணத்தாலும், அந்தஸ்தாலும், வீட்டுச் சூழ்நிலையாலும் ரவி உயர்ந்தவன் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாக இருந்தாலும், படிப்பில், திறமையில், ஆசிரியர்களின் நன்மதிப்பில், தானே ரவியைவிட உயரம் என்று நம்பியிருந்த பிரேமை... இந்தத் தோல்வி தகர்த்தெறிந்துவிட்டது. அவனது மனோ ராஜ்யக் கற்பனைகள் யாவும் சிதைந்துவிட்டன. எனக்கு அதுவும் புரிந்தது. ஆனால் இவனுக்குப் புள்ளி ஏன் குறைந்தது என்பது மட்டும் புரியவில்லை.

"ஏன் நீர் படிக்காமல் இருந்தனீர்? கவனமாய்ப் படிச்சிருந்தால் ரவியிலும்கூட எடுத்திருக்கலாமே?" என்று நான் கேட்டதில் அடம்பிடித்த அவன் நினைவுகள் எல்லாம் கோபமாக மாறிவிட்டன போலும்... பதட்டத்துடன் சொன்னான்,

"நான் வகுப்பிலை படிப்பிச்சதெல்லாம் படிச்சனான்தானே! படிப்பியாததெல்லாம் கேள்வியிலே வந்திருக்கு. அப்ப நான் என்னண்டு படிக்கிறது? உங்களுக்கு ஒண்டும் தெரியாது..." கண்களில் கரைகட்டி நின்ற நீரெல்லாம் வழிந்தோடியது.

"சரியடா, அப்ப ரவி எப்பிடிப் படிச்சவன்?" அவனது கூர்வுணர்ச்சி இப்போது எல்லை மீறி படபடவென்று பொரிந்து தள்ளினான்.

"உங்களுக்கு ஒண்டும் தெரியாது... அவனுக்கு டியூசன் மாஸ்டர் வீட்டை வந்து சொல்லிக் குடுக்கிறவர். மாதம் இருநூறு ரூபா டியூசனுக்குச் செலவு. சயன்ஸ், மத்ஸ்க்கு ஒரு மாஸ்டர். இங்கிலிஸ் சமூகக் கல்விக்கு ஒரு ரீச்சர். தமிழ் சமயத்திற்கு ஒரு மாஸ்டர். அப்பிடிப் படிச்சால் நூறு மாக்ஸ்சும் எடுக்கலாம்தானே. எங்கடை சயன்ஸ் ரீச்சர் ஒரு மாதம் பள்ளிக்கூடமே வரேல்லை... உங்களுக்கு ஒண்டும் தெரியாது..."

தனது கவலை, ஆதங்கம் எல்லாவற்றையும் கோபமாக மாற்றி என்மேல் கொட்டித் தீர்த்துக்கொள்கிறான் என்ற அடிப்படையில் உளவியல் எனக்குப் புரிந்தது.

"அப்ப... உனக்கும் டியூசன் எடுக்க விருப்பமோ?"

"உங்களுக்கு விசர்தான் டீச்சர்... நான் என்னெண்டு ரியூசன் எடுக்கிறது? காசு தாறது நீங்களே...?" தனது கவலைக்கிடையிலும் சிரித்துக்கொண்டு குத்தலாகக் கேட்டான். நானோ எந்தவித போலித் தன்மையும் இன்றி குரலில் ஒரு பிரத்தியேக ஆரோக்கியத்துடன்,

"என்னாலை காசு தர முடியாதடா, ஆனால் உன்னிடம் காசு வாங்காமல் டியூசன் சொல்லித்தர முடியும். சயன்ஸ், மற்ஸ், இங்கிலிஸ் எல்லாம் சொல்லித் தாறன். என்னடா வாறியா?" என்று நான் கேட்டபோது அவனால் நம்பமுடியவில்லை.

"சும்மா பகிடி விடாதேங்கோ...!" என்றவன் "இல்லையடா பிரேம், உண்மையாத்தான் சொல்லிறன்" என்று நான் மீண்டும் எனது வார்த்தைகளை உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து, அவன் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிவதை நான் பார்த்துக்கொண்டே இருக்கிறேன்.

(பலாலி ஆசிரியர் கலாசாலை - 1979 'எழில்' சஞ்சிகையில் பிரசுரித்தது.)

☆ ☆ ☆

7

# நாளைய உலகின் நாயகர்கள்!

நான் அந்தக் கல்லூரிக்கு அதிபராகப் போகப் போகிறேன் என்று எங்கள் பாராளுமன்ற உறுப்பினரை 'வால்' பிடித்தவன் அல்ல. என்னைப் பொறுத்தவரையில் எந்தக் கல்லூரியில் என்ன பதவியில் இருந்தாலும் ஒன்றுதான் கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும். எங்கேயும் மனம் வைத்தால் அதைச் செய்யலாம் என்ற நம்பிக்கை இன்றும் எனக்குள் மரணித்துப் போய்விடவில்லை.

ஆனால் அந்தக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்தான் முழு மூச்சாய் நின்று யார் யாரின் காலையோ கையையோ பிடித்து இந்த இடமாற்றத்தைச் செய்வித்திருக்கிறார் என்று அறிந்தபோது நான் அதை மறுக்கவுமில்லை. தானாக என்னைத் தேடி வருகின்ற ஒரு பதவி உயர்வு, மறுப்புச் சொல்வதற்கு எனக்கு என்ன பைத்தியமா? மனதில் ஒரு சுகானுபவமான உணர்வு தலைதூக்கிற்று அப்போது.

"பழைய பிரின்சிப்பல் சொந்த ஊருக்கு ரான்ஸ்பர் எடுத்துக் கொண்டு போறார். நீங்கள் அங்கே பிரின்சிப்பலாய் வரவேண்டும்" என்று அந்த அபிவிருத்திச் சங்கச் செயலாளர் என்னிடம் வந்தபோது இதற்கு ஏதும் பிரச்சினையான பின்னணி இருக்குமென்று நான் கற்பனை செய்யவுமில்லை.

அடுத்தநாள் நான் புதிய கல்லூரியில் அதிபராகப் பெறுப்பேற்க வேண்டும். முதல்நாள் மாலையில்தான் 'ஏதோ பிரச்சினை' என்று நான் அறிந்தேன். அப்போதும் எனக்கு விடயம் சரியாகப் புரியவில்லை.

ஒருநாளும் தளவாடியில் முகம் பார்த்தறியாத நான் அன்று காலையில் கல்லூரிக்குப் புறப்படமுன் தளவாடியில் முகம் பார்த்தேன். ஒரு கல்லூரியை ஆள்வதற்குரிய 'ஆளுமை' என்னிடம் இருக்கிறதா? என்று உள்ளத்தில் ஒரு மூலையில் தோன்றிய சந்தேகக் கீற்றின் பிரதிபலிப்பே அந்தச் செயல்.

அக்கல்லூரியின் பழைய அதிபரை எனக்குத் தெரியும். அவருடைய தோற்றத்தை ஒருமுறை மனக்கண்ணில் இழுத்து வைத்து நிறுத்திப் பார்த்தேன்.

சிவப்பு நிறத்தில் கட்டை மனிதர். பத்துப்பேர் அவர் தோளில் ஏறி உட்கார்ந்து கொண்டாலும் கண்டித்து இறக்கத் தெரியாத அப்பாவி மனிதர். அவரே இக்கல்லூரியை இதுநாள்வரை நடத்தி விட்டாராம். என்னால் முடியாதா? மனதில் ஒரு நம்பிக்கை துளிர்க்கச் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். அந்தப் புதிய 'ஏசியா பைக்' எனது உற்சாகத்திற்கு ஏற்ப லாவகமாயும் வேகமாயும் பறந்தது.

இதுவரை இன்னொருவருக்குக் கீழே 'உப அதிபர்' என்று இருந்து வந்த நான் இன்றுமுதல் 'அதிபர்'. போய்ச் சேர்ந்தவுடன் எல்லா மாணவர்களையும் ஹாலுக்கு அழைத்து ஒரு 'அசெம்பிளி' வைக்க வேண்டும். அப்போதே எனது நிர்வாகத்தில் இருக்க வேண்டிய கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் பற்றிக் கண்டிப்பாய்ச் சொல்லிவிட வேண்டும். இரண்டு மூன்று நாள் விட்டுக் கொடுத்துத் தளரவிட்டால் பின்னர் உயர் வகுப்பு மாணவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாது. மாலையில் 'ஸ்ராவ் மீற்றிங்' போட்டு ஆசிரியர் ஒழுக்கக்கோவை ஒன்று தயாரிக்க வேண்டும். அதேவேளையில் 'ஸ்ராவுக்கு' என் செலவில் இன்று 'ரீ' தரவேண்டும். ஏதேதோ சிந்தனைகளில் மனம் பறக்கச், சைக்கிளின் வேகம் அதை முந்திக்கொண்டு கல்லூரிக்கு அண்மையில் வந்துவிட்டது.

அப்போதுதான் அந்தக் காட்சியை நான் திடுமென்று தரிசித்தேன். இரண்டு மூன்று சிறு குழந்தைகள் - முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புப் படிக்கக்கூடிய பாலகர்கள். பின்னே திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் நான் போய்க்கொண்டிருந்த திசைக்கு எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்தார்கள். நான் 'ஏசியா பைக்கை' பிறேக் பிடித்துக் கீழே இறங்கி,

"ஏன் திரும்பி வாறீங்கள் பிள்ளையள்?" என்று மெதுவாகக் கேட்டேன். நான் புதியவன் என்பதாலோ என்னவோ மிகவும் சாதுபோல் தோன்றிய ஒரு பிள்ளை என்னைப் பார்த்துத் 'திருதிரு'வென்று விழித்தது. கொஞ்சம் 'துறுதுறு'வென்று இருந்த மற்றக் குழந்தை.

"இண்டைக்கு பள்ளிக்குடமில்லையாம்" என்றது.

"யார் சொன்னது?" என்று கேட்டேன். கல்லூரிப் பக்கம் பார்த்துத் திரும்பி நின்றுகொண்டு, தன் பிஞ்சுக்கையை அந்தத் திசையில் சுட்டி,

"அங்கை அதிலை நிக்கிற அண்ணையவை சொன்னவை" என்று தீர்க்கமாகச் சொன்னது குழந்தை. அத்திசையில் நோட்டமிட்டேன் நான்.

பதினொராம், பன்னிரண்டாம் வகுப்பில் இருக்கக்கூடிய மாணவர் குழாம் ஒன்று நடுத்தெருவில் படை எடுத்து நிற்பது இப்போது எனக்கும்

தெரிந்தது. ஏதோ நடக்கிறது என்று புரிந்தது. ஆனால் எதற்கு, ஏன் என்று ஒன்றுமாய்ப் புரியவில்லை. அந்தப் பாலகர்களை மீண்டும் பாடசாலைக்கு அழைத்துச் செல்லலாம்தான். ஆனால் என்ன பிரச்சினை என்பதைப் புரிந்துகொள்ளாமல் செயலில் இறங்கினால், ஒருவேளை நானே பிரச்சினையை வலுப்படுத்தியதாய் ஆகிவிடும் என்ற நினைவுடன் அவர்களைப் போக விட்டுவிட்டு முன்னேறிச் சென்றேன். மழை வேறு சன்னதமாகத் தூற்றலடித்துக்கொண்டு என் மன உளைச்சலை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது.

தெருவின் ஓரத்தில் இருந்த அழகிய வீடொன்றின் முன்னால் நின்றுகொண்டு தெருவில் போகிற வருகிற எல்லாருக்கும் 'நோட்டீஸ்' விநியோகம் செய்து கொண்டிருந்த ஒரு மாணவன் என்னை நிறுத்தி எனக்கும் ஒன்று தந்தான். நான்தான் புதிய அதிபர் என்பது அவனுக்குப் புரியவில்லை என்பது எனக்குப் புரிந்தபோது அவனிடம் அநுதாபமாக இருந்தது.

"பழைய அதிபரே இங்கு தொடர்ந்து கடமையாற்ற வேண்டும்."

"வேறு புதிய அதிபர் யாரும் எமக்குத் தேவையில்லை."

"புதியவர்கள் இங்கு வந்தால் நாம் வகுப்புகளைப் பகிஷ்கரிப்போம்."

"சரியான தீர்வு காணப்படாவிட்டால் உண்ணாவிரதம் ஆரம்பிப்போம்."

அந்தத் துண்டுப்பிரசுரத்தின் சில வசனங்களை உன்னிப்பாய்ப் பார்த்துவிட்டுக் கவனமாய் மடித்துப் பொக்கட்டில் வைத்துக்கொண்டு 'ஏசியா பைக்'கைத் தொடர்ந்து செலுத்தினேன்.

எல்லாம் சரிதான். ஆனால் இவர்களுடைய பகிஷ்கரிப்புக்கான காரணம் இன்னமுந்தான் எனக்குள் தெளிவாகவில்லை. அந்த அதிபர்தானே விரும்பிச் சொந்த ஊருக்கு மாற்றலாகிப் போகிறார். ஆகவே இது அவருடைய தூண்டுதலாகவும் இருக்க முடியாது. இவர்கள் என்னதான் கேட்கிறார்கள்?

கல்லூரி வாசலுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த மாணவர்கள் என்னை இனம்கண்டு கொண்டிருக்க வேண்டும். அவர்களில் மிடுக்கான ஒரு மாணவன் "பழைய அதிபரை..." என்று சுருதி சேர்த்துத் தொடங்க மற்ற மாணவர்கள் அனைவரும் சேர்ந்து அதே சுருதியில் "மாற்ற வேண்டாம்..." என்று கோஷமிட்டு முடித்தனர். தொடர்ந்து,

"புதிய அதிபர்" .......................... "தேவையில்லை"
"வகுப்புகளை" .......................... "பகிஷ்கரிப்போம்"

"உண்ணாவிரதம்" ......................... "ஆரம்பிப்போம்"
"பழைய அதிபரை" ......................... "மாற்ற வேண்டாம்"

போன்ற கோஷங்கள் நான் அவர்களைத் தாண்டிக் கல்லூரிக்குள் போகும்வரை ஒலித்துக்கொண்டிருந்தன. அந்த இரைச்சலிலும் அவர்கள் காண்பித்த ஓசை நயம் கோயிலில் காவடி எடுப்பவர்களுக்கு, "வேல் வேல்"......................... "வெற்றி வேல்" கோஷம் போட்டு நன்றாகப் பழக்கப்பட்டவர்கள் என்பதைக் காட்டியது. அந்த லயத்தின் அழகில் ஒரு கணம் மயங்கி லயித்தாலும் மறுகணம் என் மனதில் போராட்டம் தொடர்ந்தது. இவர்கள் எதற்காக என்னை வெறுக்கிறார்கள்? என்னுடன் ஒருநாள் கூடப் பழகாமல்... நெஞ்சிலே ஒரு சிலிர்ப்பு இருந்தாலும் என்னை நானே சமாதானப் படுத்திக்கொண்டு மீண்டும் வீதியின் தொலைவை நோக்கினேன்.

புத்தகங்களும் கையுமாக வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த பல மாணவர்கள்... அவர்கள் எல்லாம் ஒழுங்காகப் பாடசாலைக்குப் படிக்க வந்தவர்கள் என்பதும், இந்த இருபது மாணவர்களே அவர்களைத் திருப்பி அனுப்பி உள்ளனர் என்பதும், ஆக இருபது மாணவர்களே உண்மையில் வகுப்புகளைப் பகிஷ்கரிக்க மிகுதிப்பேர் ஆட்டு மந்தைகளாக அவர்களைத் தொடர்கிறார்கள் என்பதும் எனக்குத் தெளிவாயின.

நான் உள்ளே போய்விட்டேன். நல்ல காலம், அவர்கள் யாருமே என்னை உள்ளே போகவிடாது தடுத்து நிறுத்தவில்லை. தட்டினால் ஒடிந்துவிடும் என்பதுபோல் ஒல்லியாக இருக்கும் நான் நிச்சயமாக அவர்களுடன் 'கராட்டி' போட்டு வென்றிருக்க மாட்டேன். உள்ளே ஆசிரியர்களிடமிருந்துகூட எனக்கு ஆவேசமான வரவேற்பு எதுவும் இருக்கவில்லை என்பது உண்மைதான். அதிகமான ஆசிரியர்கள் கூட்டம் கூட்டமாய் இருந்து 'நிலைமையை' ஆராய்ந்து கொண்டிருந்தனர். ஓர் இளம் ஆசிரியர் மாத்திரம் மிக அவசரமாக என்னிடம் ஓடி வந்தார்.

"வாங்கோ சேர், இந்தக் காலத்துப் பெடியளை அடக்கேலாது, பள்ளிக்கூடத்துக்குள்ளை நிண்ட பிள்ளையளையும் கலைச்சுப் போட்டாங்கள். நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்திட்டன், அவங்கள் கேட்கமாட்டேனெங்கிறாங்கள்."

வலிந்து என்னைத் தேடிவந்து எனக்கு 'ஐஸ்' வைத்த பாணியில் அவர்தான் இம் மாணவர்களுக்குத் தூண்டுகோலாக இருந்திருப்பாரோ என்ற ஐயம் இயல்பாக என் மனதில் எழுந்தது. கண்களில் ஒரு தீட்சண்யமான பார்வையைப் பதியவிட்டபடி,

"பரவாயில்லை மாஸ்டர், அவங்களும் தங்கடை 'ஒபினியனைத்' தெரிவிக்கத்தானே வேணும்" என்று என் மனதின் போராட்டங்கள்

வெளியே தொனிக்காத ஒரு குரலில் பதில் தந்தேன் நான். தொடர்ந்து ஓர் அமைதியான நிலையில் இருப்பதான பாவனையுடன் ஆசிரியர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினேன். அங்கே,

"மாணவர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கலாம். அதைப்பற்றிப் பரவாயில்லை. ஆனால் ஒரு சில மாணவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை மிகுதி மாணவர்கள் மீது திணிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. பெரும் பான்மையான மாணவர்கள் இன்று வழமை போலப் பாடசாலைக்கு வந்துள்ளனர். அவர்களை இந்தச் சிறுபான்மையினர் தமது இஷ்டப்படி நடத்துவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நாம் இதைப்பற்றி பொலிஸாருக்கு ஒரு முறைப்பாடு கொடுத்துப் பாடசாலைக்கு வர விரும்புகிற மாணவர்களை யாரும் தடுத்து நிறுத்தாதபடி கண்காணிக்க வேண்டும்" என்று நான் உரையாற்றியபோது எனக்கு 'ஐஸ்' வைத்த அதே ஆசிரியர்தான் திடுமென்று எழுந்தார்.

"பொலிசுக்கு முறைப்பாடு கொடுப்பது நிலைமையை இன்னும் மோசமாக்கவே செய்யும். சிறிய விஷயத்தை நீங்கள் பெரிது படுத்தக்கூடாது." என்று எனக்கு ஆலோசனை தந்தார். மாணவர்களில் சிலராவது வந்துவிட்டால் பொலிஸ் பாதுகாப்பிலாவது பாடசாலை நடந்துவிடுமே என்று அந்த இளம் ஆசிரியர் பயப்படுவது எனக்கு விளங்கியது. இந்த ஆசிரியருக்கும் அந்த மாணவருக்கும் என்ன கோளாறு? இவர்களின் போராட்டத்தை உதாசீனம் செய்யவும் முடியாமலிருக்கிறதே! கூட்டத்தை நிறைவு செய்து ஆசிரியர்களை அனுப்பிவிட்டு உப அதிபரை மட்டும் அழைத்து அந்த ஆசிரியர் பற்றிய விபரங்களைக் கேட்டேன். உப அதிபர் தந்த தகவல்களிலிருந்து அவர் ஜீ.சீ.ஈ. சாதாரண தரம்கூடச் சரியாகச் சித்திபெறாத ஒரு தராதரப் பத்திரத்தைச் சமர்ப்பித்து எண்ணாயிரம் ரூபா நோட்டுக்களின் உதவியுடன் ஆசிரிய நியமனம் பெற்றவர் என்பதும், இடாப்பு வேலைகளைக்கூடச் சரியாகச் செய்யத் தெரியாதவர் என்பதும், வகுப்பிலேயும் இதுநாள்வரை எதையுமே கற்பித்ததில்லை என்பதும் தெளிவாயின. இப்போது துப்பு மெதுவாகத் துலங்குவது போலிருந்தது எனக்கு. இவர் இதுநாள்வரை சம்பளம் எடுத்திருக்கிறார் 'சும்மா இருந்து!' 'சும்மா' இருந்து, சம்பளம் எடுக்க அந்த அப்பாவி அதிபர் உதவியிருக்கிறார். என்னிடம் அந்தப் 'பாச்சா' பலிக்காமல் போகலாம் என்ற ஒரு சுய பயம் இந்த இளைஞரிடம் ஏற்பட்டிருக்கிறது. பாவம்!

என்னுடைய ஊகம் சரியானதுதானா என்று அறிந்துகொள்ள, "அவர் வழக்கமா எத்தினை மணிக்கு ஸ்கூலுக்கு வாறவர்? பிரின்சிப்பல் என்ன ரைமுக்கு றெட் லைன் போடுறவர்?" என்று கேட்டேன். பெரிதான ஒரு சிரிப்பை உதிர்த்த உப அதிபர்,

"ஒம்பதரை மணிக்கு முதல் வந்த நாளும் கிடையாது. மூன்று மணிக்குப்பின் தங்கிய சரித்திரமும் கிடையாது. பிரின்சிப்பல் எல்லாரும்

வந்த பிறகுதான் லைன் போடுறவர். பாவம் நல்ல மனுசன்...” என்றார். அப்பாவி மனிதர்கள் எல்லாம் நல்ல மனிதர்கள்தான். அந்த நல்ல மனிதர்களை இந்த வீரர்கள் தவறாக அல்லவா பயன்படுத்திக் கொள்கிறார்கள்! எந்தப் பரிமாணத்தின்படி பார்த்தாலும் ஆசிரியராக இருக்கத் தகுதியற்ற ஆசிரியர்கள்! இவர்களால் மாணவர்களும் அவ்வாறு பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்!

விரும்பிய நேரம் கல்லூரிக்கு வந்து விரும்பிய நேரம் வெளியே போய் விரும்பிய நாளெல்லாம் வீட்டில் நின்று விரும்பியதெல்லாம் செய்து பழகிய மாணவர்கள் ஓர் எல்லைக் கோட்டிற்குள் வந்து கட்டுப்பட விரும்பவில்லை. ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவுவதை விரும்பாத ஒரு சிலர் பலரையும் தம் வழியில் இழுத்துக்கொண்டு போராட... பெரும்பான்மையினரின் வேண்டுகோளுக்கு அதிகாரிகள் பணிய... வக்கரித்து உளுத்துப்போன சமுதாயம்!

நாளைக்கு இவர்கள்தான் அதிபர்களாக வரப்போகிறவர்கள். இவர்கள்தான் இந்த நாட்டை ஆளப்போகிறவர்கள். நாட்டின் நிலை எப்படிப் போனால் என்ன. சும்மா இருந்து சம்பளம் பெற ஒரு வேலை தேடித் தருகிற அபேட்சகருக்கே வாக்குப் பண்ணப் போகிறவர்கள்... சோம்பலையும் சுயநலத்தையும் வளர்த்துக்கொண்டு தம் வழியில் மற்றவர்களையும் இழுத்துச் செல்லப் போகிறவர்கள்.

நாளைய உலகின் சில நாயகர்களின் ஊடாக நாளைய உலகம் என் கண்களில் தெரிகிறது. ‘கல்லூரி எப்படியும் நடந்தேயாக வேண்டும். ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலை நிறுத்தப்பட வேண்டும்’ என்ற வீம்புடன் திரும்பிச் சென்று கொண்டிருக்கும் ‘ஒன்றும் தெரியாத’ மாணவர்களை மீள அழைத்து வருவதற்காக நான் இன்னும் சில ஆசிரியர்களுடன் இணைந்து எனது ‘ஏசியா பைக்’கில் நேர்த்தியாகப் பறக்கிறேன்.

(இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய போட்டியில் பரிசு பெற்று 1982இல் அவர்கள் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றது.)

☆ ☆ ☆

8

# ஒரு பிணத்தின் தரிசனம்

அந்த ஊரின் வழக்க மேளங்கள் நிரையாய் அமர்ந்து திருவாசகம் படிக்கின்றன. அப்போதுதான் உள்ளே நுழைந்த நடராசர், தனது சயிக்கிளடிக்கு விரைந்தோடி, சயிக்கிளில் தொங்கிக் கொண்டிருந்த கிழிந்த ஓலைப்பையினுள் துளாவி, இராமபாணப் பூச்சிகள் நன்றாகப் படித்துக் கிழித்த திருவாசகப் புத்தகம் ஒன்றினைத் தடவி எடுத்துக்கொண்டு, கண்ணாடிக்கூட்டைத் திறந்து, பொருத்தெல்லாம் அழுக்கேறிப் போயிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொள்கிறார். பிறகென்ன? ஒரே காட்டுக் கூச்சலும் கழுதைக் கத்தலுந்தான்!

மருமகள் பூரணமும் மற்றவர்களும் பலதையும் சொல்லிப் புலம்புவதைத்தான் சகித்துக்கொள்ள முடியவில்லை என்று திருவாசகம் படிக்கச் சொன்னால், அந்த இதமற்ற கூச்சலும் மனதுக்கு நிம்மதியைத் தராது போகவே, வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடவேண்டும் போன்றதொரு துறுதுறுப்பில் தவித்தார் தம்பிமுத்துக் கிழவர். உள்ளே குமைந்து கொண்டிருந்த எத்தனையோ போராட்டங்களின் புறக் காட்சியாய்க் கண்களில் கனத்த நீர்த்துளிகளைச் சால்வைத் தலைப்பாலே துடைத்துக்கொண்டார்.

திண்மையான உடலும் செழிப்பான முகமுமாய் இன்னும் உயிருடன் உறங்குவது போலவே படுத்திருக்கும் தன் கணவனை - வெள்ளைப் பழந்துணியினால் கட்டப்பட்டிருக்கும் அவனது அதரங்களைக்கூட... வெறி கொண்டவள்போலக் கட்டி அணைத்து முத்தமிடுகிறாள் பூரணம்.

“என்ரை தேவா...! என்ரை ராசா...! என்னை விட்டிட்டுப் போட்டியே! ஐயோ நான் இனி ஆற்றை உழைப்பை நம்பியிருப்பன்... அப்பூ... நான் என்ன செய்யப் போறன்... என்னை இப்பிடிக் கதறவிட்டுட்டுப் போயிட்டியே ராசா...” என்று இடையிடை பெரிய அவலக் குரல் எடுத்துப் பத்து வீட்டுக்குக் கேட்கும்படி குழறி அழுவதும், இடையிடை வார்த்தைகளற்று யோசிப்பதும், திடீரென்று மௌனமாய் உட்கார்ந்து மானசீகமாய்ப் புலம்புவதுமாய் நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கும் பூரணத்தைப் பார்த்தால் கல் நெஞ்சங்கள் கூடக்

கரையுந்தான். செழிப்பாக நடமாடவேண்டிய நாற்பது வயதில் ஓர் ஆண்மகனைப் பறிகொடுத்து நிற்பதென்றால் - அதுவும் ஒன்றும் இல்லாமல் வந்த காய்ச்சல் 'மெனிஞ்சைட்டிஸ்' என்ற பெயரில் உயிரைக் குடித்துவிட்டுப் போவதென்றால் எவருடைய உள்ளமும் நொந்து வலிக்குந்தான்.

கூடத்தின் ஒரு மூலையில் வட்டமாகக் குந்தியிருக்கும் பெண்கள் கூட்டத்தில் பலவிதமான ஊர்க்கதைகள் சொல்லப்படுகின்றன.

"மெய்யே, உதென்ன உப்பிடி ஒரு காய்ச்சல்! காய்ச்சல் வந்து இரண்டு நாளிலை உயிர் போறதை நானெண்டால் கேள்விப்படேல்லை." மஞ்சள் இந்தியன் வோயில் தொடங்கிய கதைக்குப் பக்கத்தில் இருந்த பச்சை நைலக்ஸ் இரகசியமாகப் பதில் சொல்லுகிறது.

"ஆஸ்பத்திரியிலை கைகாலைப் போட்டடிச்சு எழும்பித் திருஞ்சவராமெல்லே... நஞ்சைக் கிஞ்சைக் குடிச்சாரோ ஆர் கண்டது..." கிழக்குக் கரையில் இருந்த நீல போர்டர் தானும் சேர்ந்து தாளம் போட்டது.

"உவையின்ரை குடும்பத்துக்குள்ளை நெடுகப் பிரச்சினை. அவற்றை ஆக்களுக்கும் பெண்சாதியின்ரை ஆக்களுக்கும் இடையிலை ஆர் எழுப்பம் எண்டு நெடுகப் புடுங்குப்பாடு... தற்கொலை எண்டாலும் சொல்லுவினமே... பூசி மெழுகிப் போடுவினம்..."

அவர்களின் கதைக்குக் கையும் காலும் முளைக்கிற வேகத்தைப் பார்த்தால் மிக விரைவில் அது தற்கொலைதான் என்று நிரூபித்தே விடுவார்கள் போலிருந்தது.

"டாங்கு.. டுக்குடு.. டுக்குடு.. டாங்கு... டாங்கு..." மேள ஒலி கேட்கத் தொடங்கும்போதே, உட்கார்ந்த இடத்திலிருந்து உரத்துக் குரல் கொடுத்தார் நடராசர்.

"மேளத்தை நிற்பாட்டச் சொல்லுங்கோ... இஞ்சை இன்னும் தேவாரம் படிச்சு முடியேல்லை..."

"ஆர் அவர் நிப்பாட்டச் சொல்றவர்? மேளம் பிடிச்சது நான்... நான் சொல்றன் அடிக்கச் சொல்லி... அவருக்கென்ன அதுக்கை ஒரு முன்னூடு..." இது தம்பிப்பிள்ளைக் கிழவரின் மூத்த மகன் முத்தையாவின் குரல். நடராசருக்கு மனதிற்குள்ளே ஆவி பறந்தாலும், சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி அவர் காத்திருக்கிறார். கொழும்பிலிருந்து வரவேண்டியவர்கள் எல்லாம் யாழ்தேவியில் மாலை மூன்று மணியளவில் வந்து சேரும்வரை செத்தவீடு களைகட்டவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஸ்டேசனுக்குப் போயிருந்த காரின் 'ஹாண்' ஒலி கேட்டதுமே செத்த வீட்டில் களைத்துப்போய் மூலைக்கு

மூலை உட்கார்ந்து ஊர்க்கதைகளை அசைபோட்டுக் கொண்டிருந்த வர்கள் எல்லாம் சுறுசுறுப்படைந்தனர். காரிலிருந்து இறங்கிய தம்பிப்பிள்ளையின் இளைய மகன் சிவராஜா ஒரு அடி எடுத்து வைக்க முதலே ஓடிச் சென்று கட்டிக்கொண்டார் தம்பிமுத்துக் கிழவர்.

“கொண்ணனை உனக்கு உயிரோடை காட்ட முடியாத பாவியாயிட்டனேயடா! வருத்தம் எண்டுகூட உனக்கு அறிவிக்காமல் விட்டிட்டனே... ஐயோ இப்பிடி நடக்குமெண்டு ஆர் கண்டது? இந்த வயதிலை அவன் போகப் போகிறான் எண்டு ஒரு சாத்திரிகூடச் சொல்லவில்லையே...!” என்று பலமாக நெஞ்சில் அடித்துக்கொண்டே தனது தாய் முழக்கித் தீர்த்த ஒப்பாரி சிவராஜாவின் உள்ளத்தின் உள்ளே சென்று வேதனை செய்கிறது. அவன் நெகிழ்ந்து மாலை மாலையாகக் கண்ணீர் உதிர்த்ததைக் கண்டு தம்பிப்பிள்ளை நிலத்தில் விழுந்து உருண்டு பிரண்டு குழறுகிறார்.

“ஐயோ... எனக்குக் கொள்ளி வைக்கவெண்டு உன்னைப் பெத்தனே, உனக்கு என்னைக் கொள்ளி வைக்க வைச்சிட்டுப் போட்டியேடா... ஐயோ என்னாலை ஏலாது... நான் வைக்க மாட்டன்...”

தம்பிப்பிள்ளைக் கிழவரைத் தூக்கி அணைத்தபடி, “இனி அழுது என்ன செய்யிறது? உந்த இங்கிலீசு வைத்தியங்களை நம்பாமல் கையோடை என்னட்டை ஒரு ஆள் விட்டிருந்தா நான் காப்பாத்தித் தந்திருப்பன். உது சன்னிக் குணம். இங்கிலீசு வைத்தியத்தாலை ஏலாது... ம்... இனி நடந்ததைக் கதைச்சு என்ன பிரயோசனம். நடக்க வேண்டியதைப் பாருங்கோ...” என்று கிழவருக்கு ஆறுதல் கூறும் சாட்டில் தனது தமிழ் வைத்தியப் பெருமைகளையும் சரியான முறையில் சரியான இடத்தில் போட்டு வைக்கிறார் ராமுப் பரியாரியார்.

தனது சோலிகளை எல்லாம் முடித்துக்கொண்டு ‘கறுப்பும்’ ஒரு அரை அடித்துவிட்டு அப்போதுதான் செத்தவீட்டிற்கு வந்து சேர்ந்த நடேசுச் சாத்திரியார், “போன வருசம் உவர் தம்பிப்பிள்ளையற்றை சாதகம் பாக்கேக்கை நான் சொன்னனான், உனக்கு ஒரு பெரிய இழப்பு வரப்போகுது - சனியனுக்கு எண்ணெய் சாத்தச் சொல்லி. நான் சொன்னதை நம்பியிருந்தால் இப்பிடி நடக்குமே! இனியாவது உவை எல்லாரும் என்ரை சாத்திரத்தை நம்புவினம்” என்று தனது பெருமைகளை அங்கிருந்த யாருக்கோ அளந்து கொட்டிக் கொண்டிருந்தார்.

குளிப்பாட்டுவதற்காகச் சவத்தை வீட்டுக்குப் பின்புறம் கொண்டுபோகிறார்கள். நெடுநேரமாக மிகவும் சூட்சுமமாக நடந்து கொண்டிருந்த சண்டை இப்போதுதான் வெடித்தது. குளிப்பாட்டி முடிந்தவுடன் எவ்வாறு சவத்தை அலங்காரம் செய்வது என்பதில்தான் பிரச்சினை தொடங்கியது!

"மாப்பிள்ளைக் கோலத்தில் இந்த வீட்டுக்கு வந்த மாதிரி பட்டு வேட்டியும் சால்வையும் தலைப்பாகையுமாகத்தான் காட்டுக்கு அனுப்ப வேணும்" என்று பூரணத்தின் தமையன் நடராசா சொன்னதை சிவராஜா ஒப்புக்கொள்ளவில்லை. ஏதோ கருத்து வேற்றுமை ஏற்படுவதை அவதானித்த கிழவர் விரைவாக ஓடி வந்தார். அதற்குள் புதிய சால்வை ஒன்றை எடுத்துத் தலைப்பாகை கட்டி முடித்துவிட்டார் நடராசர். அவர் சொன்னபடி இந்தச் சபையில் நடக்க விட்டுவிட்டால் தனக்கு இந்த வீட்டில் மதிப்பில்லை என்றாகிவிடுமே என்று புழுங்கிய கிழவர், "இஞ்சை வந்து தலைப்பா கழண்டு சாயம் கெட்டுத்தானே அவர் இருந்தவர். பிறகு இப்ப என்னத்துக்குத் தலைப்பா அவருக்கு..." என்று பொருமித் தலைப்பாகையைப் பிடித்துக் கழற்றி எறிந்து விட்டார்.

"உது உங்கடை பரம்பரைப் புத்தி... சாதிக்குணம்... எந்தச் சபையிலும் விஷயங்களைக் குழப்பிறது..." நடராசர் சொல்லிவிட்ட இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததோ இல்லையோ,

"ஆரடா அவன். என்ரை சாதியைப் பற்றிக் கதைக்கிற வடுவா... உன்ரை மனுசி எப்பிடியான சாதியெண்டு இந்தச் சபையிலை சொல்லிக் காட்டட்டே" சுண்ணம் இடிக்கவெனக் கொணர்ந்து வைத்திருந்த உலக்கையைத் தூக்கிவிட்டார் கிழவர்.

'வடுவா' என்று கிழவனால் அழைக்கப்பட்டுவிட்ட ஆர்மார்த்தமான அவமதிப்பைத் தாங்க முடியாமல் தேங்காய் உடைக்க வைத்திருந்த கத்தியைத் தூக்கிக்கொண்டார் நடராசர்.

பின்னால் நின்று எட்டிப் பார்த்த நீல போர்டர், சிவப்பு நைலக்ஸ்க்குச் சொன்னது "பாத்தியே அக்கா... நான் வெள்ளெனச் சொன்னது சரியாப் போச்சுது.. உவைக்குள்ளை நெடுகப் பிரச்சினை. ஆர் சாதியிலை கூட எண்டு... இனி இப்போதைக்குச் சவம் தூக்கமாட்டினம்... நான் போப்போறன்..."

"நில்லுங்கோ. என்ன நடக்குதெண்டு பாத்திட்டுப் போவம். வெட்டுப்பட்டாலும் வெட்டுப்படுவினம்..." சிவப்பு நைலக்சுக்குப் புதினம் பார்க்காமல் போக விருப்பமில்லை. 'எப்போது வெட்டுப்படுவார்கள்' என்பதுபோல் எட்டி எட்டிப் பார்த்தது அது.

"கேடுகெட்ட சாதியளோடை உங்களுக்கு என்ன கதை?" என்று நடராசரின் கையைப் பிடித்து இழுத்தாள் அவர் மனைவி. வெறி அடங்காத அவர் "விடு என்ரை கையை, உவங்களை ஒரு கை பாக்கத்தான் வேணும்" என்று இரைந்து கொண்டு மனைவியின் பிடியிலிருந்து திமிறித் திரும்பினார்.

நடராசாவின் உறவினர்போல் தோன்றிய சிலர் பந்தலுக்குப் போடப்பட்டிருந்த தடிகளை முறித்துக் கொள்ளப் பல பெண்கள் பயந்து

அங்கும் இங்கும் சிதறி ஓடியதில் யாரோ நீல போர்ட்டரை நெரிக்க அது கீழே விழுந்து எழுந்தது. எல்லாரும் ஒரே நேரத்தில் கதைத்துக் கொள்ளும் கூச்சலும் குழந்தைகள் வீறிட்டு அலறும் ஒலியுமாக... அங்கே என்ன நடக்கின்றது என்று தெரியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. உறவினர் அல்லாத அயலவர்கள், நண்பர்களில் பலர்,

"இனி உவை சமாதானப்பட்டுச் சவம் தூக்க இருளும், நாங்கள் போவம்" என்று பேசிக்கொண்டு விலகிக் கொள்ள சற்று நேரத்திற்கு முன் பெரிய கூட்டமாய் இருந்த முற்றத்தில் இப்போது மிகச் சிலரே காணப்படுகின்றனர். காலையில் இருந்து இவ்வளவு நேரமும் அங்கே துல்லியமாகத் தெரிந்துகொண்டிருந்த கவலைகள் எல்லாம் எங்கே போனதென்று தெரியாத ஒரு திசையில் போய்விட்டன போலத் தோன்றுகிறது.

"என்ரை பிள்ளையை ஒருத்தரும் தொடப்பிடாது. நான் தனியத் தூக்கிக் கொண்டு போய்க் கொள்ளி வைச்சிட்டு வருவன்... எல்லா நாயளும் வெளியில போங்கோ..." தம்பிப்பிள்ளைக் கிழவரின் கோப மெய்ப்பாடு எல்லைமீறி வார்த்தை நெருப்பாய் வெளிவரச் சிங்கம் போலக் கர்ச்சித்தார் அவர்.

நடுத்தர வயதில் அநியாயமாய் இறந்துவிட்ட தன் பிரிவினால் கவலை கொண்டு யாரும் செத்தவீட்டுக்கு வரவில்லை என்பதையும் தமது திறமைகளைப் பறைசாற்றிக் கொள்வதற்கும், தமது உயர்சாதிப் பெருமைகளை நிரூபணம் செய்து கொள்வதற்கும், தம்மை விளம்பரம் செய்து கொள்வதற்கும் இந்தக் கூட்டத்தைப் பயன்படுத்தும் சுயநல நோக்கத்திற்காகவே எல்லாரும் வந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் அசிங்கமான பல நிகழ்வுகளைத் தரிசித்துக்கொண்டே அந்த மனிதரின் சவம் அங்கே கவனிப்பாரற்றுக் கிடந்தது.

(நீர்ப்பாசனத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பெற்ற சிறுகதைப் போட்டியில் 1979-1980இல் 2ம் பரிசு பெற்றது.)

☆ ☆ ☆

9

# முரண்பாடுகளின் அறுவடை

“கூ... ஊ... ஊய்... கூஊ... ஊ... ய்...” மாங்கன்றுக்காகக் குரல் கொடுக்கிறாள் குறுக்குக் கட்டின ஒரு கிழவி.

“றேடியோவிலை பாட்டு முடிஞ்சுது. நேரம் அப்ப பத்து மணிக்கு மேலையாகிவிட்டுது என்னடி...?”

“மாங்கண்டு இவ்வளவு நேரமா என்ன செய்யிறாள்? ஒரு வேளை வேலைக்கு வரேல்லையோ?”

சீத்தைப் பாவாடையும் சட்டையும் போட்ட ‘பெட்டைகளும்’, சட்டை போட்டுத் தட்டுடுப்புச் சேலை உடுத்த ‘பொம்பிளையளும்’ குறுக்குக் கட்டின கிழவிகளுமாய்... ஒரு பதினைந்து பேர் அந்தப் புளிய மரத்தடிச் சந்தியில் கூடியிருக்கிறார்கள். வருகிற வழி நெடுகிலும் ஒவ்வொன்றாகச் சேர்ந்து வந்திருக்கிற இந்தக் கூட்டத்தில் கடைசியாக வந்து சேரவேண்டிய மாங்கன்றும் வந்துவிட்டால் ‘விறுக்கு விறுக்கென்று’ நேரே வெங்காயத் தோட்டத்திற்கு நடக்கவேண்டியதுதான்.

“மாங்கண்டுக்கும் இரண்டு மாதம் சூதகம் வராமல் நிக்குதாமெல்லே?”

“பதினொரு மணிக்கும் போய்ச் சேராட்டித் தோட்டக்காரர் பேசப் போயினம் எக்கணம்...”

“கூ... ஊ... ஊய்... கூ... ஊ... ஊ... ய்” குரல் கொடுத்த ஐந்து நிமிடங்களின் பின்னர் புளியடிச் சந்திக்கு வருகின்ற கை ஒழுங்கையில் மாங்கன்று மெதுவாக நடந்து வருவது தெரிகின்றது. வழக்கம் போலக் கையையும் ஆட்டிக்கொண்டு வேகமாய் நடந்து வர அவளால் முடியவில்லை. அவளுடைய நடையிலே இருந்த பழைய லாவகமும் தென்படவில்லை. காலையிலே குடித்த ‘பழம் பானைத் தண்ணி’ விரைவில் வெளியே வந்து விடுவேன் என்பது போலக் குமட்டிக்கொண்டு மேலே வருகிறது. காலையில் நித்திரைப் பாயில் கண்விழித்தபோதே, உலகமெல்லாம் சுற்றிக் கண்ணெல்லாம் இருட்டிக்கொண்டு வந்தது அவளுக்கு.

"இண்டைக்கு வேலைக்குப் போகாமல் விடுவம்..." என்றுதான் படுத்திருந்தபடி யோசித்தாள். ஆனால்...

"வெங்காயம் நடுற காலம். புல்லுப் புடுங்கிற காலம், கிண்டுற காலத்திலைதான் இப்பிடி ஒவ்வொரு நாளும் வேலை வரும். இதுகளுக்குப் போய் ஒவ்வொரு நாளும் பத்துப் பத்து ரூபா வாங்கிக் கொணந்து வைக்காட்டிப் பிறகு வேலை கிடையாத காலங்களிலை அடுப்பெரியாது. மனுசன் சம்பாதிக்கிற காசு தவறணைச் செலவுக்குத்தான் காணும். உழைப்பு வாற காலத்திலை கொஞ்சம் மிச்சம் பிடிச்சு வைக்காட்டி... பிள்ளை பிறக்கிற காலத்திலை கஞ்சியும் கிடையாது..." என்ற யோசனைகூட வந்து புறப்பட்டுவிட்டாலும் வழக்கமாய் இருக்கின்ற உற்சாகம் இல்லை உடம்பில்.

"என்னடி மாங்கண்டு... எத்தினை தரம் குரல் கொடுத்தன்... உனக்குக் கேக்கேல்லையே..." கிழவி கேட்கிறாள்.

"கேட்டது அக்கை... என்னாலை இண்டைக்கு ஒண்டும் ஏலேல்லை... பேசாமல் கிடக்கப் பாத்திட்டுப் பிறகும் ஒழும்பி வாறன்."

"சரி சரி வாருங்கோ கெதியாய் போவம்..." புகைவண்டியின் எஞ்சின் போல் கிழவி முன்னே செல்ல மிகுதி பதினைந்து பேரும் வரிசையாய்ப் பின்னால் ஓடி ஓடிச் செல்கிறார்கள்.

"நல்லா வெயில் ஏறினாப் பிறகு வாறியள்... பேந்தும் பொழுதுபடமுந்திப் போயிடுவியள்... கெதியாத் தொடங்குங்கோ வேலையை..." தோட்டத்தின் உரிமையாளரான பென்சனியர் ஆறுப்பிள்ளையின் அதிகாரக் குரலுக்கு எல்லாரும் கீழ்ப்படிகிறார்கள்.

நெருப்பு மாதிரி எரிகின்ற வெயிலில் தலைக்கு ஒரு பழந்துணி கூட இல்லாமல் வெங்காயத் தரையிலே இறங்கிவிட்டார்கள் சிலர். கையில் வைத்திருந்த பனை ஓலைப் பெட்டிகளைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு வேலையைத் தொடங்குகிறார்கள் கிழவிகள். மாங்கன்றும் ஈரத் தரையில் கால் புதைய இறங்கி நின்று குனிந்து ஒரு பாத்தியில் உள்ள புற்களைப் பிடுங்குகிறாள். ஓர் அரைமணி நேரம்கூட ஆகியிருக்காது, குடல் முழுவதுமே புரண்டு எழுவது போன்ற உணர்வுடன் மஞ்சள் மஞ்சளாய்ச் சத்தி எடுக்கிறாள் அவள்.

"கொஞ்ச நேரம் போய் உந்த ஆடுகால் நிழலிலை இரடி. உந்தக் கோதாரியோடை என்னத்துக்கு வேலைக்கு வந்தனி எண்டு எனக்கெண்டால் விளங்கேல்லை..."

பக்கத்தில் நின்ற கிழவி கண்டிப்பாய்ச் சொல்வது போலச் சொல்லுகின்ற வார்த்தைகளில் உள்ளூர ஓர் அநுதாபமும் பாசமும் இழையோடியதைப் புரிந்து கொண்டவளாய் இடத்தைவிட்டு வெளியேறுகிறாள் அவள்.

இறைத்துக் கொண்டிருந்த 'மிசின்' தண்ணீரில் நிறைய அள்ளி முகத்தையும் வாயையும் அலம்பிக்கொண்டு பூவரச நிழலில் சிறிது நேரம் களைப்பாறுகிறாள் மாங்கன்று. மத்தியானம் சாப்பிட்ட பிறகு மயக்கமும் பிரட்டும் கொஞ்சம் குறைந்து விட்டபடியால் பின்னேரம் அவள் தோட்டத்தில் இறங்கி வேலை செய்தாள். ஆனாலும் பின்னேரம் வேலை முடிந்து திரும்புகையில்,

"மாங்கண்டு அரைவாசி நேரம் வேலை செய்யேல்லையாம். அப்ப ஐஞ்சு ரூபா தந்தாப் போதுந்தானே" என்று கூறி அரைவாசிச் சம்பளம் தருகிறார் பென்சனியர்.

"அரசாங்க உத்தியோகமெண்டால் நாப்பத்திரண்டு நாள் லீவு எடுத்தாலும் சம்பளம் வரும். எங்கடை கெதி இப்பிடித்தான்..." அவள் மனதிற்குள் மெல்ல முனகிக்கொள்கிறாள்.

இப்போது அவளுக்கு ஐந்து மாதம். கருப்பையின் உள்ளே பிள்ளை. 'ஊருவதும் துடிப்பதும்...' முன்னர் அநுபவித்தறியாத ஒரு புதிய அநுபவமாய்... திடீரென்று ஒருமுறை துள்ளி எழுந்து வந்து அது மேல் வயிற்றில் இடித்துவிட்டுப் போகும்போது, மெலிதாய் ஒரு வேதனை தோன்றினாலும்கூட, அந்த இனிமை வேதனைகளை வென்றுவிடும்போது - அவள் ஒரு சின்னச் சிரிப்புடன் தன் வேலைகளைத் தொடருகிறாள்.

"அரிசி கொஞ்சம் நனையப் போட்டிருக்காம்... வந்து இடிச்சு விடட்டாம் பின்னேரம்... கேட்டுதே மாங்கண்டு..." குடிசைக்கு வெளியே பென்சனியரின் குரல்தான் கேட்கிறது. இப்போது இரண்டு மூன்று நாட்களாய் எழுந்து நிற்கவே முடியாது என்பது போல் நாரி எல்லாம் விண் விண் என்று வலித்தாலும், பென்சனியர் வீட்டுக்குப் போய் அரிசி இடித்து வறுத்துக் கொடுத்தால் ஒரு கொத்துக்கு ஒரு ரூபா கிடைக்கும். அதை விட்டு விடவும் அவளுக்கு மனம் வரவில்லை.

"சரி ஐயா... பின்னேரம் ஐஞ்சு மணிபோலை வாறன்..." மாலையில் பென்சனியர் வீட்டுப் படலைக்கு அவள் போய்ச் சேருகிறபோது வாசலில் கார் ஒன்று நிற்கிறது. பென்சனியரின் மகள் மங்கையை அவளின் கணவர் ஒரு பக்கத்திலும் தாய் ஒரு பக்கத்திலும் பிடித்து மெல்ல நடத்திக்கொண்டு வந்து காரில் ஏற்றுகிறார்கள். அவர்கள் போய்விட்ட பின்னர்... திரும்பி வந்து அமர்ந்த தாயிடம் இவள் கேட்கிறாள்,

"என்ன சுகமில்லையே... அவவுக்கு?"

"மங்கைக்கு இப்ப ஐஞ்சு மாதமாய் ரேண்ஸ் வராமல் நிக்குதெல்லே... ஸ்ரெயின் பண்ணப்பிடாது எண்டு அண்டைக்கும் டொக்டர் அட்வைஸ் பண்ணி விட்டவராம். நாங்கள் 'கேற்றைத் தூரத்திலை போட்டதாலை... இங்கையிருந்து 'கேற்' வரைக்கும் நடக்க

வேண்டியதாய்ப் போச்சு மங்கைக்கு... இல்லாட்டி நாங்கள் 'பெட்'டாலை இறங்கவே விடுறேல்லை... பாத்தாப் பெரிய உடம்புதான். ஆனால் ரத்தம் இல்லை..."

மங்கையின் தாய் அடுக்கிக்கொண்டு போவதை, ஈக்குக் குச்சிபோல் கையும் காலும், கொடிபோல் மெலிந்த உடலமைப்பும் கொண்ட மாங்கன்று ஒரு விசித்திரம் போல் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கும் ஐந்து மாதந்தான் ஆனால்...

இரண்டு கைகளிலும் மாறி மாறிப் பாய்கின்ற உலக்கை ஒரு லயத்துடன் உரலில் விழுந்து எழும்புகிறபோது ஒவ்வொரு முறையும் அவள் உடல் நொந்து வலிக்கிறது. உரலில் போட்ட மாவைக் குனிந்து அள்ளி இறக்கும்போது, கால் தொடைகள் உழைவெடுக்கின்றன. அடுப்பில் ஏற்றிய பெரிய இரும்புச் சட்டியின் கீழே பெரிதாக எரியூட்டி, அதன் முன்னால் அமர்ந்து வறுக்கும்போது அந்த வெம்மையில் உடம்பு எரிந்து வியர்வை ஆறாய் வழிந்து ஓடுகிறது.

மா வறுத்து முடிகிற நேரத்தில் ஆஸ்பத்திரிக்குப் போன கார் திரும்பி வந்து வாசலில் தரித்து நிற்பதைக் கண்ட பென்சனியரின் மனைவி விழுந்தடித்துக்கொண்டு ஓடிப்போய் மகளைக் கைத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வருகிறாள்.

"டொக்டர் என்ன சொன்னவர்?"

"நல்லா 'றெஸ்ட்' பண்ணட்டாம். இளநீர், தோடம்பழம், பால் நிறையக் குடிக்கட்டாம். 'ஒப்றோன்' குளிசை தொடர்ந்து சாப்பிடட்டாம். இண்டைக்கு முப்பது ரூபா கட்டி ஸ்பெசலிஸ்ட் டொக்டரிட்டைக் காட்டிக்கொண்டு வாறம்..."

மங்கையைக் கொண்டுபோய்ப் படுக்கையில் விட்டுவிட்டு... அவளுக்கு உடுப்பு மாற்றித் தேநீரும் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்த தாய்,

"மெய்யே மாங்கண்டு... உங்கை எங்காலும் தோடம்பழம் கிடைக்குமே? நல்லதாய்த் தேடிப் பாத்து ஒரு பத்துப் பன்னிரண்டு வாங்கித் தாறியே?" என்று கேட்கிறாள்.

எத்தனையோ இடங்களுக்கு நடையாய் நடந்து... அலைந்து, 'பிள்ளைத்தாச்சி'க்குச் 'சோட்டைச் சாப்பாடு' தேடிக் கொடுத்தது முழுவதும் இந்தப் 'பிள்ளைத்தாச்சி'தான். ஆனால் இந்தப் 'பிள்ளைத்தாச்சி'...

ஒரு தோடம்பழம் கூடத் தின்று பார்த்ததில்லை.

இளநீர் குடித்ததில்லை.

பாலைக் கண்ணால்கூடக் கண்டதில்லை.

இறைச்சி வாங்கப் பணம் இருந்ததுமில்லை.
டாக்டரிடம் போக நினைத்ததுமில்லை.

மாதங்கள் வேகமாய் நழுவி ஓடுகின்றன. மாங்கன்றுவின் மனதிற்குள்ளே அந்தரங்கமாய் ஒரு வேகம்...

ஒன்பதாவது மாதமும் முடிந்த பின்பு ஒருநாள்... மாங்கன்று பென்சனியர் வீட்டு வளவில் கஞ்சல் கூட்டிக்கொண்டிருந்தபோது... மங்கைக்கு 'வித்தியாசம்' இருந்ததென்று அவதிப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அடுத்த நாட்காலையில் மாங்கன்று வந்து தாயிடம் விசாரித்தாள்.

'இன்ஜெக்சன்' குடுத்தும் பெயின்ஸ் எழும்பேல்லையாம்... மங்கை சரியா வேதனைப்படுகிறாள். பாக்கப் பெரிய பாவமாக் கிடக்கு..."

அன்று மாலையில் மாங்கன்றுக்கும் 'நோக்காடு' கண்டது. 'கார் பிடிச்சுக் கொண்டரச் சொல்லி' யாரோ சொன்ன பின்னர்தான், பக்கத்து வீட்டில் நின்ற ஒரு பழைய சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போனான் மாங்கன்றுவின் புருஷன். இரண்டு மைல் தூரம் சைக்கிளில் போய் அவன் ஒரு காரைத் தேடிக்கொண்டு வந்தபோது... ஒரு அழகிய ஆண் குழந்தையை ஈன்று முடித்திருந்தாள் மாங்கன்று.

"எல்லாம் முடிஞ்சாப் பிறகு இனி என்ன ஆஸ்பத்திரி? காரைத் திருப்பி அனுப்படா நீ..." இதுவரையில் மாங்கன்றுவின் 'ஸ்பெலிஸ்ட்' ஆகத் தொழிற்பட்ட குறுக்குக் கட்டின கிழவி கட்டளையிட்டாள். மாங்கன்றுவின் குழந்தைக்குப் பெரிய வரவேற்புத்தர யாரும் இல்லாவிட்டாலும் அவன் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி வந்துவிட்டானே!

"கேட்டியே மாங்கண்டு... பென்சனியற்றை மேளுக்கு இரண்டு மூண்டு நாளா... நோக்காடு வாறதும் போறதுமாப் பெரிய கஷ்டப்பட்டுக் கடைசியிலை வயித்தைக் கீறித்தான் பிள்ளை எடுத்ததாம்.." இரண்டு நாள் கழித்துக் கிழவிதான் புதினம் கொண்டு வருகிறாள்.

"கீறின காயத்திலை சிதல் பிடிச்சுப் போச்சாம்... இன்னும் இரண்டு கிழமை ஆஸ்பத்திரியிலை இருக்கவேணுமாம்..." ஒரு வாரம் கழித்து வந்த செய்தி இது.

மங்கை குடித்து முடித்த தோடம்பழங்களும் பாலும் இளநீரும் விழுங்கி முடித்த குளிசைகளும் மருந்துகளும் என்ன உபயோகத்தைச் செய்தன என்று புரிந்துகொள்ளாமல் தன் மகனைத் தூக்கி மார்போடு அணைத்துப் பால் தருகின்ற சுகானுபவத்தில் மூழ்கி இருக்கிறாள் மாங்கன்று.

(1980இல் சுடர் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது.)

10

# அவன் ஏன் வாழ்கிறான்?

“இளமைப் பருவம் தவறுகள் நிறைந்தது. முழு வளர்ச்சிப் பருவம் போராட்டங்கள் நிறைந்தது. முதுமைப் பருவம் கவலைகள் நிறைந்தது.” என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்தவரையில் இளமைப் பருவமும் முழுவளர்ச்சிப் பருவமும் கவலைகள் நிறைந்ததாக அமைந்துவிட்டதே! முதுமைப் பருவம் எப்படி இருக்குமோ?

வழமைபோலச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் பஸ் ஸ்டான்டின் நடுவே மண்டியிட்டு உட்கார்ந்து வாயிலே விளையாடுகிற புல்லாங்குழலில் ‘காகித ஓடம்’ பாட்டை லாவகமாக வாசித்துக் கொண்டிருக்கிற இளங்கோவின் இதயம் மட்டும் எதை எதையோ சிந்தித்து ஓய்கிறது. “அழுவதைக் கேட்க ஆட்களுமில்லை. ஆறுதல் வழங்க யாருமே இல்லை. ஏழைகள் வாழ இடமே இல்லை. ஆலயம் எதிலும் ஆண்டவன் இல்லை” என்ற வரிகள் அவனது இசைக்கருவியில் ஒலிக்கிறபோது அவனுடைய இதயத்தின் நாளாந்த ஓலமே வெளியே பீறிட்டுப் பாய்வது போலத் தோன்றுகிறது.

வெளியே இடி இடிக்கிறது. மின்னல் மின்னுகிறது. மழை சோனாவாரியாகப் பெய்யத் தொடங்கிவிட்ட இரைச்சலும் கேட்கிறது. தகரக் கொட்டகையில் இருந்த நீக்கல் வழியாக ஒழுகிய மழைத் தண்ணீர் அவன் முதுகில் விழுந்து உருப்படியற்ற நிலையில் இருக்கும் அந்த ஒரே ஒரு ‘சேர்ட்’டையும் நனைத்து வேடிக்கை பார்க்கிறது. மெதுவாக எழுந்து வேறிடத்தில் உட்கார முயற்சி செய்த இளங்கோவின் கவனத்தை அருகில் கேட்ட வசைமாரி ஈர்க்கிறது.

“இந்தப் பிச்சைக்காரக் குருட்டுக் கழுதையள் ஒரு பக்கம். இவையின்ரை பிள்ளையள் எல்லாம் மாடிவீடு கட்டிக்கொண்டு எங்கையேனும் பெரிய பணக்காரராய் இருப்பினம். இதுகளை இஞ்சை அனுப்பி விடுறது போதாக் குறைக்குக் காசு சேர்க்க! அடிச்சுக் கலைக்க வேணும் இதுகளை எல்லாம்...”

ஏதோ இளங்கோவின் சரிதம் முழுவதையுமே அறிந்தவன் போலச் சொற்களைச் செலவழித்துச் செல்கிறான் ஒரு நடுத்தர வயதுப் பேர்வழி. இப்படி எத்தனையோ வசை மாரிகளைப் பத்து வருடங்களாகக்

கேட்டுப் பழகிவிட்ட இளங்கோவிற்கு இது ஒன்றும் மனதில் கவலையை உண்டாக்கவில்லை. ஆனால்,

"எனது ஆசைகள், கனவுகள், இலட்சியங்கள் எல்லாம் செத்துப் போய்விட்டபிறகு நான் மட்டும் இன்னும் ஏன் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறேன்?"

என்று அவன் மனம் ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கும் கேள்வியின் ஓலத்தை இம் மாதிரியான நிகழ்ச்சிகள் அதிகமாக்குவதுண்டு. "நீ மற்றவர்களிடம் அநுதாபத்தையும் உதவியையும் எதிர்பார்ப்பது கோழைத்தனம். மற்றவர்களிடம் அநுதாபம் காட்டுவதற்கும் உதவி செய்வதற்கும் துணிந்து நில். அதுவே வீரம்."

என்று எண்ணி எண்ணி வளர்க்கப்பட்ட அவனது இளமையின் இலட்சியங்கள் இப்படிப் பொடிப் பொடியாய்த் தூளாகும் என்று கனவில்கூட அவன் நினைத்திருக்கவில்லையே! இன்று...! மற்றவர்களின் கண்ணிலே அவன் ஒரு பிச்சைக்காரக் குருடன். ஆனால் அவனை உன்னிப்பாக அவதானித்தால் ஒன்று புரியும். இந்தப் பத்து வருட காலத்தில் அவன் ஒருநாளாவது கையை நீட்டி,

"ஐயா, தருமவான்களே! பிரபுக்களே! ராஜாக்களே! தாய்மார்களே! இந்தக் குருடனைப் பார்த்து ஒரு சதம் தருங்கள்" என்று கேட்டதில்லை. வேறு ஒரு தொழிலும் செய்ய முடியாத நிலைக்கு - உலகத்தின் அழகையும் அலங்கோலங்களையும், விசித்திரமான, புரிந்துகொள்ள முடியாத, ஆயிரமாயிரம் மனிதர்களையும் பார்க்கக் கொடுத்து வைக்காத நிலைக்கு இறைவன் அவனை ஆளாக்கிவிட்ட பின்னர், நிம்மதியின்றி வெடித்தப் போகின்ற நிலையில் இருக்கும் அவன் மனதிற்கு இந்தப் புல்லாங்குழல் மட்டுமே ஆறுதல் வழங்கும் நண்பன்.

"அந்த ஆராதனா பாட்டைக்கூட என்ன மாதிரி அப்படியே வாசிக்கிறான். ஹீ... ஹாஸ் தி அச்சுவல் ராலன்ற்ஸ்" என்று 'ரிமாக்ஸ்' சொல்லும் ஹிந்திப் பாட்டு ரசிக வாலிபன் தானாக ஓர் இருபத்தைந்து சதக் குற்றியை இளங்கோவின் மடியில் போட்டுவிட்டுப் போவான். 'இவர் வாசிக்கிற காம்போதியிலை தெரிகிற அழகான சுருதி வளைவுகளை டி.ஆர்.மகாலிங்கத்தினுடைய புல்லாங்குழலில்கூட நான் கேட்டதில்லை' என்று விமர்சனம் செய்யும் கர்நாடக ரசிகத் தமிழ்ப் பண்டிதர் ஒரு ஐம்பது சதத்தை அவன் மடியில் வைத்து "எடுத்துக் கொள்ளப்பா" என்று சொல்லிப் போவார். இப்படிச் சேருகிற ஒன்றரை ரூபாவையும் இரண்டு ரூபாவையும் வைத்துத்தான் அவன் தன் உயிரை இன்னும் பிடித்து நிறுத்தி வைத்திருக்கிறான். நிறுத்தித்தான் வைத்திருக்கிறான்! யாருக்காக? அதுதான் தெரியவில்லை.

ஐந்து வயதுப் பச்சைப் பாலகனாகப் பள்ளிக்கூடத்திற்குக் காலடி எடுத்து வைத்த சில நாட்களிலேயே இரண்டாம் வகுப்பு ஆசிரியர்

பக்கத்து வகுப்பில் கற்பிக்கும்போது பின்னால் நின்று அவதானித்ததும், வீட்டிற்கு வந்து அவர் கேட்ட கணக்குகளை அம்மாவிடம் கேட்டுத் தொல்லைப் படுத்தியதும், மேலே போகப்போக எல்லா வகுப்புகளிலுமே அவனது அபாரமான திறமையைக் கண்டு பாடசாலையே வியந்ததும், க.பொ.த. சாதாரண பிரிவில் படித்துக்கொண்டிருக்கும்போது, அவனது ஒரே உறவாக இருந்த அம்மா இறந்துவிட்டதும், சரியான மருத்துவ அவதானிப்பு இல்லாமல்தான் அம்மா இறந்தார் என்ற உண்மையால், எப்படியும் ஒரு டாக்டராக வரவேண்டும் என்ற லட்சியம் மனதில் ஆழமாகப் பதியக் காரணமானதும், லட்சியத்தின் ஆழம் படிப்பில் ஊக்கமாகப் பரிணமிக்க அதன் எதிரொலியாக க.பொ.த. பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் விசேட சித்தி அடைந்து கல்லூரிக்குச் சென்றதும், அங்கே காந்திஜியின் சத்தியசோதனை, டாக்டர் மு.வ.வின் இலட்சிய நாவல்கள் இவை வாசிக்க நேர்ந்ததன் பலனாக லட்சியத்தின் ஆழம் விரிந்து பரந்து பெரிய விருட்சமாக வளர்ந்திருந்த இறுதி வேளையில்... ஒருநாள் எல்லா லட்சியங்களும் பொடிப்பொடியாய்ச் சரிந்துவிழ இரசாயனப் பரிசோதனைக் கூடத்தில் செறிந்த அமிலம் கண்ணினுள் தெறித்துக் கண்களை இழந்துவிட்டதும்... எல்லாமே நேற்று நடந்தவை போல இன்னும் மனத்திரையில் பசுமையாக ஆடுகின்றன.

“நான் நிரந்தரக் குருடனாகிவிட்டேன். வேறு யாருக்கும் பயனில்லாத வாழ்வு வாழவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டு விட்டேன்.” என்ற நிதர்சனமான உண்மையை அவனால் பலகாலம் ஜீரணிக்கவே முடியவில்லை.

கால தேவனின் விரைவான ஓட்டத்திலே மனதிலே பதிந்த பலமான காயத்தின் வலி மறைந்துவிட்டாலும், “வாழ்க்கை எதற்காக? அதில் தாங்க முடியாத நிரந்தரத் துன்பங்கள் ஏன்? இறைவன் கருணாமூர்த்தி என்பது உண்மையானால் நல்ல இதயத்துடன் விரைவாக முன்னேறிய என் பாதையில் ஏன் இந்த நிரந்தரத் தடை?” போன்ற கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க இன்னுந்தான் அவனால் முடியவில்லை.

திடீரென அவன் கையில் திணிக்கப்பட்ட ஒரு நாணயக் குற்றி இளங்கோவின் சிந்தனையைக் குலைக்கிறது. அதைத் தடவிப் பார்த்து அது ஒரு ரூபாய்க் குற்றி என்பதை உணர்ந்துகொண்டு, அதைத்தன் கிழிந்த பொக்கட்டினுள் போட்டுக் கொள்ளு முன்பே, மிக அருகில் கேட்ட ஆங்கில உரையாடல் ஒன்று அவன் கவனத்தைக் கவருகிறது. ஓ! குருட்டுப் பிச்சைக்காரனுக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்கும். தாங்கள் உரையாடுவதை அவனும் புரிந்துகொள்வான் என்று எதிர்பார்த்திருக்க முடியாதுதானே!

“இதோ பார் குமார்! இந்தக் குருடனுக்கு நான் ஏன் இப்போது ஒரு ரூபா கொடுத்தேன் என்று நினைக்கிறாய்?” ஒரு குரல் இது.

“இதில் என்ன புதுமை? அவனது பரிதாபகரமான நிலையைக் கண்டு அநுதாபம் கொண்டு கொடுத்திருப்பீர்கள். அல்லது கேட் பவனுக்குக் கொடுப்பது புண்ணியம் என்ற நம்பிக்கையில் கொடுத்திருப்பீர்கள்” இது வேதனையும் விரக்தியும் கலந்து ஒலித்த இளவயதுக் குரல்.

“அதுதான் இல்லை. இவன் என்னிடம் எதுவும் தரும்படி கேட்கவில்லை என்பதை நீ கவனிக்கவில்லையா? இதே இடத்தில் தொடர்ந்து ஆறு ஏழு வருடங்களாக இவனை நான் பார்த்திருக்கிறேன். நீ இன்று மட்டும் இவனை ஒரு முறை அவதானித்துப் பார். அத்துடன் உன்னுடைய நிலையை இவனுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள். சோதனையில் சித்தியெய்தவில்லை என்பதனால் நீ,

“நான் ஏன் இன்னும் இவ்வுலகில் வாழவேண்டும்?” என்று வேதாந்தம் பேசுகிறாயே! உனக்கு இவனைக் காட்டுவதற்காகவே உன்னை இங்கே கூட்டி வந்தேன். உனக்குச் சோதனையில் சித்தி என்ற பெயர் மட்டும் தான் இல்லை. இவனுக்கோ... உறவினர் இல்லை. நண்பர் இல்லை. வீடும் இல்லை. வாசலும் இல்லை. அனைத்திற்கும் மேலாக இந்த உலகத்தைப் பார்ப்பதற்குக் கண்களே இல்லை. இருந்தாலும் இன்னும் அவன் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கிறான். பஸ்ஸிற்கு மணிக்கணக்காகத் தூங்கி அலுத்துப்போய் நிற்கும் ஆயிரமாயிரம் இதயங்களுக்குத் தன் இசையினாலே நிறைவு தருகிறான். தனக்காக மட்டும் வாழ்வதனால் அவனுக்கு வாழ்வில் ஒன்றுமே இல்லை. ஆனால் அவன் மற்றவர்களுக்காக வாழ்கிறான். இந்த நிலையில் இருக்கும் இவனைப் பார்க்கிறபோது - இவனைப் பற்றிச் சிந்திக்கிறபோது - உன் மனதில் ஒருவித அமைதி ஏற்படவில்லையா? உன்னை இறைவன் இவ்வளவு உயர்ந்த நிலையில் வைத்திருப்பதற்காக அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று தெரியவில்லையா? இப்போது சொல் குமார்! அவன் மீது அநுதாபப்பட்டா நான் பணம் கொடுத்தேன்? இல்லை. நிச்சயமாக இல்லை. அவனைப் பார்க்கிறபோது எங்கள் மனதில் ஏற்படுகிற அமைதிக்காக - இந்த நிலையில்கூட நாங்கள் வாழ்வுடன் போராடிக்கொண்டிருக்கிறோமே! இதனுடன் பார்க்கும்போது உங்கள் துன்பம் எவ்வளவு சிறியது? என்று எமக்கு ஆறுதல் கூறுவதுபோல் அவன் அமர்ந்திருப்பதற்குக் கூலியாக - இவற்றிற்காகத்தான் கொடுத்தேன். இது பிச்சையல்ல குமார்! இவ்வளவு கஷ்டத்திற் கிடையிலும் தன்னைப் பற்றி மட்டும் நினைத்து, வெறுமையாகிவிட்ட தன் வாழ்வை அழித்துக்கொள்ளாமல், மன வலிமையுடன் வாழத் துடிப்பதற்காக - மற்றவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருப்பதற்காக - அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சன்மானம் அது.”

அவர்கள் பேசிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களது உரையாடலின் ஒலி மெதுவாகத் தேய்ந்து இப்போது

கேட்காத தொலைவிற்குப் போய்விட்டது. அதே நேரத்தில் இளங்கோவின் மனதில் அது ஒரு புதிய உற்சாகத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. அதுதான் இத்தனை வருடங்களாக அவன் இதயம் கேட்டுக்கொண்டிருந்த கேள்விக்கான பதில் - மிக அருமையான பதில் கிடைத்துவிட்டதே! எப்போதும் மேலே - தனக்கு மேலே - இன்னும் மேலே உள்ளவர்களைப் பார்த்து ஆசைகளை வளர்த்துக் கொள்ளும் அவா நிறைந்த மனிதன், துன்பங்களும் தோல்விகளும் ஏற்படுகிறபோது கீழே பார்த்து ஆறுதலும் அமைதியும் அடையச் சில மனிதர்கள் தேவையல்லவா! அந்த அமைதியை அனைவருக்கும் கொடுப்பதுதான் அவனது இலட்சியம்! புதுமையான ஆனால் விதியினால் ஏன் இறைவனால்கூட வெல்லப்பட முடியாத அந்த இலட்சியத்தின் பேரொலி இதயத்தில் எழுந்து ஒலிக்க நிமிர்ந்து உட்காருகிறான் இளங்கோ.

அதோ! "உலகின் முதலிசை தமிழிசையே" என்று அந்தகர் இளங்கோவின் புல்லாங்குழலில் கம்பீரமாய் ஒலிக்கிறது தெய்வீக கானம்.

(1975 மாசியில் சங்கமம் சிறு சஞ்சிகையில் வெளியானது.)

☆ ☆ ☆

11

# கலைகின்ற வேஷங்கள்

அதிபர் என்பவர் எல்லோரையும் மகிழ்விக்கக்கூடிய ஒரு கழைக் கூத்தாடியாய் இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது அவருக்குத் தெரிந்திருந்தாலும், அன்று அவர் செய்த அந்தச் செயல் அவளை உறுத்தத்தான் செய்தது. கல்லூரியில், ஆசிரியர்களின் கூட்டம் நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் - கலந்துரையாடல்கள் நடைபெறுகின்ற வேளைகளில் - ஆசிரியர்களின் வேண்டுகோள்கள் பலவற்றிற்கு அவர் எடுத்தெறியும் இதுபோன்ற பல மறுத்தல்களை அவள் அவதானித்திருந்தாலும், இது போன்றதொரு மங்கள நாளில், இத்தனை மனிதர் முன்னிலையில், இந்தத் தீர்க்கமான மறுப்புத் தன்னை உதாசீனம் செய்தது போன்றதொரு உணர்வையே அவளிடம் ஏற்படுத்து கிறது.

திருமணம் நிறைவேறிய அந்த இறைவனின் சந்நிதியில் மிக லாவகமாய், அடுக்கடுக்காய், பலர் அறுகரிசி எடுத்துக் கொண்டிருக் கின்றனர். அந்த ரம்மியமான, மனதை அள்ளும் சூழ்நிலைக்கு ஒரு கறை ஏற்படுத்துவது போல் - அவள் முற்றிலும் எதிர்பாராத விதமாய் - அவர்களை அறுகரிசி எடுத்து ஆசீர்வாதம் செய்ய அதிபர் மறுத்துவிட்டார். அவள் தந்தை ஒன்றுக்குப் பலமுறை கேட்டும் அவர் மிக மூர்த்தண்ணியமாய் மறுத்துவிட்ட காரணம் அவளுக்கு விளங்குவது போலவும் விளங்காதது போலவும் இருக்கிறது.

பக்கத்தில் அன்புப் பிரவாகம் ஊற்றெடுத்து ஓடுவதுபோல் கதைகள் பல கூறி அவளை ஆட்கொள்ளும் முரளி இருக்கின்ற எக்களிப்பில், இந்தக் குமுறலை அவள் உடனே மறந்துவிட்டிருந்த போதும் அதிபர் மணமக்களிடம் விடைபெற வந்தபோது அது ‘பளிச்சென’ நினைவுக்கு வருகிறது.

“கடைசியில் நீங்கள் எங்களை ஆசீர்வதிக்காமல்தான் போகப் போறீங்க போல இருக்கு...”

ஏதோ ஒரு ஆதங்கத்தில் வெள்ளை உள்ளத்துடன் நிஷ்கபடமாய் அவள் கேட்டுவிட்டாள்.

"சீ... சீ... நீங்கள் தவறாய் நினைக்கப்பிடாது ரீச்சர்... எனக்கு ஒரு ஆசௌசம் இருக்கு... அதுதான் தயங்கிறன்... அறுகரிசி எடுத்தால்தான் ஆசீர்வாதமே? என்ரை ஆசீர்வாதம் எப்பவும் உங்களுக்கு இருக்கும்தானே... அப்ப நேரமாகுது... நான் வரப்போறன்..." என்று பட்டும் படாமலும் கூறிச் சமாளித்து அவர் விடைபெறும் போதும்,

"கோயிலுக்கு வரத் தடை செய்யாத ஆசௌசம் அறுகரிசி எடுக்கத்தான் தடை செய்கிறதோ?" என்ற முரளியின் கேள்விக்கான பதில் அவளுக்குத் தெரியவில்லை. அவரது செயலுக்குள் 'ஏதோ ஒன்று' ஒளிந்து கொண்டிருப்பது அவளுக்கு மெதுவாகப் புரிகிறபோதும் அவள் சுதாரித்துக் கொள்கிறாள்.

தூரத்தே சென்று தன் காரில் ஏறிக்கொள்ளும் அதிபரின் மிடுக்கான நடையும், கம்பீரமும், அவர் அணிந்திருக்கும் மெல்லிய சருகைக் கரைப் பட்டுவேட்டியும், அதனை அணிந்திருக்கும் நேர்த்தியும், கனமாகி முறுக்கேறி உயர்ந்து வளர்ந்திருந்த அந்த உடலும், விபூதி சந்தனம் பிரகாசிக்கும் நெற்றியும், எல்லாமே அவருக்கு ஒரு தனியான பிரபையைத் தந்து மலர்வித்திருந்தன. அவள் கல்லூரியிலும் அவதானித்திருக்கிறாள். அவருக்கு யாரையாவது ஒரே அடியாகப் பிடித்துப்போகும். அல்லது ஒரே அடியாகப் பிடிக்காமலும் போகும். அந்த வகையில் ஒருவேளை முரளியை அவருக்குப் பிடிக்கவில்லையோ? பிடிக்காவிட்டாலுந்தான் என்ன? அவள் அவரது கல்லூரியின் ஆசிரியை என்பதற்காகவாவது ஒரு சம்பிரதாயத்திற்காவது அறுகரிசி எடுத்திருக் கலாமே!

திருமணத்தின் பின் தேன்நிலவு என்ற பெயரில் ஒரு வாரம் கணவனின் அன்பில் கரைந்து, கிறங்கி, லயித்து, மகிழ்ந்து, மிதந்தவள் கல்லூரிக்குப் போகவில்லை.

அடுத்த திங்கட்கிழமை அவள் போனபோது சீதா ரீச்சர் கேட்டாள். "எப்பிடிப் புதினங்கள்? அண்டைக்கு உங்கடை கலியாண வீட்டிலை அதிபர் அறுகரிசி எடுக்க மறுத்திட்டாராமே?"

அவள் அதைக் கேட்ட தோரணையில் அதன் காரணம் சீதா ரீச்சருக்குத் தெரியுமா தெரியாதா என்று புரியாத குழப்பத்தில் அவள் சொன்னாள்,

"அதுதான் எனக்கும் விளங்கேல்லை... அப்பா திருப்பித் திருப்பிக் கேட்டும்... நானே கேட்டும்கூட மனிசன் எடுக்கேல்லை..."

சீதா ரீச்சரின் கண்கள் விரிந்து இதழ்க் கடையில் நளினமாகத் தோன்றிய மெல்லிய முறுவல், அவளுக்குக் காரணம் தெரியும் என்பதை ஊர்ஜிதம் செய்தபோது, அதை அறிந்துகொள்ளும் ஆவலில் அவள் கேட்டாள்,

"ஏன் சிரிக்கிறியள்? உங்களுக்குக் காரணம் தெரியும்போலை இருக்கு"

"எனக்கு மட்டுமே தெரியும்? எல்லோருக்கும் விளங்கியிருக்கும். நீங்கள் ஒரு குழந்தைப் பிள்ளை மாதிரி... உங்களுக்குத்தான் விளங்கேல்லை."

அது என்னவென்று அறிந்துகொள்ளும் மிகைப்பட்ட ஆவலில் அவள் திடீரென்று கேட்டாள்.

"சரி... விளங்காத எனக்கு விளக்கமாச் சொல்லுங்கோவன்..."

"வேறை ஒண்டுமில்லை. இது சாதிப் பிரச்சினை. உங்கடை முரளியின்ரை ஆட்கள் சாதி குறைவாம். அதனாலை மாப்பிள்ளை பக்கம் அறுகரிசி எடுத்த பிறகு, தான் எடுக்கிறது மதிப்பில்லையாம்... தன்னை முதல் கேட்டிருந்தாலாவது பரவாயில்லையாம்..."

"இப்பிடி யார் சொன்னது?"

"அதிபர்தான் சொன்னவர்."

இருந்தாற்போல் யாரோ உள்ளத்தில் சுறுக்கென்று குத்தியது போன்றதொரு உணர்வில் அவள் மனம் விக்கித்துப் போகிறது. அவள் இக் கல்லூரிக்கு வந்து சில வாரங்களே ஆகியிருந்தபடியால், வேளாளருக்கிடையிலேயே இப்பிடி ஒரு பேதம் இன்னும் காட்டப்படும் குழப்பம் நெடுநேரம் நிலைத்திருந்து சிந்திக்க வைக்கிறது. "குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று பாரதி கனவு கண்டு இத்தனை வருடங்களின் பின்னர் இதுபோன்ற விஷயங்களில்கூட நுணுக்கம் பார்ப்பதாலேயே தனது 'பெரிய மனிதத் தன்மை' நிலை கொள்வதாய்க் கனவுகாணும் ஒரு மனிதர்... எங்கள் சமுதாயத்தில் இருக்கிறாரா?

அந்த நிகழ்ச்சி ஏற்படுத்திவிட்ட கீறலின் பின் அவள் அதிபரின் நடவடிக்கைகளை மிக உன்னிப்பாக நோட்டம்விடத் தொடங்கினாள்.

தன் வீட்டிற்கு ஒருநாள் வந்திருந்த அதிபர் தான் கொடுத்த தேநீரை 'விரதம்' என்று சொல்லிப் பருகாததைப் பற்றிக் கனகா ரீச்சர் ஒருநாள் சொன்னதை மனதிலே பதிந்துகொண்டாள்.

'தடித்த சாதி' என்ற பரிமாணத்திற்கு அமையாதபடியால் அதிபர் தன் மகளுக்கு வரும் திருமணப் பேச்சுக்களையெல்லாம் தட்டிக் கழித்துவிடுகிறார் என்று நடேசு மாஸ்டர் இன்னொரு நாள் சொன்னதையும் அவதானித்துக்கொண்டாள்.

மிகைப்படுத்தப்பட்ட சாதி உணர்வு அவரது பல செயல்களிலும் இழையோடி அவர் ஒரு சாமான்ய மனிதரிலும் உயர்ந்தவர் என்ற எண்ணத்தை அவருக்குள்ளேயே ஏற்படுத்தி விட்டிருப்பதை அவள் கண்காணித்துக்கொண்டாள்.

அன்று ஓய்வுநாள்தானே என்று முரளியும் அவளும் நெடுநாள் கவனிக்கப்படாமல் இருந்த தமது பனங்காணியைப் பார்க்கச் சென்றனர். மழை இடை இடையே விட்டு விட்டுச் சன்னமாகத் தூறிக் கொண்டிருந்தாலும், கரிய நெடுந் தூண்களாய் வளர்ந்து காற்றில் சத்தம்போட்டு அசையும் பனைகளைப் பார்ப்பதில் அவளுக்கு என்றுமே அலாதிப் பிரியம் உண்டு. பனங்காணியின் நடுவிலே தனியாய் ஒரு குடிசை கட்டி வாழ்ந்து, அந்தக் காணியையும் கவனித்துக் கொள்ளும் கந்தனைக் கண்டு அவனுக்கு ‘இனாம்’ கொடுக்கும்போது அவன் முகத்தில் தோன்றும் மகிழ்வையும் மலர்ச்சியையும் பார்ப்பதில் அவளுக்கு இன்னும் அதிகமான பரவசம் ஏற்படும். அதற்காகவே அன்று அவர்கள் குடிசையை அண்மித்தபோது கந்தனின் நாய் வேகமாக ஓடிவந்து குரைத்து அவர்களை முன்னேற விடாமல் தடை உத்தரவு போட்டது. அதனால் சிறிது தூரத்தில் நின்றே முரளி கூப்பிட்டான்.

“கந்தண்ணை... கந்தண்ணை...!”

பலமுறை சத்தமாக அழைத்த பின்னர், உள்ளே இருந்து வள்ளிதான் ஓடிவந்தாள்.

“அப்பு வெளியிலை போட்டார். நாளைக்கு வந்து சந்தியுங்கோவன்...”

சொல்லிக்கொண்டே வெளியில் வைக்கப்பட்டிருந்த மண் பானையில் ஒரு செம்பு நீர் வார்த்துக் குடிக்கிறாள் வள்ளி.

வள்ளியின் குரலில் தெரிந்த பதட்டம் அவர்களை அகற்றிவிட முயற்சி செய்வதுபோல் ஒலித்தாலும்,

“வந்ததுதான் வந்திட்டம் கந்தனைக் கண்டுகொண்டு போவம்...” என்ற நினைவிலும், தூற்றலடிக்கும் மழைக்குச் சற்று ஒதுங்கி நின்று ஆறுதல் பெறுவோம் என்ற உணர்விலும் கந்தனின் குடிசைத் தாழ்வாரத்தை முரளியும் அவளும் அண்மித்தபோது, எதேச்சையாய் அவள் கண்கள் குடிசையினுள் செல்கின்றன.

அந்த இடத்திற்கு மிகவும் பரிசயமானவர் போல் ஓலைப் பாயில் காலை மடக்கி அமர்ந்து, பிளாவைக் கையில் ஏந்திய சுகானுபவத்தில் வெளியே வெறித்துக்கொண்டிருக்கிறார் அதிபர். முக்கால்வாசி குடித்து முடித்த நிலையில் அவர் அருகே கிடக்கும் தேநீர்க் ‘கிளாஸ்’ ஒன்று அந்தரங்கத்தில் அவர் சாதியை ஒழித்துவிட்டவரே என்பதைப் பறை

சாற்றுகிறது. அதிபருக்குச் சிலரை ஒரே அடியாகப் பிடித்துப்போகும் என்பது ஏனோ இச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு நினைவு வருகிறது. அவளின் தீட்சண்யமான பார்வையைத் தாங்கமுடியாமல் அவர் கண்கள் நிலத்தை முத்தமிடுகின்றன.

உள்ளுக்குள் ஒரு மனதால் சாதியை அந்தரங்கத்தில் ஒழித்துவிட்ட நல்ல மனிதனாய்.. வெளியில் வேறொரு மனிதனாய் நுணுக்கங்களில் நுணுக்கம் பார்க்கும் தன்மை தனது அந்தஸ்தை உயர்த்தும் என்ற நம்பிக்கையுடைய பெரிய மனிதனாய்... நடமாடும் அவரின் முரண்பாடு அவருக்கே தரிசனமாகிறதா?

இந்த விடயம் இவருக்கு மட்டும் சொந்தமானதா? சமுதாயத்தின் போக்கில் எற்றுண்ட ஒரு தனிமனிதப் பிரதிநிதிதானே இவர்! அவள் மனம் அவருக்காக ஒரு முறை விம்முகிறது.

(சுடர் 1979 ஆவணி இதழில் பிரசுரமானது.)

☆ ☆ ☆

12

# மனித சொரூபங்கள்

அந்தக் கூட்டுறவு வைத்திய மனையின் வாயிலை என் கார் அடைந்தபோது தெருவில் நிலைத்திருந்த விழிகளை அகற்றி நேரத்தைப் பார்த்துக்கொண்டேன். இரவு 11-30 மணியாகின்ற இந்த அகால வேளையில் வாசலில் அரைத் தூக்கத்தில் வழிந்து கொண்டிருந்த காவலன் என்னைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத பரபரப்பில் நிமிர்ந்து படபடப்புடன் வாயிலைத் திறந்து விட்டான். அவசர அவசரமாகக் காரை நிறுத்திவிட்டுக் கையில் வீசிய மார்பு காட்டியுடன் இந்த 'வார்ட்'டை நோக்கி நடக்கும்போது, மாலையில் அநுமதிக்கப்பட்டு, உயிருடன் போராடிக்கொண்டிருந்த அந்த நோயாளியின் நினைவே நெஞ்சில் பளிச்சிடுகிறது. நான் சொல்லிவிட்டு வந்தது போன்றே தாதி நாடித்துடிப்பை மணித்தியாலத்திற்கு ஒருமுறை பார்த்துக் குறித்து வைத்திருப்பாள் என்ற எதிர்பார்ப்புடன் அங்கே நுழைந்தபோது, அந்த நோயாளி இளைஞரின் தாய்தான் என்னை எதிர்பார்க்காத மகிழ்வில் பதறிக்கொண்டு ஓடிவந்தாள்.

"நல்ல நேரத்திலை தெய்வம் மாதிரி வந்திட்டீங்க டொக்டர். நாடித்துடிப்பைக் காணேல்லை. ஏதாவது செய்யுங்கோ. என்ரை ஒரே பிள்ளையைப் பறிகொடுத்திட்டு என்னாலை உயிரோடை இருக்க முடியாதம்மா..." என்ற அத்தாயின் பரிதாபமான கதறல் ஒலி நடந்துகொண்டிருந்த என்னை ஓடவே வைத்துவிட்டது. ஒரு இளைஞன் அநியாயமாக இறக்க விட்டுவிடலாமா? கூடாது!

நோயாளிக்கு அருகில் தாதியோ அல்லது வேறு உதவியாளர் யாருமோ இல்லாதது எனக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் அதைப்பற்றி எல்லாம் விசாரணை செய்துகொண்டிருக்கும் நேரம்... அவகாசம்... இப்போது கிடையாது என்பதை உணர்ந்தவளாய் விரைந்து நோயாளியைப் பரிசோதிக்கிறேன். சுவாசம் வெகுவாகக் குறைந்து விட்டிருந்தாலும் உயிர் இன்னும் பிரியவில்லை என்பது எனக்குப் புலனாகிறபோது உள்ளார்ந்த குமுறலுடன் சுற்றுமுற்றும் பார்க்கிறேன். செயற்கைச் சுவாசம் அளிப்பதற்குத் தேவையான ஆயத்தங்களை என் உடல் விரைந்து செய்து கொண்டிருக்கும்போதே அத் தாயைப் பார்த்து,

"இங்கே இருந்த 'நர்ஸ்', 'அட்டென்டன்ற்' எல்லாம் எங்கே போயிட்டினம்?" என்று கேட்கிறேன்.

"அந்த அறையிலே ஒரு ஆளும் இங்கை ஒரு ஆளுமாய்ப் படுத்திட்டினம் அம்மா..."

"நீங்க போய் அவையளை எழுப்பேல்லையா!"

"எழுப்பினன் அம்மா, ஒன்றுக்குப் பலமுறை போய் எழுப்பினன்... "உயிர் போகாதெணை, சத்தம் போடாமல் கிடவெணை" என்று ஏசி அனுப்பிட்டினம். எழும்பி வரேல்லை".

குமுறி வெடித்துக் கொண்டிருந்த அத்தாயின் அழுகை ஓலம் தற்போது குறைந்து விம்மல்களாகவும், முனகல்களாகவுமே வெளிவந்து கொண்டிருக்கிறது. மனிதர்களுக்கு அயர்வு வருவது இயற்கையே என்பதும், மனிதர்கள் யந்திரங்கள் அல்ல என்பதும் உண்மைதான் என்றாலும், மனிதனின் உயிருடன் விளையாடுகின்ற வேளைகளில் 'அயர்வு' என்பதை என் உள்ளம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. செயற்கைச் சுவாசமும் தேவையான ஊசி மருந்தும் கொடுக்கப்பட்டு, நோயாளி இனிமேல் உயிர் தப்பிவிடுவான் என்ற நிலை வரும் வரையில் நித்திரையானவர்கள் எழுந்து வரவில்லை. நோயாளி சலனமில்லாமல் அயர்ந்து தூங்கும்பொழுது, நான் பக்கத்தில் இருந்து கவனித்துக் கொள்வதை வழிந்தோடும் கண்ணீர்ப் பெருக்குடனும் நன்றியுடனும் அத்தாய் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

நேரம் அதிகாலை நாலு மணியாகிற போதுதான் ஏதோ அரவத்தினால் எழுந்துவிட்ட தாதி என்னைக் கண்டு சற்றுத் தடுமாறியபடியே,

"டொக்டர்... நீங்க..."

என்று இழுத்தவள் என் முகத்தைப் பார்த்துத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். அப்படி ஒரு நிகழ்வு என் வாழ்நாளில் ஏற்பட்டதில்லை எனும்படி என் விழிகள் சிவந்து உடல் படபடத்துக் கொண்டிருந்தது. என் கோப மெய்ப்பாடு எல்லைமீறி வார்த்தைகள் நெருப்பாய் வெளிவந்தன.

"யூ... கெட் அவுட் பிரம் திஸ் பிளேஸ்... இவ்வளவு நேரமும் செய்த மாதிரி உன்னுடைய வேலையையும் சேர்த்துச் செய்ய என்னாலை முடியும். உங்களைப் போலை ஆக்களை நம்பி வாழவேண்டிய இளந்தமிழ் உயிர்களைப் பலி குடுக்க என்னாலை முடியாது. ஐ சே... ஐ... டோன்ற் நீட் யூ... கெட்... அவுட்...".

அந்தக் கட்டடமே அதிரும்படி உரத்துக் கத்திவிட்ட என் குரல் அவளைச் சிறிதே அதிர்வுற வைத்தாலும், சில விநாடிகளில் சுதாரித்துக் கொண்டு பேசாமல் வெளியேறிப் பக்கத்து 'வாட்' தாதியுடன் கதைக்கச் சென்றுவிட்டதை நான் அவதானிக்கத் தவறவில்லை.

"எங்களுக்கு இவர்கள் அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் கொண்டு பயந்து பணியாற்ற வேண்டியதில்லை. ஆனால் அதற்காக... மற்றவனின் உயிரைப் பற்றியே கவலைப்படாத இந்தப் போலித் தன்மையும் பம்மாத்தும்..." என்னால் இலகுவில் ஜீரணிக்க முடியவில்லை.

அடுத்த நாள் நான் உள்ளே நுழைந்தபோது, 'முற்போக்கு' என்ற தலைப்பில் யாரோ எழுதிய புத்தகத்தை வைத்து வாசித்துக் கொண்டே ஸ்டைலாகக் காலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருந்தாள் என் தாதி. என்னையோ என் வரவையோ இலட்சியம் செய்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை.

என்னுடன் எதிர்ப்புக்கொடி காட்ட ஆரம்பித்துவிட்டாள், என்பதை மெதுவாகப் புரிந்துகொண்டேன். முற்போக்கு...?

மனிதனுக்கு மனிதன் உள்ள வாத்சல்யம், மன நெகிழ்வு, ஒரு மனிதனின் துயர் களைய இன்னொரு மனிதன் செய்யும் தியாகம், இதைப் போன்ற அடிப்படை உணர்ச்சிகள் எல்லாம் மரத்துப் போவதுதான் முற்போக்கா? நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் சிந்திக்கிறேன். சிந்தனையின் நடுவில் நானே சகல வேலைகளையும் செய்துகொள்கிறேன். தாதியின் வேலைகள் பலவற்றை நானே செய்து கொள்வதை எல்லா நோயாளிகளும் அதிசயத்துடன் பார்க்கின்றனர்.

அடுத்த நாள் அந்த வைத்திய மனையின் நிர்வாகசபைத் தலைவர் என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

"நீங்க எங்கடை நேர்சஸ், அற்றெண்டன்ற்ஸ் மற்ற ஸ்ராவோடை எல்லாம் வலு ஸ்டிறிக்ற் ஆ இருக்கிறீங்களாம். அது பிழை எண்டு நான் சொல்லேல்லை. ஆனால் இந்தக் காலத்திலை இப்பிடி இருக்கேலாது. ஒரு மாதிரி மற்றவையோடை சேர்த்து அவையும் விரும்பக் கூடியதாய்த் தானே நடக்கவேண்டி இருக்கு..." என்று குழைந்தார்.

"நான் மனித உணர்வுகளை மதிப்பவள்தான். மனிதனின் குறைபாடுகளையும் அறிந்தவள்தான். ஆனாலும் இப்படியான கவலையற்ற கடமை தமிழனின் குணமாக மாறிவருவதை நான் முற்றாக வெறுக்கிறேன்..." என்றேன்.

"அது சரி டொக்டர்... இந்த மைனர் ஸ்ராவ் எல்லாம் கூடி... யூ நோ... டொக்ரேஸ் தங்களை அடக்கி ஆள்றதையும் பேஜண்ட்ஸுக்கு முன்னாலை தங்களை அவமதிக்கிறதையும் எதிர்த்து ஒரு நாள் "ரோக்கின் ஸ்றைக்' செய்யப் போயினமாம். எல்லாம் வீண் தொல்லைதானே!" என்றார். என் இயல்பான கூர்வுணர்ச்சி என்னை விறைப்படைய வைத்தது. அப்படியானால்... அவர்களின் வேலை நிறுத்தம்பற்றி இவரும் பயப்படுகிறாரா? அல்லது நான் செய்தது தவறு என்று எல்லோரும் சேர்ந்து கோஷமிடுகிறார்களா?

"அப்போ அவர்களைப் போல நானும் இரவில் நன்றாக நித்திரை கொண்டுவிட்டு... 'சாகிறவன் சாகட்டும்' என்று விட்டிருக்க வேண்டுமா?" என்று கேட்டேன்.

"ஐ டோன்ற்... சே தட்... பட் யூ... நோ..." என்று விழித்தார்.

நான் விறைப்புடன் வெளியேறிவிட்டேன். வாரங்கள் பல ஓடின. என் குணத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. சந்தர்ப்பத்திற்குத் தக்கதாய் என் நடத்தையை மாற்றிக்கொள்ள என்னால் முடியவில்லை. எதையும் எப்போதும் முழுநிறைவுடன் செய்யும் வலுக்கட்டாயப் போக்கு என்னிடம் இருப்பதைப் போலவே எல்லோரிடமும் இருக்க வேண்டும் என்பதில் வலு கண்டிப்பாகவே இருப்பேன். வேலை நேரத்திற்குப் பிந்தி வருபவர்கள், விரைவாக வேலை செய்யாதவர்கள், இரவு வேலை நேரத்தில் தூங்குபவர்கள், நோயாளிகளுடன் எரிந்து விழுபவர்கள், கவலையீனமாக இருப்பவர்கள்... எல்லாருக்குமே நான் ஒரு பிரச்சினை தான்.

ஒரு நாள், வெயிலில் காத்திருக்கம் நூற்றுக் கணக்கான நோயாளிகளுக்கிடையில் தனது மனைவியை ஒழுங்கு மீறி, பிரத்தியேக சலுகை தந்து, முதலில் பார்க்க நான் மறுத்துவிட்டதில் ஒரு ஆண் தாதிக்கும் எனக்கும் பெரிய வாக்குவாதமாய்ப் போய்விட்டது.

"இங்கை வேலை செய்யிற எங்கடை குடும்பத்துக்கு இந்த ஆஸ்பத்திரியிலை சலுகை இல்லையெண்டால்..." என்று அவன் தொடங்க நான் இடைமறித்தேன்.

"நீங்கள் இங்கே வேலை செய்வதால் உங்களிடம் ஆஸ்பத்திரிக் காசு வாங்காமல் விடலாம். அதுதான் சலுகை. காலை முதல் காத்திருக்கும் நோயாளிகளை ஒழுங்கு மீறிக் கவனிப்பது குற்றம். அது சலுகை அல்ல. மிகக் கடுமையான, அவசரம் பார்க்க வேண்டிய நோய் என்றால் முதலிடம் கொடுப்பேன்..." அவன் திருப்பிக் கதைக்க முடியாத கண்டிப்பு என் வார்த்தையில் இருந்தது. உள்ளுக்குள் மறுகிக்கொண்டு போய்விட்டான். இவன்தான் சிற்றூழியர் சங்கத் தலைவன் என்பதும் எனக்குத் தெரியும். நான் எதிர்பார்த்தபடியே இரண்டு நாளில் நிர்வாக அதிபர் மறுபடியும் என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

“ஐ ஆம் சோ சொறி டொக்டர்... ரு சே... திஸ்... நீங்கள் ஒரு கடமை தவறாத, நேர்மையான, கஷ்டப்பட்டு உழைக்கிற டொக்டர் என்பது எனக்குத் தெரியும். ஐ நோ இட்... இருந்தாலும் இங்கே உள்ள எல்லா ஊழியருமாகச் சேர்ந்து உங்களுக்குக் கீழை பணியாற்ற முடியாதெண்டு விண்ணப்பம் செய்திருக்கினம். தாங்கள் எல்லாரும் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாகப் பயமுறுத்தி யிருக்கினம்...” என்று தயங்கியபடியே அவர்களின் தீர்மானத்தை என்னிடம் காண்பிக்கிறார். நான் அதைப் படித்துக் கொண்டிருக்கும் போதே,

“ஐ வுட் அட்வைஸ் யூ ரு... றிசைன் திஸ் போஸ்ட்... நீங்கள் சொந்தமாய்க்கூட ஒரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்சரி ஆரம்பிக்கலாம் தானே” என்றார்.

எதையும் முழு நிறைவோடு செய்யும் வலுக் கட்டாயப் போக்கு அமைதியைப் பெறுவதில்லை என்று வைத்தியக் கல்லூரியில் உளத்துறைப் பேராசிரியர் போதித்தது நினைவுக்கு வந்து மறைகிறது.

வேலையில் வருகின்ற இடமாற்றம் இதயம் நின்று விடுவதற்குத் தேவையான முந்நூறு அதிர்ச்சிப் புள்ளிகளில் இருபத்தைந்தைப் பெற்றுத் தருவதாக எங்கோ வாசித்ததும் ஞாபகம் வருகின்றது. அந்த இருபத்தைந்து புள்ளிகளையும் பெற்றுக்கொண்டு அந்தரங்கமாய் உடைந்து நொருங்கிய எத்தனையோ விதமான மனோராஜ்யச் சிதைவுகளையும் சுமந்து கொண்டு, கடமையை நிறைவுறச் செய் தமைக்கும், மற்றவர்களைக் கடமையைச் செய்யும்படி நிர்ப்பந்தித் தமைக்குமாய் எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மௌனமாக ஏற்றுக்கொண்டு மனித சொரூபங்கள் சிலவற்றைத் தரிசித்துவிட்ட திருப்தியில் என் கார் அந்த மருத்துவமனையை விட்டு வெளியேறி விரைந்து கொண்டிருக்கிறது.

(1979 வைகாசி சுடர் இதழில் பரிசுக் கதையாகப் பிரசுரமானது.)

☆ ☆ ☆